

மணற்கோவில்
சு.வே

# மணற்கோயில்

## உருவகக் கதைகள்

[illegible]

19-12-99

சு.வே.



மித்ர வெளியீடு

சிட்னி - சென்னை - மட்டக்களப்பு

MITHRA BOOKS
ISBN 18766 26 062

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review as permitted under the Copyright Act, No Part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form, or any means, electronic, mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are
published by ***Dr. Pon. Anura***

Editor - in-chief
***ESPO***

First Edition
***16th April 1999***

**MANAR - KOIL**
Stories
by
***Su. Ve.***

Cover Design: ***Trotsky Marudu***
Illustrations: ***Veera Santhanam***

**Made in India by Mithra Book Maker**

மித்ர: 27
விலை : 100/=

முதற்பதிப்பு ஏப்ரல் 1999
பக்கங்கள்: 112

தங்கை கண்மணியே,

நீ நிலம்; உண்டி அளித்தலால்.
நீ நீர்; வளம் பெருக்கலால்.
நீ நெருப்பு; புனிதம் நிறைந்தலால்.
நீ காற்று; உயிர்ப்பாய் இருத்தலால்.
நீ ஆகாயம்; மன விசாலத்தால்.

**உனக்கு**

**இது**

**படையல்**

# முன்னீடு

சு.வே. தமிழ் ஊழியத்தில் எனக்கு மூத்தவர்; காலத்தாலும், சாதனையாலும்! இலக்கிய வடிவங்களுள் ஒன்றான உருவகக் கதைகள் எழுதுவதிலும் என் முனைப்புகள் குவிந்திருக்கின்றன. உருவகக்கதை பற்றிய தரிசனம் எனக்குத் தெளிவாகவும் இலகுவாகவும் வாய்ப் பதற்கு உபகாரிகளாய் அமர்ந்தோருள் சு.வே. மட்டுமே ஈழத்தவர் என்பதை நன்றியறிதலுடன் நிதானிக்க முடி கின்றது. இதனால், இந்த முன்னீடு எழுத நேர்ந்துள்ளமையை என் எழுத்து ஊழியத்துக்குக் கிடைத்த கௌரவமாகப் பாராட்டுகின்றேன்.

சடுதியாக, பிறிதோர் உண்மையும் உறைக்கின்றது. ஒரு நூற்றாண்டின் அந்தலையிலும், பிறிதொரு நூற் றாண்டின் நுழைவாயிலிலும்—ஆம், ஒரு யுகசந்தியில்—இந்த முன்னீடு எழுதப்படுகின்றது என்பதுதான் அந்த உண்மை. பிரிவா? நுழைவா? எது பொற்பமானது? அப்படியும் வகுக்க முடியாது. சரியான மதிப்பீட்டுக் கணக்குகளுடன் புதிதுக்குள் நுழைதல் வேண்டும்.

இந்த நூற்றாண்டில், தமிழ் இலக்கியம் பேரெழுச்சி பெற்றது. தமிழின் பயில் முறை—வசனத்திலும் கவிதையிலும் —புதிய போக்குகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப வளைந்தும் நெகிழ்ந்தும் கொடுத்தது. புதிய இலக்கியங்களைப் படைப்பதற்கு ஏற்ற வகையிலே இலக்கியப் படைப்பாளிகள் தமிழை வசக்கி எடுத்தார்கள் எனக் கூறுதலும் பொருந்தும். பொருளிலே எத்தனையோ வகைகள். இவை தொற்றிய வீறும் வீச்சும், புனைவும் விகற்பமும் புதிய சிகரங்களைத் தொட முனைந்தன. தீவிரமான இந்தத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈழத்தின் பங்களிப்பு நிச்சயமானது. தாய்—

சேய் என்கிற சேவக மனப்பான்மை—அன்றேல் மாயை—யிலிருந்து ஈழம் விழித்துக் கொண்டது. ஒன்றேயான உறவுபோலத் தோன்றிய தொப்பூழ் கொடி எப்பொழுதோ துண்டிக்கப்பட்டது என்கிற நிதர்சனம் முழுமையாக உள்வாங்கப்பட்டது. சரிநிகர் சமானமான பங்காளிகளாய், தமிழ் ஊழியத்தினை முன்னெடுத்துச் செல்லும் உரிமத்தினை ஈழத் தமிழர் தம்வசப்படுத்தினர். இஃது அவக்கேடான பாகப்பிரிவினை அல்ல. மாறாக, தமிழ் ஊழியத்திலே உலகப் பரிமாணத்தினைக் கொண்டு வந்து பொருத்தியது. இஃது ஒளிமயமான பக்கம்.

பிறிதொரு பக்கமும் உண்டு. பற்றி இலக்கிய காரரினால் — குருவிச்சை இலக்கியகாரர்களினால் — ஏற்பட்ட அவலம் இது. பழந் தமிழ் இலக்கியக்காரன் தமிழின் படைப்பு வல்லபங்கள் வறண்டுவிட்டன என்கிற மாயையைப் பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகள் வளர்க்க முற்பட்டன. ஏட்டுத் தமிழுக்கு மட்டுமே மகத்துவம் கற்பிக்கும் ஒருவகை மருள். இதனால், படைப்பிலக்கியம் இவர்களுடைய அரவணைப்பை உதறித்தள்ளி, மக்கள் மொழியை ஏட்டு மொழியாக்க உழைத்தோர் பக்கம் சாய்ந்தது. இதனை மார்க்ஸியப் பண்ணையில் விளைந்த ஈழத்தின் புதிய விமர்சகர்கள் இனங்காணுவதிலும், பாராட்டுவதிலும் முந்தி நின்றனர். அந்த அளவிற் சேமமே! பின்னர், பிறழ்வும் விகற்பமும் சோகத்தைக் கொண்டுவந்து சேர்த்தது. ஈழத் தமிழ் இலக்கிய விமர்சகர்களிலே சிலர், புத்திஜீவித வேடப் புனைவுகளுடன் கூத்தாடத் துவங்கினர். தமிழ் இலக்கிய மரபுகளையும் வரலாற்றையும் ஒருக்களித்து, புதியன சாதிக்க விழைந்த மார்க்ஸிய வேதத்தையும், அதே சமயம் ஏகாதிபத்திய வளத்திலே தோன்றிய மேட்டிமையான இலக்கிய விமர்சகர்கள் அறிமுகப்படுத்திய சுவைப்பு அளவுக் கணியங்களையும் துணைப்பற்றினர். அந்நியம் என்கிற கவர்ச்சியிலே, இரண்டுக்குமுள்ள முரண்பாடுகளை

வசதிக்காக மறக்கவும் செய்தனர். தனிச் சிங்கள ஆணைக்குப் பின்தான், ஈழத் தமிழ் இலக்கியத்திலே மக்கள் எழுச்சி தோன்றியது என்கிற மயக்கத்தினை ஏற்படுத்தினர். இந்த எத்தனங்களுக்கும் உள்நோக்கம் இருந்தது. தங்களுடைய இலக்கியப் பிரவேசத்துக்குப் பின்னரே, ஈழ மண்ணிலே, தற்காலத் தமிழ் இலக்கியம் ஆரோக்கியமான பார்வையையும் சரியான தடத்தையும் பெற்றதான மாயையை நாட்டினர். இந்த மாயையின் பரம்பலினால் அவர்கள் உச்ச பதவிகளைச் சுகித்தார்கள் என்பது வேறு. அஃது அவர்கள் பேறு. ஆனால், உண்மை அதல பாதளத்திற்குள் வீழ்ந்தது!. இந்த இருள் மயமான இந்த மறுபக்கம், உண்மைகளை உரியவாறு முன்வைக்க வேண்டிய ஆக்கினையைச் சமகால இலக்கிய வாதிகளுடைய தோள்களிலே அன்றேல் எதிர்கால இலக்கிய விமர்சகர்களுடைய சுமத்தியுள்ளது.

உண்மையின் சத்திய தரிசனத்திற்கு உதவும் முக்கிய ஆவணங்களுள் ஒன்றாக, சு.வே.யின் 'மணற் கோயில்' வெளிவருகின்றது. இந்த இலக்கிய ஆவணம், ஈழத்து இலக்கிய வரலாற்றிலே இதுவரை நவீன இலக்கிய விமர்சன வலோற்காரங்களினாலே மறைக்கப்பட்டிருந்த பல உண்மை களைப் பதிவு செய்யவும் பிரசித்தஞ் செய்யவும் முனை கின்றது. எனவே, புதிய ஞானப் பகிர்வுகளுக்கு வழி கோலு கின்றது.

தமிழ் இலக்கியமும்—தமிழ் ஊழியமும் பண்டித வர்க்கத் தாருடைய ஏகபோகமென யாழ்ப்பாண மண்ணிலே நிலை பேறடைந்திருந்த கட்டித்த வைதீக மரபினை உடைத்தெறிந்து, பண்டிதத் தமிழை, புதியனவான தமிழ்ப் படைப்பிற்கும் சுவைப்புக்கும் ஏற்ற கருவியாகப் புதுக்கியெடுத்த பெருமை பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையைச் சாரும். கந்தபுராண கலாசாரமே யாழ்ப்பாணக் கலாசாரம் என அறிக்கை செய்த அவர், பண்டிதத் தமிழை நெகிழ்த்தி, வசக்கி, யாழ் மண்ணின் இலக்கிய ரஸனையைப் புதிய உச்சங்களை

எய்தச் செய்தார். பண்டிதமணி வகுத்தமைத்த புதிய தமிழ் வசனநடை, புத்திலக்கியப் படைப்புக்கும் பரம்பலுக்கும் ஆரோக்கியமான நுழைவாயிலை அமைத்தது. சி.க.வின் பணி அத்துடன் நின்றுவிடவில்லை. திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மையமாகக் கொண்டு, தமிழிலே மறுமலர்ச்சி இலக்கிய இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்லவல்ல முன்னணி வீரர்களை உருவாக்கினார். அவர் ஊன்றிய வித்தின் இயல்பான ஒரு வளர்ச்சிக் கட்டமாகவே மறுமலர்ச்சி இலக்கிய சங்கத்தைத் தரிசித்தல் முறைமை. மறுமலர்ச்சிச் சங்கத்துடன் இணைந்தும், அதற்கு அப்பாலாகவும் கதைக்கலைப் படைப்பிலும், அதன் உபாசனையிலும் பண்டிதமணியின் நன்மாணாக்கர் இருவர் ஆழத் தடம் பதித்தார்கள். ஒருவர் இரசிகமணி கனக—செந்திநாதன். மற்றவர் 'சு.வே' என இலக்கிய உலகம் அழைத்து மகிழும் சு.வேலுப்பிள்ளை ஆவர். ஈழந் தமிழ்ப் படைப்பிலக்கிய வரலாற்றிலே அவருக்குத் தனி இடம் உண்டு; சிறப்பிடம் உண்டு.

பண்டிதமணி வழி யாழ்ப்பாண மண்ணில் விளைந்த செழுமைத் தமிழைப் படைப்பிலக்கியத்தில் புகுத்திய மூலவர். பண்டிதவர்க்கத்தினரைப் படைப்பிலக்கிய வாதிகளாக அங்கீகாரம் பெறச் செய்த முன்னோடி. மூதறிஞர் இராஜாஜி மெச்சிப் புகழ்ந்த உருவகக் கதைக் கலையின் பிதாமகர்.

சு.வே.யின் இலக்கிய வெற்றி, சங்கச் சான்றோர் போற்றிய மரபுகளின் மெய்ம்மையையும் மீள் உயிர்ப்பையும் யாழ்மண்ணின் வனப்பிலும் வாழ்க்கையிலும் கண்டு ஆனந்தித்தமையாகும். மணற்கோயிலின் நிலைக்களன் யாழ்ப் பாணமே. அதன் தாவரங்களும், பட்சிகளும், இயற்கையும், மானிடரும் புதிய கோலம் பெறுகின்றன. சாமான்யனுக்குப் புலனாகாத அற்புத காட்சிகள். அவை அவர் ஆளுமையில் மகத்துவம் பெறுகின்றன. சங்கத் தமிழ் ஓம்பிய உரியையும்

அணியையும் தற்காலப் படைப்பிலக்கிய ஊழியத்துக்கு ஏற்ற வாகனமாகப் பற்றினார். உவமை விகற்பங்களிலே உந்நதமானது உருவகமெனக் கண்டார். உவமேயமும் உவமானமும் ஒன்றாக ஒருருப் பெற்றது உருவகம் எனத் தெளிந்தார். உருவகம், உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் எனச் சங்கச் சான்றோர் பெருமை பாராட்டிய வற்றையும் அவற்றின் விகற்பங்களையும் தம் வசப்படுத்தி, நவீன தமிழ் இலக்கியத்திற்கு உருவகக் கதை என்னும் வடிவத்தினை வகுத்தமைத்து உபகரித்தார். உருவகக் கதையின் உயிர்ப்பு கற்பனையின் சடைப்பும் மதர்ப்பும் அல்ல. மதம்—மொழி—இனம் கடந்த உண்மையின் உள் ளொளியைத் தரிசிக்கும் எத்தனம். அக்கினியின் தூய்மையே அதன் வடிவம். சொற்களின் நுட்பமும், அவற்றைத் தொடுக்கும் செய்நேர்த்தியும் கலா முழுமை பெறும் படைப்பிலக்கிய வடிவமே உருவகக் கதை. பூடகமாக அதனுட் புதையுண்டு கிடக்கும் உண்மையின் தேடல் அநந்த. எனவே, அதனுட் பயணித்தல் ஆனந்த! "பிறர் நெஞ்சு புகாமையிலும் பார்க்க, எங்கெங்கோவுள்ள எவரெவரோ படைத்தவற்றைத் தழுவாமையும் மொழிபெயராமையும் பிறர் கைப்படாமையும் பிரதி பண்ணாமையுமாகிய விலக்குகளை விலக்கிய சுயமே இத்தாயின் கற்பு' எனச் சு.வே. பிறிதோர் இடத்தில் தமது கற்புப் பற்றிக் கூறியமை மணற்கோயிலுக்கும் பொருந்தும். சு.வே.யின் இக்கதைச் சாதனை ஈழத்து இலக்கியத்துக்குப் பெருமை சேர்க்கும் வரலாறாகும். சிறிய நூல். குறள் நிகர்த்துப் பெருமை சமைத்தது.

- எஸ்.பொ.

தஞ்சாவூர்

19-3-99

## உள்ளே...


கபாடம் திறமினோ ... 11
மணற் கோயில் ... 21
சுதந்திரம் ... 29
மின்னற் கீற்று ... 33
வனமுல்லை ... 36
தொண்டர் இருவர் ... 43
பாழ்நிலம் ... 48
விண்ணும் மண்ணும் ... 54
நிர்விகற்பம் ... 59
இராசகோபுரம் ... 63
பயணம் ... 67
வீடு ... 71
ஏகாதிபத்தியம் ... 74
வரம்புகள் ... 79
பதி ... 85
விடிவெள்ளி ... 89
தரிசனை ... 92
மயக்கம் ... 97
தர்மம் தெரிந்தவர்கள் ... 101
மனக்குருடு ... 103
வெறுங்கோயில் ... 106




# கபாடம் திறமினோ



தமிழிலே வளர்ந்து வருகின்ற புதுத் துறைகளெனக் கருதப்படும் சிறுகதை, நாவல், நவீன மேடை நாடகம், சொல்லோவியம், நடைச் சித்திரம், பலவகைப்பட்ட கட்டுரைகள் முதலியவற்றுக்கும்; மாற்றங்களுக்குட்பட்டு புதுவுருப் பெற்று வரும் கவிதைக்கும் உரிய நல்ல வீரிய வித்துக்கள் பழந்தமிழ் இலக் கியங்களிலே விதைக்கப்பட்டுள்ளன. சங்க கால இலக்கியங்கள் எனச் சிந்திக்கப்படும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறநானூறு முதலியவற்றிலே இத்தகு வீரிய வித்துக்கள் ஆங்காங்கே விதைக்கப்பட்டுள்ளன.

அவ்வித்துக்களிலே இரு பருப்புக்கள் உண்டு. அவற்றுள் ஒன்று நிகழ்ச்சி; மற்றது கற்பனை. அவ்வித்தின் உரிப் பொருளாய், உயிர்ப் பொருளாய், முளை கொள்ளற்கேற்ற மூலக்கூறாய், அங்குரமாய், பெருமரத்தின் தோற்றத்தையும் பண்பையும் தன்னிற் கொண்ட கருவாய்க் கிடப்பது உணர்ச்சி. வித்திலே மரத்தின் தன்மை அமைந்துள்ளமை யாலே வித்தே மரமாகி விடுவதில்லை; வித்தினுள்ளேயுள்ள கடுகத்தனை முளையின் வளர்ச்சி பெற்ற தூல வடிவமே மரம்.

பழந்தமிழ் இலக்கியத்திலுள்ள வித்து கள் முளைத்து வளர்ந்து, ஆர்வலர் பலரும் சுவைத்து மகிழக் கூடிய தூல வடிவங் கொண்டால், அவை சிறந்த சிறுகதை

களாகவோ, நாடகமாகவோ, நாவலாகவோ, புதுக்கவிதை யாகவோ, ஆக்கவியல் கட்டுரையாகவோ அமையலாம்.

அமையலாமேயன்றி, அமையவேண்டும் என்ற விதி இருக்கமுடியாது. அவையேயன்றி, விரிந்து செல்லும் பிரபஞ்சத்தில் எண்ணிலடங்கா வித்துகள் கணந்தோறும் விதைக்கப்படுகின்றன. அவையும் முளைகொண்டு வளர்ந்தால் பலபல புதுத்துறைகள் தோற்றம் பெறலாம்.

இவ்வாறு உணர்ந்து, உருவகக் கதையையும் தமிழ் இலக்கியப் புதுத்துறையெனக் கொண்டால், அக்கொள்கை முழுநிறைவான கருதுகோளன்று. அதன் உருவப் பாங்கில் மனங்கவரத்தக்க புதுமையும் எளிமையும் விளைந்துள்ளதே யன்றி, அதன் உள்ளீடு அல்லது உரிப்பொருள் சங்க காலந் தொடக்கம் புலவர் படைப்புகளில் ஆங்காங்கே பயின்று வந்துள்ளது. இன்னொரு வகையிற் கூறினால், உருவகக் கதையின் வித்து மிகப் பழைமையானது. ஆனால், இன்றுள்ள அதன் தூல வடிவம், உருவம் புதுமையானது; அவ்வளவுதான்.

தொல்காப்பியத்தில் வரும் உவமையியல், தொல்காப் பியர் காலத்தும் அதற்கு முற்பட்ட காலத்தும் வழங்கிய இலக்கிய அலங்காரங்களைக் காட்டுவது; எண்ணக் கருக்களை அழகுபட, சுவைபட விளக்குவதற்கு உவப்பான உத்தி முறைகளில் ஒன்று. பிற்காலத்தில் அணியிலக்கணம் எனப் பகுத்துக் கூறப்படும் பலபல செய்யுள் அலங்காரங்களின் தாய். தாயான உவமையின் சேய்களே ஏனைய அணிகள்; உவமை சிறுசிறு விகற்பம் பெற்று நடந்தபோது வெவ்வேறு அணிகள் ஆயின.

உவமை விகற்பங்களில் மிக உன்னதமானது உருவகம். அதனை உவமையின் முதற்குழந்தை என்றும் கூறலாம். பொருள் அல்லது உவமேயம், உவமானம், இரண்டுக்கு மிடையேயுள்ள பொதுத்தன்மை அல்லது பொதுமை என்றிவ்வாறு பிரித்துணரும் பண்பு உவமையிலுண்டு. பிரித்துணர முடியாதவாறு உவமையும் பொருளும் ‘தாடலை’ போற் கூடி, ஒன்று போல இணைந்திருக்கும் பண்பு உருவகத்தில் உண்டு.

"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து
ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்"

– என்பது தண்டியலங்காரம். அடுத்து, உவமையின் இன்னொரு குறிப்பிடத்தக்க கூறு, உள்ளுறை உவமம்; அது உவமையின் இன்னொரு குழந்தை. உள்ளுறை உவமம் சங்க இலக்கியங்களிலே அகத்திணைப் பாடல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றது. அதனால், அது அகத்திணைச் செய்திகளைக் கூறுவதற்கு உரியது என்ற விதி எழலாயிற்று.

தலைவியோ, தோழியோ, தலைவனோ ஒருவர்க் கொருவர் வேண்டிய சில செய்திகளை வெளிப்படையாகக் கூறுவது நாகரிகமன்றெனக் கருதி, குறிப்பாகக் கூறுவதற்கு உள்ளுறை உவமம் உபகாரப்பட்டது. தலைவனின் நாட்டையோ, நகரையோ, மலையையோ வர்ணிக்கும் முகமாகச் சில செய்திகள் குறிப்பாகக் கூறப்படும். அவை தெய்வம், உணவு, விலங்கு, மரம் முதலிய கருப்பொருள் களின் துணைக்கொண்டு காட்சிகளாகக் காட்டப்படும். அவற்றை வெளிப்படையாக நோக்கும்போது, வெறும் நிகழ்ச்சிகளாகவும், காட்சிகளாகவும் தோற்றமளிக்கும். ஆனால், கூர்ந்து நோக்கும்போது, அந்தக் கருப்பொருள் நிகழ்ச்சிகளினூடாக, தலைவன் தலைவி சம்பந்தமான செய்தி ஒன்று கரந்துறைவதைக் காணல்கூடும்.

மாதுளம் பழத்தின் முற்றிய முத்துக்கள் கருப் பொருள்கள் என்றால், அந்த முத்துக்களின் உள்ளே தெரியும் இரச ஓட்டத்தைக் கருப்பொருள் வாயிலாகத் தெரியும் உட் பொருள் எனக் கொள்ளலாம். அவ்வுட் பொருளே கருப் பொருளின் உள்ளே உறைவது; உள்ளுறை.

தலைவன் பொருள் தேடுவதற்காக வேறுநாட்டுக் குச் சென்று விடுகிறான். தலைவி பிரிவாற்றாது வருந்து கிறாள். தன் துன்பத்தை வெளிப்படையாகத் தோழிக்குக் கூற அவள் விரும்பவில்லை. அவள் கூறுகிறாள்:

"... கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்
தண்ணுமை வெரிஇய தடந்தாள் நாரை

செறிநடை வயிரிற் பிலிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்கும் துறைவன்
இன்றுயில் மார்பிற் சென்ற வென்நெஞ்சே" (அகம்-40)

நெல்லறுப்பவர்கள் தமது தொழிலைச் செய்யும் போது, ஒருவகைப் பறை கொட்டுகிறார்கள். அதற்குப் பயந்த மருதநிலத்தைச் சேர்ந்த நாரை, தன்னிலத்தை விட்டு நீங்கி, அதனை மறந்து, வேற்று நிலத்தைச் சேர்ந்த பனையிலே தங்கி வாழ்கிறது. இதுவே வெளிப்படைப்பொருள். ஆனால், தலைவி சொல்வதற்கு விரும்பிய செய்தி வேறு. 'தம் காரியமாகிய பொருள் தேடுவதற்காகத் தலைவன் பிரிந்து சென்றுவிட்டான். ஆனால், தலைவியின் மனம் தன்னிடத்தில் நிற்காது, தனக்குப் புறம்பாகிய தலைவனிடம் சென்றுவிடுகிறது.' இதுவே குறிப்பாகத் தலைவி புலப்படுத்தும் செய்தி. இதில் நெல்லறுப்போர்-தலைவன்; கொட்டும் முரசு—பிரிவு; நாரை—தலைவியின் மனம்; பெண்ணை சேர்தல்—வேற்று நாட்டிலிருக்கும் தலைவனையடைதல். இதில் ஒவ்வொரு கருப்பொருளுக்கும், கருப்பொருட் செய்திக்கும் பொருத்தமான உட்பொருள்-உள்ளுறை-குறிப்புப் பொருள் தொனிப்பதைக் காணலாம்.

இந்த உள்ளுறை உவமத்தின் திரிவுபட்ட ஒரு நிலையைத் தொல்காப்பியர் இறைச்சிப் பொருள் என்பர். இறைச்சிப் பொருளில் உவமைத் தன்மை காணப்படுவதில்லை. ஒவ்வொரு கருப்பொருள் நிகழ்ச்சிக்கும் ஏற்றபடி, இன்னபொருளுக்கு இன்ன உவமைதான் என ஒழுங்குபடுத்திக் கூறக் கூடிய அமைப்பில்லை. கருப்பொருட் செய்தி சொல்லப்பட்ட முறையையும் அந்தச் செய்தியின் முழுமைப் பண்பையும் கருத்திற் கொண்டு அவற்றினூடு, ஒரு குறிப்புப் பொருள் தோற்றங் கொள்வதை உணர்ந்து கொள்ளலாம். இதுவே அந்தச் செய்தியில் இறைந்து—நிறைந்து சிறந்து—கிடக்கும் பொருள். இது தொனிப் பொருள். இலக்கணப் பொருள் எனவும் படும்.

"இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்து
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்வேணான் பொய்த்தான் மலை" (கலி-4)

"பிரியேன், பிரிந்தால் தரியேன்" எனத் தலைவன் களவுக் காலத்திலே சபதஞ் செய்தான்; பல காரணங்களினாலே, தலைவன் தலைவியோடு கூட்டமின்றிப் பிரிந்து வாழ நேர்ந்தது. அதனால் அவன், தான் செய்த சபதத்தைக் காப்பாற்றாது பொய்த்தான்; பொய்யன் ஆனான். அப்படிப்பட்ட அவனுக்கு உரிமை பூண்ட மலையில் அதிசயம் ஒன்று நிகழ்கிறது, அங்கே மழை பொய்க்கவில்லை; அருவிகளும் நீர் நிறைந்து இடையறாது ஒழுகுகின்றன; விளங்கித் தோன்று கின்றன; அவையும் பொய்க்கவில்லை; அஃறிணைப் பொருள்களான அவையும் பொய்க்கவில்லை. இது பெரிய தொரு வியப்பல்லவா? என்றவாறு வெளிப்படைப் பொருளி னூடே ஒரு குறிப்புப்பொருள் நிழலாடுகிறது. இதனையே, இறைந்து கிடக்கும் பொருள்—இறைச்சிப் பொருள்—என்பர் இலக்கியகாரர்.

சாதாரண உருவகம், உன்னத உருவகப்படிவமான உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என்ற இம் மூன்றில் எதனுள் அடங்கும்?

இன்று உருவகக் கதைகள் எனக் கூறப்படுவனவற்றைப் பகுத்து நுனித்துணர்ந்தால், அஃது இம் மூன்றிலே ஒன்றிலும் முழுமையாக அடங்கிவிடுவதில்லை. உருவகக் கதைகளிலே சாதாரண உருவகத்தின் அடிப்படை அமைப்பு உண்டு; உள்ளுறை உவமத்தின் சாயல் குறிப்பிடத்தக்க அளவு படிகிறது; இறைச்சிப் பொருளின் நிழல் பெருமளவில் விழுகிறது. எனவே, இந்த உருவகக் கதை என்ற பண்டமானது, உருவகம், உள்ளுறை உவமம், இறைச்சி என்ற மூன்றின் கூட்டுறவால் பிறந்த ஒன்று எனப் கொள்ளல் பொருத்த முடைத்து. இது சிறுகதையை வடிவமாக–உருவமாகக் கொண்டு உலாவி வருவதால் அந்தப் பெயர் பூண்டிருக்கலாம்.

உருவகக் கதை, தன்னாற் கொள்ளப்பட்டுக் கரு வுயிர்க்கப்பட்ட வித்தின் வன்மையிலேயே உயிர் வாழ்கிறது. அந்த உயிர்ப் பொருளே உரிப்பொருள். உரிப் பொருள் சம்பிரதாய எல்லைகளுக்குட்பட்டோ, வழிவழியாகப் பலராலும் எச்சிற் படுத்தப்பட்டவற்றைச் சுற்றியோ எழவேண்டுமென்ற நியதியில்லை. அவ்வாறு எதிர்பார்ப்பது பிணத்துக்கு மாலை

சூட்டி அழகு பார்ப்பதையொத்தது. முக்கால உலக நிகழ்ச்சி களுக்குள்ளே பலபல வேளைகளிலே பலபல பொருள்கள் மின்னற் கீற்றுப் போலத் துடித்து நெளிவதைச் சிந்தனை யாற்றல் கொண்டு காணல் முடியும். அந்தப் பொருள்களே தத்துவங்கள்; உண்மையென்பது அவற்றின் மறுபெயர். அந்த உண்மை சமயதத்துவமாகவோ அரசியற்றத்துவமாவோ பிறவாகவோ அமையலாம். தத்துவங்கள் கால தேச வர்த்த மானங்களையும், மரபுகள் என்று பெரிது படுத்துவனவற்றை யுங் கடந்து நிற்கும் நிலைபேறுடையவை; கூர்த்த மதிகொண்டு தேடிக்கண்டறிய வேண்டியவை. அந்தத் தத்துவங்களு ளொன்றை மையப் பொருளாக, உரிப் பொருளாகக் கொண்டு அதனை அழகாகவுந் தெளிவாகவுங் காட்டுவதற்கு எழுந்த ஓர் உத்தியே உருவகக் கதை. எனவே, அதன் உரிப்பொருள் மிகமிக வலுவுடையதொன்றாக அமையவேண்டும். அக் கினியைப் போன்ற தூய்மை வாய்ந்த உரிப்பொருளின் வன்மையே உருவகக் கதையின் ஆயுளை நிர்ணயிக்கிறது என்று கூறினால் அதுவே ஏற்புடையது போலத் தோன்று கிறது.

உருவகக் கதையின் உரிப்பொருளாகிய தத்துவம் மனங் கவரக் கூடிய, அழகியதோர் உருவமாக வடிவங் கொள்ளுதல், அடுத்து இன்றியமையாததாகிறது. நிர்ச்சலனமான குளத்தின் நடுவிலே எறியப்பட்ட கல் தோற்றுவித்த அலைவட்டங்கள், ஒன்றை யொன்று உந்தி, விரிவடைந்து பெரியதொரு வட்ட மாகக் கரையைத் தொட்டு முடிவதுபோல், மனத்திலே கொள்ளப்பட்ட தத்துவப் பொருளான உரிப்பொருள், கருப் பொருள்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, கற்பனையலை களை எழுப்பி விரிவுபட்டுச் செல்லும். நீரிலெழுந்த வட்டங் களின் மையம், கல் லெறியப்பட்ட இடமாகிவிடுவது போல, மனத்தெழுந்த கற்பனையலைகளின் மையம் தத்துவப் பொருளாக அமைகிறது. இந்நிலையில் உரிப்பொருளை விரிவு படுத்தற்கேற்ற கருப்பொருளும் அதனைப் பற்றிப் படர்ந்து செல்லுங் கற்பனைத் திறமும், உருவகக் கதையின் மற்றைய அமிசங்களாக விளங்குவதைக் காணல்முடியும். அந்தக் கருப்பொருள் மனிதனாகவோ, மரமாகவோ, மிருகமாகவோ, முகிலாகவோ, நதியாகவோ அன்றி

உலகியலுக் கப்பாற்பட்ட கடவுளாகவோ, சாத்தானாகவோ இருக்கலாம்; இயங்கு திணைப்பொருளாகவோ, நிலைத் திணைப் பொருளாகவோ இருக்கலாம். ஆனால், அவை கற்பனையின் பூரண மதர்ப்பினாலே ஆட்கொள்ளப்பட்டுப் பேசும்; பிணங்கும்; உயர்வு தாழ்வு காட்டி வாதிடும்; மோனத் தவம் புரியும்; சிரித்துக் கும்மாளங் கொட்டும். அவை எச் செயலைச் செய்தாலும், அவைகளும், அவைகளுக்குச் செயல்களைக் கற்பித்து, அவைகளை ஆட்கொண்ட கற்பனையும், தாம் பிறந்த இடத்தை—தத்துவப் பொருளை— குறிப்பாகக் காட்டிக் கொண்டிருக்கும்.

உரி, கரு, கற்பனை என்ற மூன்றின் சேர்க்கையாலும், மனத்தகத்து உருவகக் கதையென்றொரு கருப்பம் விளைந்து விட்டாலும், அதனை வெளிக் கொணர்ந்து, வாசகர்களிடையே பரிமாற்றஞ் செய்வதற்கேற்ற, சொல்லுந்திறமை உருவகக் கதையின் மற்றோரம்சமாக அமைகிறது. அந்த மூன்றின் சேர்க்கையினாலுஞ் சூல் கொண்ட நிகழ்ச்சிகளை, மேற் போக்காக, சம்பவத்திரள்களை மாத்திரம் காட்டுவது போற் சொல்லிச் செல்வதால், உருவகக்கதை வாசகன் மனத்தைத் தாக்கி, சலனமேற்படுத்துவதற்கு வேண்டிய கனதியை இழந்து விடுகிறது. எந்த இலக்கிய சிருஷ்டியும் மனத்தில் உணர் வலைகளைக் கொந்தளிக்கச் செய்து சலனமேற்படுத்தாது போனால், அது எதனையும் சாதித்துவிட்டதாகக் கருத முடியாது. அந்தச் சலன அலைகளின் உயரமும், வீழ்ச்சியும், வேகமும், மோதுந் திறமும், இரைச்சலும் ஆகிய இவற்றை இலக்கியப் படைப்புக்களின் நிலைபேற்றை அளவிடுங் கருவிகள் என்று கூறுதல் சாலப் பொருத்தமுடைத்து. எனவே மனத்தகத்துப் பூரண வளர்ச்சியடைந்து சூக்கும வடிவிலே கிடந்து புரண்டு, தன்னையுடையானுக்குப் பிரசவ வேதனை யளித்த அது, தூலப் பொருளாய், ஒரு வடிவு படைத்து, வாசகனிடத்துச் சலன அலைகளை எழுப்பும் வன்மை பெற்று உலாவுவதற்கு, சொற்களும் வாக்கியங்களுமாகிய கருவிகள் இன்றியமையாதன. வசன இலக்கியங்கள் எல்லாவற்றையும் விட உருவகக் கதைக்குத்தான், சொல்லின் செழுமையும் வாக்கியத்தின் வளமும் பெரிதும் வேண்டப்படுகின்றன.

குளத்திலே கல்லெறியப்பட்ட மைய இடத்திலிருந்து தோன்றிய சலன விரிவுக்கு, ஒவ்வொரு நீர்த்திரளும், அலை வட்டமும் கருவியாக அமைவதுபோல, உரிப்பொருளான தத்துவங்களை மையப் பொருளாகக் கொண்டெழுந்த முயற்சியின், முயற்சியில் இரண்டறக் கலந்த உணர்ச்சியின் விரிவுக்குச் சொல்லும் வாக்கியமும் கருவியாகின்றன. கம்பன் கவிகளிலீடுபாடு கொண்ட இரசிகர்கள், அக் கவிகளிலே எந்த ஒரு சொல்லையாவது எடுத்துவிட்டு, பிறிதொரு சொல்லை வைத்தாலும் அவற்றின் உயிர்த் துடிப்பு நின்றுவிடுகிறதெனக் கூறுவர். உருவகக் கதையின் தூல வடிவத்திற்கும், இதனை ஓரளவு உதாரணமாகக் கொள்ளுதல் பொருந்தும். உருவகக் கதையின் சர்வ லட்சண, தூல வடிவ அமைப்பினாலேதான் அது நிமிடக் கதைகளையும், நீதிக் கதைகளையும் வென்று, இலக்கியத் துறைகளுள் ஒன்றாகி நிலைபெற முடிகிறது.

பூடகமான எந்த ஒன்றிலும் மனக் கவர்ச்சி நிகழ்வது இயல்பு. புதிர்களும், இரகசியங்களும், திரை மறைவு நிகழ்ச்சிகளும் உண்டாக்கும் கவர்ச்சி வேகமும் அதிற் பிறந்த விடுப்புணர்ச்சியும் மற்றெவற்றினும் பார்க்கத் தாக்கமுடையவை. அன்றியும் அவற்றிலே சிந்தனையைத் தூண்டுந் திறமுண்டு. இப்பூடகத் தன்மை உருவகக் கதைக்கும் ஒரு சிறப்பம்சமாக அமைகிறது. நீதிக் கதைகளிலும், பொன்மொழிக் கதைகளிலும் கதை கூறப்பட்டு, அதனடியிலே, "அடாது செய்தவர் படாது படுவர்", "பெண்ணிற் பெருந்தக்கயாவுள" என்பன போலக் குறிக்கப்பட்டு விடுதலுண்டு. இவ்விதக் கதைகளில் இருவகைக் குறைபாடுகளுண்டு. வாசகரின் சிந்தனை வளத்துக்கு உரமிடாமை ஒன்று. கதையின் கருத்தா தன்னெண்ணத்தை வாசகன் மீது சுமத்தியோ திணித்தோ விடுவது மற்றொன்று. இவ்வித இருவகைக் குறைபாடுகளும் நீங்கிய நிலை உருவகக் கதைக்குண்டு. உருவகக் கதாசிரியன் எந்த இடத்திலும் தான் கருவுயிர்த்த தத்துவத்தை வெளிப்படையாகக் காட்டுதல் அழகன்று. கருப்பூர மணம் போல, கதை முழுவதிலும் தத்துவத்தின் மணம் வீசுகிறது. ஆனால், வாசகன் கதாசிரியன்

கொண்ட தத்துவத்தைத் தான் கண்டுகொள்ள வேண்டுமென்ற நியதியில்லை. கதாசிரியன் எதிர்பாராத ஒரு தத்துவத்தையோ சில தத்துவங்களையோ வாசகன் கண்டுகொள்ளலாம். ஏனெனில் படைப்பாளியின் நிலைவேறு. இரசிகர்களின் நிலை வேறு.

உருவகக் கதைக் கலைக்குப் புத்திலக்கிய வடிவமும் உயிர்ப்பும் அருளியவர் கலீல் கிப்ரான். இதன் தற்காலச் சிறப்புக்கு இவரைப் பிதாமகராய்ச் சாட்டுவர். பாரத மண்ணிலே, இதனைச் செழுமைப் படுத்தியவர்களுள் மராத்திய எழுத்தாளர் வி.ஸ. காண்டேகர் குறிப்பிடத்தக்கவர். உருவகக் கதைப் படைப்பாளியின் வியத்தகு வினைத்திறன் வீச்சினைக் காட்சிப்படுத்த வந்த அவர், 'யானைத் தந்தத்தினைக் கடைந்து சிறிய தாஜ்மகால் ஆக்குவதற்குச் சமம் உருவகக் கதைகள் படைப்பது' என ஓர் உவமையால் விளக்குகின்றார்.

ஈழத்து ஆற்றல் இலக்கியச் சோலையிலே அவ்வப்போது மலர்ந்து மணம் பரப்பிய உருவகக் கதை மலர்கள் பலவுள வேனும், அவற்றிலே தனது சிருட்டிகளான நன் மலர்களை முதலிலே தொகுத்து வண்ண மாலையாக்கி —நூல் வடிவஞ் செய்து — என்றும் இளைய கன்னிக்குச் சூட்டிய பெருமை அன்பர் இளம்பிறை ரஹ்மான் அவர்களுக்கு உரியது. (அவருடைய முப்பது உருவகக் கதைகள் கொண்ட முழுமையான 'மரபு' தொகுதியை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், மித்ர வெளியீடு நிறுவணம் வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.)

என்னளவில், ஏட்டளவில், அரை நூற்றாண்டுகளாக மூளையிலே மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது, இந்த "மணற் கோயில்". இந்த மூச்சு, இன்றும் ஆரோக்கியமான மூச்சா, நெஞ்சுக்குள் இழுபடும் "சேட" மூச்சா என்று "குழல்" வைத்துப் பார்க்க நான் யார்? பெற்ற தாய்க்கு அன்பு இருக் கும்; மருத்துவம் தெரியாது. புற்றீசலாய்ப் பறக்கும் போலி மருத்துவருக்குக் காட்டவிருப்பமில்லை. உண்மை மருத்துவம் தெரிந்த உண்மை மருத்துவர்கள் தயவு செய்து பரிசோதனை செய்வார்களாக.

ஒரு சின்னக் கதை சொல்லட்டுமா?

வேள்வி வேட்க ஆசை கொண்ட ஒருவன் வேள்வி வேட்கப் புறப்பட்டான். அவன் வேட்புக் களம் அமைத்தான். அனைத்துச் சமித்து வகைகளையும் வேண்டிய திரவியாதிகளையும் சேகரித்தான்; பக்குவப் பண்ணிக் கொண்டான். பல்லாண்டுகளாக வேள்வி இயற்றும் முழு நிறைவுத் தகுதியுடைய அந்தணப் பெருமகன் ஒருவனுக்காகக் காத்திருந்தான். கை கூடிற்று. வேள்வி இனிதே நிறைவேறி; அவிற் பாகம் தேவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஈழத் தமிழ் இலக்கியத்தின் நிமிர்வுக்கும் திமிருக்கும் எஸ்.பொ.வின் பங்களிப்பு மகத்தானது. தமிழ் ஆற்றல் இலக்கியத் துறையிலே, "சுயம்" என்னும் அருமந்த பண்பைக் காற்றில் பறக்கவிடாது போற்றிவரும் எஸ்.பொ. அந்தணப் பெருமகனாய் இதற்கு வாய்த்தார். அவர் இயற்றும் சடங்குகளிலே இந்த 'மணற் கோயில்'- உருவாக்கி, தேவர்களே, உங்களுக்கு வழங்கப்படுகிறது.

வேள்வி இனிதே நிறைவுற்றுது. சுபம்.

*சுவைஞர் தம்*
*கபாடம் திறமினோ —*

நாவற்குழி
16-04-1999 சு.வே.



# மணற் கோயில்

நேர்ந்து தவமிருந்து பெற்றபிள்ளை முடமாகிவிட, அதற்காக வேதனையின் எல்லைவரை வேதனைப்பட்டு, நெஞ்சைக் கல்லாக்கி, மூலையிற் கிடத்திவிட்ட வேண்டாப் பிள்ளையைப் போல, அந்த ஊரின் தென்னெல்லையாக அந்த உப்பங்கழி கிடந்தது. கடலுமாகாது ஆறுமாகாது இரண்டுங் கெட்டானாகப் பிறந்துவிட்ட தனது பிறப்பின் இழிவையெண்ணியோ என்னவோ முழு மோனத் தவஞ்செய்து கொண்டு அது கிடந்தது. அவ்வப்போது இரண்டொரு செம் படவச் சிறுவர்கள் நண்டு பிடிக்கும் ஆசையில் இறங்கிக் கலக்கினால் 'நானும் உபயோகப் படுகிறேனா?' என்ற ஐயத்தோடு சிறு பூரிப்புக் கொண்டு சிறிது நேரந்துடிக்கும்; பின் ஊமை யாகிவிடும்.

அந்த உப்பங்கழியைப் போற்றிப் பாது காக்க மனிதனென்ன சிருட்டிகர்த்தாவா? மனிதப் பூண்டு தலையெடுக்காத இடங்களில் மற்றெல்லாம் தலையெடுக்கும் இயல்பினால் தானோ என்னவோ, அதன் இரு கரைகளிலும் தாழைகள் சோலையுருக்கொண்டு காட்சி தந்தன. அங்கு மனிதவாடை வீசவில்லை; தாழம் பூவின் திவ்விய வாசனை வீசியது.

1

அந்த உப்பங்கழி மாரிக்காலத்திலே ஊர் வெள்ளம் முழுவதையும் உண்டு, பருவ மங்கையைப் போலவே பொங்கிப் பூரித்து, தன்னையறியாமலே வளர்த்துவிட்ட தாழஞ்

சோலையிலே உலாவி வருவதுமுண்டு. அந்தக் காலத்திலே, ஊரார் உழைப்பினைக் களவு கொண்டு சுகம் காணும் சோம்பேறிக் கூட்டத்தின் திறமைச் சின்னங்களாகப் பொச்சு மட்டைகளும், ஆட்டுத்தலைகளும் கிடக்கக் கண்டு, வெட்கி உடல் சிலிர்ப்பதுமுண்டு; பக்கத்திற் கிடந்த மயான பூமியைக் கழுவித் துடைத்துச் சுத்தஞ் செய்வதுமுண்டு; கோடைக்காலத்திலே வைதவ்ய கோலம் பூண்டு, உடலும் உள்ளமும் ஒடுங்கித் தன்னிரு கரையுள்ளும் கட்டுண்டு கிடப்பதுமுண்டு.

அது தன்னியற்கைத் துடிப்பின் சான்றாகத் தன்னிரு கரைகளிலும் இரண்டொரு வெண்மணற்றிட்டுகளை ஆக்கியிருந்தது. அவை நண்டு 'பிள்ளை'களினதும் ஊரிக் குழந்தைகளினதும் சித்திரச்சாலையாக விளங்கின.

ஒருநாள் மாலை ஒரு தந்தையும் மகளும் அங்கு வந்தனர். அவள் ஐந்து வயதுச் சிறுமி. உலகத்துக் குழந்தைகளிடம் எத்தனையாயிரம் துடிதுடிப்புகளும் குறுகுறுப்புகளுமுண்டோ, அத்தனையும் அவளுடலின் ஒவ்வோரணுவிலும் தெறித்தன; எத்தனை எத்தனை கோடிக் குழந்தைக் கனவுகளுண்டோ, அத்தனையும் அவள் கண்களிற் சுடர்விட்டுச் சிரித்தன. அவள் வீட்டு மல்லிகைத் தோழி சிரித்துச் சிந்திய மலர்களை, தானே தொடுத்துத் தன் கழுத்திலணிந்திருந்தாள்; தலையிற் சூடியிருந்தாள்; கையிற் காப்பாக இட்டிருந்தாள். தன் தோழியின் சிரிப்பை அள்ளிக் கொள்வதிலே அவளுக்குக் கொள்ளை ஆசை.

தந்தை துண்டை விரித்துக்கொண்டு அந்த மணற் பரப்பிலே அமர்ந்தார். அடுத்த கணம் அவர் நினைவு, தன்னைப்பற்றி முனைந்தெழுந்து, தன் குடும்பமாகத் தழைத்துப் படர்ந்து, அதன் எதிர்காலமென்னும் எட்டாத உயரத்தில் சென்று மலர் பூத்து, மனோகரக் கனவாகக் காட்சிதர, அவர் அதனில் ஐக்கியப்பட்டார். அவர் எங்கோ சென்றுவிட, அவருடல் அம்மணற்பரப்பில் இருந்தது.

ஆனால், அவர் மகளுக்கு எல்லாமே புதுமையாகத்தான் தோன்றின. அவள் ஒருகணம் தந்தையைப் பார்த்தாள்;

அடுத்த கணம் உப்பங்கழியின் நீர்க்கரையில் நின்றாள். 'அம்மா, எவ்வளவு தண்ணீர்' – வியப்பு அவளை விழுங்கியது. அத்தருணம் உப்பங்கழி தன் சிற்றலைக் கரங்களை நீட்டி, அவளது சீறடிகளை வருடி, கண்ணிலொற்றி முத்தமிட்டு, தானும் மகிழ்ந்து அவளையும் மகிழ்வித்தது. அதன் செய்கை அவளுக்கு வேடிக்கை; அதற்கு இன்ப வேதனை. அவள் மெல்லமெல்ல நீரினுள் இறங்கினாள். அதனுள் குதித்து அளைந்து விளையாட அவளுக்கு ஆசை; அணைத்துச் சுகம் பெற அதற்கும் ஆவல். அப்பொழுது அவள் தனது சுண்டு விரலை நீரிலே தோய்த்து நாக்கில் வைத்தாள். 'ஐயோ, பச்சை உப்பு...தூ...தூ...' உப்பங்கழி வெட்கியது; பிறவிக் குணத்தை மாற்ற அதனால் முடியுமா, என்ன?

அவள் கரையேறினாள். உப்பங்கழி, தென்றலுந் தானும் சேர்ந்து தொடுத்த வெண்ணுரை மாலைகளை அணி யணியாகக் கரைக்குச் சூட்டி அழகு பார்த்தது. அந்த வெண் ணுரையிலே துடித்த குமிழிகள் கண்சிமிட்டி அவளை அழைத்தன. பலவண்ணக் கோலங்காட்டி அவளை மயக்கின; அவள் மயங்கினாள். அவள் தன்னிரு கைகளாலும் நுரையை வாரி அள்ள, காற்றுத் தோழி அதனை வாங்கி ஊதிப் பூம் பந்தாடினாள். திரள்திரளாக அவை பறந்து மறைந்தன. மீண்டும் மீண்டும் அவளுந் தோழியும் நுரையை வீசிவீசி விளையாடி மகிழ்ந்தனர். அவர்கள் விளையாட்டிலேயே விளைந்த ஒரு நுரைப் பூம்பந்து பறந்தோடிப்போய் அப்பாவின் கன்னத்தை முத்தமிட்டது. 'சீ இதென்ன விளையாட்டு' அப்பா முணுமுணுத்துவிட்டு, பழைய அப்பாவாகவே மாறினார். அவள் முகத்திலே ஒரு கருந்திரை நிழலிட்டு மறைந்தது. அந்த விளையாட்டும் நின்றது. இனி...

குழந்தையின் கற்பனைக் கனவுக்கு உலகில் இல்லாதது எதுதான் இல்லை!

கடலரசியைப் போல தன் மடி நிறைய அழகொழுகும் பல பண்டங்களை வாரி வழங்க உப்பங்கழிக்கு ஏது தகுதி? ஏதோ தன்னாலியன்ற பலவர்ணச் சிப்பிகளையும் ஊரிகளை

யுந்தாம் வாரி வழங்கியிருந்தது அது. யாரும் விரும்பாத அவை அவளுக்கு மாணிக்கமாய் மிளிர்ந்தன; அவளது மடியில் கிடக்கும் பெரும்பேறு பெற்றன. இனி...

அப்பாவுக்கு அருகிற் கிடந்த சிறு மணல் மேடு அவளைக் கவர்ந்தது. 'சொருசொரு' என்ற மணலின் தன்மையும், ஒட்டியும் ஒட்டாமலும் இணைந்து நின்ற தன்மையும் அவளுக்கு வெகு சுகமளித்தன. அதிலே கிடந்து புரண்டு விளையாடி மகிழ அவளுக்குக் கொள்ளை ஆசை. ஆனால், அப்பாவின் நெருப்புப் பார்வை தன்னைச் சுடுமே என்ற பயம்; அதனால், கையை மணலிற் புதைத்து, உளைந்து, கிண்டிக் கிளறி அந்த ஆசையைத் தணித்தாள். அப்போதுதான் ஈரமண் அவள் கையிற்பட்டது.

அப்பொழுது...

நெற்றிப் பொட்டிலே, எங்கும் நிறைந்த அந்த ஒன்றை நிறுத்தி, தன்னையும் உலகையும் மறந்து, அதுவே தானாய்க் காணும் யோகியானாள் அவள். ஒரு கணநேரத்தில்தான் அந்த நிலை. அந்த ஒரு கணத்திலே அவள் கற்பனைக் கன்னியாக மாறி, அவள் காட்டியதொரு சிற்பக் கோயிலைக் கண்டாள்.

அவள், அவளானபோது, அவள் கைகள் ஈரவெண் மணலைச் சாந்தாக்கிக் குவித்தன. அவள் சிற்பியாக மாறி, மூலஸ்தானமும் ஸ்தூபியும் கட்டத்தொடங்கினாள். ஈர மணலைக் கோபுர வடிவிற் குவித்து, அது சொரிந்து விழா வண்ணம் சிறு தட்டுக் கொடுத்து இறுக்கிய பின்னர், சிப்பியை யும் ஊரியையும் கொண்டு சிற்ப–சித்திரவேலைகள் செய்தாள்; கோபுரத்தின் கிழக்குப் பகுதியிலே தன் கையளவான இடத்தைக் குடைந்தெடுத்தாள். அது தான் கர்ப்பக்கிருகமாம். கர்ப்பக்கிருக வாயிலுக்குப் பக்கத்திலே, தெற்கு வடக்காக இரு சுவர்கள் எழுப்பப்பட்டன. புன்னைமரத்து இலையிரண்டு மேலே பரப்பப்பட்டு, மூடுசாந்தும் இடப்பட்டது. அதுதான் சந்தன மண்டபமாம். சந்தன மண்டபத்திற்குச் செய்யப்பட்ட சித்திர வேலைகளும் முடிந்தன. இனி இதில் மதில் வேண்டாமா? சிறிது நேரத்தில் தெய்வத் தச்சனின் சிருட்டி போலே மதில்கள் எழுந்தன. அவற்றினுச்சியில் ஊரிகளின்

நுனிகள் வரிசையாக நின்று ஈட்டிப் படைகளாகிக் காத்தன. கோயில் நிர்மாண வேலை முற்றுப் பெற்ற அப்போதே, மண் தோண்டப்பட்ட அந்த வட்டவடிவமான குழியும் திருக் குளமாயிற்று. உப்பங்கழியின் உப்பு நீர், சிரட்டை யொன்றின் மூலம் திருக்குளத்தை அடைந்து பவித்திர தீர்த்தமாயிற்று. இனி, சுவாமி ஒன்றை உள்ளே வைத்துவிட்டாற் கோயில் உயிர் பெற்றுவிடும்.

வகைதெரியாது எங்கிருந்தோ அங்கு வந்து கிடந்தது ஒரு சிறு பனையோலை நறுக்கு. அதை எல்லாம் வல்ல இறைவனாக்கி, அதை அவள் மூலஸ்தானத்திற் பிரதிட்டை செய்தாள். இறைவனின் கல்யாண குணங்களைப் போலே அவள் மனத்தில் மகிழ்வின் பூரண எழில் நிறைந்தது; அவள் பொங்கிப் பூரித்தாள்; சிரித்தாள். தான் அணிந்திருந்த மாலையைக் கழற்றி, அம்மலர்களைத் திருவீதி எங்கும் பரப்பினாள்.

தன் குழந்தையின் சிறுகை தீண்டுதலும் அப்பாவின் உணர்வு விழித்தெழுந்தது. அவர் மகளைப் பார்த்தார்.

"அப்பா..."

"என்ன, போவோமா?"

"வேண்டாம்."

அவள், அப்பாவிற்குத் தன் படைப்பைக் காட்டினாள். திருக்கோயில், திருக்கோபுரம், திருமதில், திருக்குளம் எல்லா வற்றிற்கும் மேலாக தெய்வம்! அப்பா சிரித்தார்.

"கும்பிடப்பா..."

அப்பா துண்டை அரையிற் கட்டிக்கொண்டு பய பக்தியோடு கும்பிட்டார்.

அவளும் தான் நிருமித்த தெய்வத்தை பயபக்தியோடு கைகூப்பிக் கும்பிட்டாள்.

"சாமி, அப்பனே, அம்மாவையும் அப்பாவையும் காப்பாத்திக் கொள்; என்னையும் காப்பாத்திக்கொள்." அவள் வார்த்தைகள் வேதமந்திரங்கள் போலே வாய்மையும்

தூய்மையும் பெற்று, அந்த மோன வேளையிலே படிகத் துண்டு போலே தெளிவும் பெற்று, ஒளிவடிவாகி உலகையே காக்கப் புறப்பட்டன.

அப்பாவாற் பொறுக்க முடியவில்லை. அவர் மனத்தில் உணர்ச்சிப் பிரளயம் பொங்கி எழுந்து உடல் முழுவதையும் தாக்கி நெகிழச் செய்தது; கண்ணீர்த் துளிகள் உருண்டு சிதறின.

அப்பாவும் மகளும் சென்றனர்.

அப்பொழுது ஒருவன் வந்தான்.

நாலைந்து நாள்களாக அவனுக்கும் அந்த உப்பங் கழிக்கும் ஏதோ தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. மாலை மனோகரத்தை அநுபவிக்க அங்கே வந்து அதே மணற் பரப்பில் இருப்பான். தனிமை பரிபூரணமாக ஊறித் தெவிட்டிய உப்பங்கழிக்கு அவன் வரவு சிறிது ஆறுதல் தந்தது. இன்றும் அவன் வந்தான். அந்த மணற்பரப்பை நோக்கிச் சென்றான். 'சீச்சீ, இது யார் செய்த வேலை; அழகான மணலைக் கிண்டிக் கிளறியது யார்? போதாக் குறைக்குத் தண்ணீரையும் தேக்கி, கோயிலாம்; குளமாம்'- அவன் மனம் வெறுப்பை உமிழ்ந்தது; தட்டிச் சமப் படுத்திவிட்டால் நாளைக்காவது உபயோகப்படாதா என்று எண்ணியது. நினைவு செயலாக, அவன் கால்கள் அதை நிறைவேற்றத் துடித்தன. அடுத்த கணம்...

கோயிலின் திருமதிலோரத்தை அவன் கால் தீண்டியது. உப்பங்கழி என்றுமில்லாத வகையில் 'ஆ' எனக் கத்தியது.

"அப்பனே நில்; நில்" என ஒரு குரல் மனச் செவியிற் கணீரென ஒலித்தது!

அவன் பிரமித்துப்போய் அங்குமிங்கும் பார்த்தான்.

"அப்பனே, கோயிலை அழித்த பழியைச் சுமக்கப் போகிறாயா?" மீண்டும் ஒலித்தது அந்தக் குரல்.

குரல் கொடுத்தது, அந்த உப்பங்கழியா? மணலா? கோயிலா? கோயிலினுள்ளே ஓலைத் துண்டு வடிவிலே கிடந்த 'அது'வா? அல்லது அவை எல்லாமா?

"ஏன் சிரிக்கிறாய்? புதுமைப் பேர்வழியாயிருக்கிறாயே நீ. உனக்கு இங்கென்ன வேலை?" அந்தக் குரலில் ஏளனம்; அதிகாரமும் கலந்தொலித்தது.

"எனக்கென்ன வேலையா...? ஆச்சரியமாயிருக்கிறதே கேள்வி! அதோ பார் வானத்து விந்தையை. செங்கதிர்ச் செல்வன் தன் கடைசி மூச்சுள்ள வரையும் காட்டும் மாயா ஜால வித்தைகளைப் பார். தங்கமுருக்கித் தழலாக்கி, அனல் குறைத்து, செம்பொற் சோதியாய் அவன் சுழன்றாடும் ஆட்டத்தைப் பார். அந்திப் பெண் சிந்திவிட்ட அழகு விருந்தைப் பார். மாலை மங்கையின் சௌந்தரியப் பொலிவைப் பார். ஆகா, சிறிது நேரத்தில் வெண்ணிலவு மேகக் குழந்தைகளுடன் ஓடி விளையாடத் தொடங்கி விடும். வானத்துத் தாரகைகள் கண் சிமிட்டி உலகை ஏளனஞ் செய்யும். நீலவானப் பொய்கையிலே..."

"அபாரம், அற்புதம். ஓகோ, நீ ஒரு கலைஞனா? தம்பி, கற்பனை செழிக்கிறதே!"

"கற்பனைதான் நான்; நான்தான் கற்பனை."

"அப்படியா? விண்ணிலே தான் சஞ்சரிப்பாயோ?"

"ஆமாம், வானப் பெருவெளிதான் என்னுலகம். அங்கே சிறகடித்துப் பறந்து பரவெளியைக் கடந்து, அண்ட முகட்டைத் தொட்டு அதற்கும் அப்பாலாய்... அப்பாலாய்.."

"அப்பனே கீழே இறங்கி வா; ஏன் நீ மண்ணைப் பார்ப்பதில்லையோ?"

"மண்ணையா? மண்ணிலே என்ன இருக்கிறது?"

"பார்க்கத் தெரிந்தால் எத்தனை எத்தனையோ உண்டு. ஏன் இந்த மணற் கோயில் ஒன்றே போதாதா?"

"உம்... மணற்கோயில்... அதில் என்ன இருக்கிறது?"

"நீ தேடித்திரியும் 'கலை' இருக்கிறது."

அவனையும் மீறிச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டு கேட்டான்.

"இந்த மணற்கோயில் ஒரு கலா சிருட்டியா?"

"அதிலும் சந்தேகமா? இதன் சிருட்டி கர்த்தாவின் உள்ளம் கற்பனைகளின் உறைவிடம்; அந்த உள்ளத்திலே பளிங்கின் தெளிவும் ஞானிகளின் மனோலயமும் உண்டு. பார்க்கப்போனால் அந்தக் குழந்தையே கற்பனையின் முழுமை. அதன் படைப்பு இக்கோயில்; உயிர் நான். கலைக்குத் தாய் அது; கலைபிறந்த கதை இது; சாட்சிகள் அதோ..."

உப்பங்கழி 'ஓம் ஓம்' என்றுரைத்தது.

வெண்ணுரை அவன் காலடிக்கே வந்து 'சரிதான்' என்றது. சிப்பிகளும், ஊரிகளும் 'மண்ணே முக்கியம்' என்றன. மல்லிகை மலர்கள் 'மண்ணின் கனவே நாங்கள்' என்று முறுவலித்தன.

அடிவானத்திலே செம்பரிதியைக் கௌவிய மேகத் திரளிலிருந்து மின்னற்கொடி ஒன்று துடித்து நெளிந்து மறைந்தது. அவன் அறிவிலும் பளிச்சென ஒரு மின்னல்.

அவன் கலைஞன் ஆனான்.



## சுதந்திரம்



இரு காற்றாடிகள்; ஒன்று சிவப்பு; மற்றது பச்சை.

சிவப்பு ஆண்; பச்சை பெண். இருவரும் காதலர்கள்.

இருவரும் தென்றலைத் தேராக்கி வானவெளியில் கைகோத்து உலாவி வரப் புறப்பட்டனர்.

அவர்களுடைய தலைவிதி நூலென்ற உருவில் இரு பிரமாக்களான இரு சிறுவர் கையில் இருந்தது.

இருவர் விதியும் ஒரே அளவுடையன; அதனால் அவர்கள் ஒரே உயரத்தில் அக்கம் பக்கமாகப் பறந்தார்கள். அவர்கள் இருவரும் காதல் மொழிபேசி, கடைக்கண் வலை வீசி, இன்பப் போதையிலே மிதந்தார்கள்; ஒருவரை ஒருவர் கட்டித் தழுவத் துடிதுடித்தார்கள். தென்றலின் அணைப்பிலே, மாலையின் மயக்கத்திலே, அவர்கள் உயிரிலே ஒரு வெறி பிறந்தது; அவர்கள் மேலே மேலே சென்றார்கள்.

மேலே—

மேலைக் கடலைத் தங்கத் தடாகமாக்கி ரசவாதம் செய்து, உயிர்த்துடிப்பு அழியும் செம்பொற் சோதியில் எழிலைப் பார்த்தார்கள்; பருகினார்கள். மேற்கு வானத்திரையிலே அந்தியென்னும் ஓவியன் வண்ண வண்ணக் குழம்பூட்டி ஆக்கிவிட்ட கைபுனைத்

2

தியற்றாக் கவின் பெறு வனப்பு காணப்பட்டது; கண்டு களித்தார்கள். கீழ் வானவெளியிலே 'நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலாவென்று' ஒளிமுகத்தைக் காட்டும் மதிப் பெண்ணாள் சிரித்தாள்; உடல் சிலிர்த்தார்கள்.

வானவெளி அனைத்தும் ஒளிமுத்துத் தாரகைகள் கண் சிமிட்டின; கண்ணாற் சிரித்தன. உள்ளம் கள்வெறி கொண்டது; உயர உயரப் பறந்தார்கள்.

சிறுவர்கள் ஆனந்தங் கொண்டனர்; அதனால் குறும்புகள் பிறந்தன. நூலைச் சுண்டியிழுத்தனர்; காற்றாடிகள் திடுக்கிட்டு உயரச் சென்றன. வெட்டி வாங்கினர்; அவை அப்பாலும் இப்பாலுமாய்ச் சாய்ந்து சென்றன. சுழற்றிச் சுழற்றி ஓடினர்; அவை 'தலை சுற்றின'.

ஆண் காற்றாடிக்கு ஆணவம் தளிர்த்தது; கோபம் பிறந்தது. புரட்சி வெறி மூண்டது.

"சீ! என்ன வாழ்க்கை; உப்புச் சப்பற்ற வாழ்க்கை" என்றது.

முகத்தைச் சிணுங்கியது பெண்.மௌனம் சாதித்தது.

"வாழ்விக்கப்படுகிறோமோ? வாழ்கிறோமா? வாழ் விக்கப்படுகிறோமென்றால் நாம் வாழவில்லையா?"

பெண்ணுக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை. "என்ன புலம்புகிறீர்கள்?" என்றது.

"என்னது, புலம்புகிறேனா? பெண்களுக்கு எதிலுமே ஆழம் தெரிவதில்லை. புரட்சி மனப்பாங்கு இல்லை."

"ஏன்?"

"பின் என்னவாம்? அந்த இரண்டு சின்னஞ்சிறு பையன்களின் கட்டுப்பாட்டுக்குள்தானா நமது சுதந்திரம்? அவர்கள் அமைத்த வரம்புள்ளா நமது சுதந்திர வாழ்வு; அவர்களிட்ட சட்டத்துக்குள் அடங்க நாமென்ன அடிமைகளா?"

"போதும்; போதும் நிறுத்துங்கள்," என்று கூறிச் சிரித்தது பெண் காற்றாடி.

"என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கிறது; உள்ளமெல்லாம் உலைத்தீயாக மாறும் போது?"—ஆண் காற்றாடிக்கு ரோசம் பிறந்தது; துடிதுடித்து, அங்குமிங்கும் ஏறு நடைபோட்டது.

"ஏன் துடிக்கிறீர்கள்? அந்தப் பையன்கள் தலையிலிட்ட மூன்று முடிச்சும், இந்த மெல்லிய நூலும்..." பெண் முடிக்கவில்லை; ஆண் ஆத்திரத்தோடு குறுக்கிட்டது.

"இல்லையென்றால் விடுதலை; விடுதலை; விடுதலை — சுதந்திரப் பேரொளி தெரியும். மனம்போல் வாழலாம்! அப்போது நான்... நான்... வானத்து ஓடையிலே நட்சத்திர மலர் பறித்து மாலையாக்கி உன் திருக்கழுத்தில் சூட்டேனோ? அந்த அமுத நிலாவைப் பிடித்து உன் மேனியிற் போர்த்தி அழகு பாரேனோ? ஓடிவிளையாடும் முகிற் குலமெல்லாம் நாம் ஏறி உலக சஞ்சாரம் செய்யும் உயரிய வாகனங் களாகவோ..."

பெண் காற்றாடி மீண்டும் சிரித்தது. "சிறுவர்கள் இட்ட வரம்பை மீறினால், மூன்று முடிச்சும், நூலும் இல்லை யென்றால் சுதந்திரம் ஏது? எங்களுக்குரிய தனித் தன்மையேது?" என்றது.

"சீச்சீ; வெட்கம் வெட்கம்! இந்த நூற்றாண்டிலேயே பெண்கள் இப்படி அடங்கியொடுங்கி வாழ்வது மகா வெட்கம். உன்னால் முடிந்தாலும் என்னால் முடியாது. புரட்சி வேண்டும்; விடுதலை... விடுதலை... விடுதலை."

ஒரு சிறுவன் நூலை வெட்டியிழுத்தான். ஆண் காற்றாடி விடுதலையடைந்தது. மேலே மேலே போக வேண்டிய அது கீழே கீழே பறந்து வந்தது; சாத்தியமற்ற இலட்சியக் கனவு கண்டவர்கள் போல.

தென்னோலையொன்று அதன் போக்கைத் தடை செய்தது. "நீயே சரண்" என்று ஆண் காற்றாடி, தென் னோலையில் சிக்குண்டு தலைகீழாகத் தொங்கி தவம் செய்தது. தவத்தால் ஞானம் மலர்ந்தது.

அப்போது காதலியின் **அந்தக்** குரல் ஒலித்தது: “வரம்பை மீறினால் சுதந்திரம் **ஏது?** எங்களுக்குள்ள தனித்தன்மை ஏது?”

“உண்மை, உண்மை, முக்காலும் உண்மை” என்று ஈனக்குரல் கொடுத்தது, ஆண்.

பெருங்காற்று வீசியது.


ஆண் காற்றாடி மரத்துடன் மோதியது. அடுத்த கணம் காற்றாடி மறைந்தது. சில நூலும், குச்சிகளும் தெரிந்தன.

பெண் காற்றாடி தன் பதிக்காக ஏங்கியது; கட்டற்ற சுதந்திர வெறிக்காக வருந்தியது. ஆனால் உயிர்வாழ விரும்பவில்லை; அது ஒரு பத்தினி.

பெருங்காற்று வீசியது.

பெண் விடுதலை பெறவில்லை; தற்கொலை செய்து கொண்டது.

தலைகீழாகக் கரணம் அடித்தது; தென்னைமரம் ஒன்றில் தொங்கித் தூக்குப் போட்டுக் கொண்டது.





# மின்னற் கீற்று

ஓர் இரவு. மாய இருள் உலகை மூடி, தானே உலகமாய்க் காட்சியளித்தது, அறியாமையென்ற அந்தகாரத்தைப் போலே.

வானத்தில் நட்சத்திர வெண்மலர்கள் மலர்ந்திருக்க வேண்டுமே; அவைகளும் மலரவில்லை. தாரகைச் சிறுசுடர்கள் கண் சிமிட்டி, அந்தக் காரிருளின் வலியைக் குறைத்திருக்க வேண்டுமே; அவைகளும் அணைந்து விட்டன.

சூல்கொண்ட கார் மேகங்கள் வான வெளியை தமதாக்கிக் கொண்டன. அவை இருளுக்கு முழுக் கருமை தீட்டி, கண்ணொளி தானும் நுழையாக் கனத்த இருளாக்கி விட்டன.

இப்பொழுது, நம்பிக்கை என்ற சிறு ஒளி தானும் காணாத மனித மனமாகி விட்டது உலகம்.

வானத்தையும், பூமியையும் ஒன்றாக்கி, எங்கும் வியாபகமாய், தானே ஏகமாய், பயங்கரமாய்க் காட்சி தந்தது இருள்; காரிருள்; கனத்த இருள்.

அந்தக் கனத்த இருளைக் கிழித்துக் கொண்டு, மேலை வானிலே ஒரு மின்னற் கீற்று சிரித்தது; ஒருகணம் உலகமே ஒளி வெள்ளத்தில் மிதந்தது. இந்தக் கோலக் காட்சியை அந்த மின்னல் கண்டது.

3

மின்னலின் மனத்துள் ஒரு துடிப்புப் பிறந்தது. அது அகம்பாவமாய் முளைத்து, 'நானாய் வளர்ந்து, பொறாமையாய் மலர்ந்தது.

மீண்டும் மின்னல் மின்னியது; தொடர்ந்து இடி இடித்தது.

மின்னல் சிரித்துக்கொண்டு, பெருங் குரலாற் பேசியது. "சூரியனாம் சூரியன்; அவன் சக்தி மிகுந்தவனாம்; அவன் ஒளி, உலகத்துக்கு மலர்ச்சி அளிக்கிறதாம்; உயிர்ப்பு ஊட்டுகிறதாம்; இயக்கம் கொடுக்கிறதாம். என்ன அறியாமை! இதோ நான் இந்த உலகத்துக்கு உயிர்ப்பும், இயக்கமும் கொடுக்கிறேன்."

மின்னலுக்கும் இருளுக்குமிடையிற் பெரும்போர் மூண்டது. மின்னல் தன்னொளியால் உலக இருளைத் துடைக்க முயன்றுகொண்டிருந்தது. ஆனால், பாவம்! மின்னல் தன் ஆயுளின் அளவை உணரவில்லை!

மின்னல் மின்னியது; ஒருகணம் இருள் விலகியது; அடுத்தகணம் இருள் முன்னிலும் பார்க்க மகா பயங்கரமாய் உலகை அணைத்துக் கொண்டது. இந்தப் பலப்பரீட்சை தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது.

மின்னல் சலித்துவிடவில்லை; முயன்றது; 'முயற்சி திருவினையாக்கும்' என்று உணர்ந்தது. விடியுமட்டும் முயன்றுகொண்டேயிருந்தது.

பொழுது புலர்ந்தது.

கீழ்வான மங்கை, மஞ்சள் குளித்து, செஞ்சாந்து பூசி, மலர்ச்சி பொங்கச் சூரியதேவனை வரவேற்றாள்.


சூரியன் மெல்ல மெல்ல மேலே வந்தான். அவன் ஒளி உலகிற் பரந்தது; இருள் விலகியது; உலகம் மலர்ந்தது; உயிர்த்தது; இயங்கியது.

காலை ஒளியிலே ஒப்பற்ற கலாசிருஷ்டியாய்க் கிடந்த உலகம் மின்னலின் கண்ணை உறுத்தியது; "ஆ! என்ன அழகு; என்ன கோலக்காட்சி," என்று வியந்தது. முன்னே, இருளைப் பிளந்து தான் தோற்றுவித்த அந்தக் காட்சியையும், இப்போது உயிரோவியமாய்க் கிடக்கும் உலகக் காட்சியையும்

தன்னுள் தானே ஒப்பிட்டுப் பார்த்து வியந்தது; என்றாலும், உண்மையை உள்ளத்தில் நுழையவிடாமல் தன்மானம் தடுத்தது. அதனாலே, மின்னலும் மின்னிக் கொண்டே இருந்தது.

ஆதவன் முழுச் சோபையுடன் பொலிந்தான்; அந்தப் பொலிவிலே பிறந்த ஒளிக்கு முன் நிற்கமுடியவில்லை அந்த மின்னலால். மின்னல் தலைவணங்கியது. அப்போதுதான் மின்னலின் அகங்காரம் அழிந்தது; செருக்கு ஒழிந்தது; 'நான்' மறைந்து தெளிவு பிறந்தது. மின்னல் துவண்டுபோய்ச் சூரிய தேவனின் காலடியில் விழுந்தது. பக்தனின் மனோ நிலையில் அழுது புலம்பியது. "சூரிய தேவே! போற்றி; போற்றி. நீ மெய்யறிவு; தெளிவின் நிலைக்களன். நான் புல்லறிவு; அகங்காரச் சின்னம்; ஒளிக்கீற்றான இருள். உன் சக்தி அளப்பரிது; அது இருளைக் கெடுக்கும். நீ என் மன இருளையும் கெடுத்துத் தெளிவூட்டினாய். நீ வாழ்க! வாழ்க" என்றது.

சூரிய ஒளி, மின்னொளியைத் தன்னொளியாக்கிக் கொண்டது; மின்னல் மறைந்தது. சூரியன் மெய்ஞ்ஞானி யின் அடக்கத்தோடு, சாந்தம் பொலிய மேலே மேலே வந்து கொண்டிருந்தான்.





**மனித** மகா சக்தியின் திருவடி தீண்டாத கானகப் பகுதி அது. அதனால் அங்கு அச்சக்தி எதனையும் மனம் கொண்டவாறு ஆக்கியோ, ஆக்கியதனை அளித்தோ, கால மாற்றங்களினால் விளைந்து வளர்ந்த வெறுப்பால் அழித்தோ திருவிளையாடல் புரியவில்லை. அதனால், இயற்கைப் பெருந்தேவி சிருட்டித்த இயற்கை, நிறைவோடும் தனித்துவத்தோடும் குடியிருந்தது. அதற்கென விதித்த தேவன் வராமையால் அதன் கன்னித் தன்மை கழியாமற் காலக் கணக்கில் நீண்டு கொண்டே போயிற்று.

எத்தனை எத்தனையோ இயற்கையின் மர்மங்கள் குமைந்துகிடந்த அவ்வனத்தின் இதயப் பகுதியைக் கூறுசெய்து கொண்டு ஓர் ஆறு ஓடிற்று. அது தனக்குச் சேய்மையில் எங்கெங்கெல்லாமோ மனது பொழிந்தபோது, வந்ததனைத்தையும் வரவேற்று, வாரி வழங்கி, நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் பெருகி பேராறாய்த் தோன்றும்; மற்றக் காலங்களில் பண்புடையாளன் வறுமை போலச் சுருங்கக் கூடிய அளவு சுருங்கி மலைப்பாம்பாய் நெளியும்.

4

அந்த ஆற்றின் ஒரு கரையின் ஒரு பகுதியை வனமுல்லையொன்று சுதந்திரித்து ஆட்சி செய்தது. அங்குள்ள ஒவ்வொன்றும் மற்றொன்றினால் விலங்கிடப்படாமல், தன்

னிச்சையாக, இயற்கை விதித்த விதிப்படி வாழ்ந்தமையால் ஒவ்வொன்றும் தன்னளவில் ஆட்சிக்குரிமை பூண்டிருந்தது. வனமுல்லையும் தன்னளவில் அரசியாய் அங்கு கொலு விருந்தாள்.

நல்லுணர்வுகள் மனத்தில் விளைகையில், வளர்கையில், முதிர்கையில், முதிர் பருவத்திற்கூட இளமையுஞ் செழுமையும் மாற்றேறிக் காணல் போலே, காலங் கண்ட அவ்வனமுல்லை செழித்து மதர்த்து இளமைத் தோற்றங் கொண்டிருந்தது. முதுமையில் இளமை முற்றி நிற்க, அதற்குக் காயகல்பம் அளித்த் மருத்துவன் அந்த ஆறா? வேறொன்றா? பசுமையில் பழுத்த பூரண பசுமை, மதர்ப்பில் முற்றிய பூரண மதர்ப்பு, செழிப்பிலே செழித்த பூரண செழுமை என்பனவற்றுக்கு இலக்கியம் அவ் வனமுல்லை.

அது அல்லி மனோபாவங் கொண்டு, கொழுகொம் பெதனையும் தேடி அலையாது, தருக்கி, தான் பெற்றுவிட்ட கொடிகளில் ஒன்றை மற்றொன்றுக்குத் துணையாக்கிச் சுற்றித் திரண்டு படர்ந்தும், நிமிர்ந்து வளர முயன்றும், பச்சைப் பாம்புகள் பிணைந்து நெளிவது போல, தரையிலே இளங் கொடிகளைப் பிணைத்து ஓட விட்டும் வளர்ந்திருந்தது.

வான்முகில்கள் நிறை சூலிகளாய் மெல்லென ஆடி யசைந்து வரக் கார்காலம் பிறந்தது.

வீண் பழி கேட்ட பத்தினிப் பெண்ணின் உள்ளுணர்ச்சி வேகம்போல, அந்த ஆறு புதுவெள்ளத்தாற் கலங்கி, சுருண்டு, புரண்டு பொங்கி ஆரவாரித்துக் கரைதொட்டுப் பாய்ந்தது. அது, வனமுல்லையின் அல்லி ராட்சியத்துக்கு அடங்கி அதன் பாதங்களைக் கழுவிக்கொண்டு சென்றது.

எந்த "அல்லி"களும் பருவம் வாய்த்த வேளையிலே உள்ளம் துடித்து, பின் கொந்தளித்து, பின் ஓலமிடும். அந்த ஓலத்தின் விளைவாய், அவர்கள் மெய்ப்பாடுகள் சிலவற்றை யேனும் தோற்றுவிக்காமல் இருக்கமாட்டார்கள்.

கார்காலம் வனமுல்லைக்குத் தக்க பருவ வேளையாய் வந்து வாய்த்தது. அதனால், அது மலர்ச்சி பெற்றுச் சிரித்தது. சிரிப்பு எண்ணிலடங்கா மலர்களாய் அதன் அங்கமனைத்தும்

விகசித்தது. அரும்புகளும், போதுகளும், மலர்களும், அலர்களும் பசுங்கடலின் மீது தெளித்துவிட்ட வெண்ணுரை போலக் காட்சியளித்தன. ஊழ்த்த மலர்கள் அதனடியில் நிலபாவாடை விரித்திருந்தன. இப்போது வனமுல்லை அழகுக் கொள்ளை.

ஒரு நாள், அந்த ஆறு, வீட்டு முல்லை மலர் மாலை ஒன்றைத் தன் அலைக்கரங்களில் ஏந்திக்கொண்டு வந்தது, 'பச்சை' சிசுவைத் தாய் ஏந்தி வருவது போல. ஏந்தி வரும் இயல்பு அந்த ஆற்றுக்கு பொங்கிவரும் அந்தக் காலத்துக் குணமாகாதே! ஒருவேளை, அதன் மென்மையைப் பரிசித்தும், தூய்மையை உற்றுணர்ந்தும் அறிந்துகொண்ட ஞான விளைவு தான் அதற்குக் காரணம் போலும்.

அந்த இடத்தில் வந்ததும் அந்த ஆறு குறும்புக்காரக் குழந்தையைப் போலச் சுழித்தோடி, அம்முல்லை மலர் மாலையை வனமுல்லையின் பாதத்திலே, நிலபாவாடையின் மீது கிடத்திவிட்டது.

அந்த முல்லை மாலை ஒரு பெண்ணின் கொண்டை மாலை. வாழ்க்கையின் இன்பதுன்பக் கூறுகளின் சுவை நுகர்ந்த அனுபவஸ்தர்களிடம் கவிந்து கிடக்கும் ஒருவகை வாட்டமே, அவர்களுக்குப் பெருமையையும் பொலிவையும் அளிப்பதுபோல, அந்த வாட்டமடைந்த மாலையிலும் ஆத்மார்த்தமான களை சோபித்தது.

வாடி நிறம் மங்கிய அதன் தோற்றத்துக்காக கணப்பொழுது கூடப் பார்க்கப் பொறுமையற்றுக் குலுங்கிய வனமுல்லை, "ஓ! ஆறே, என் தூய்மையான பேரெழில் இதனால் களங்கமடைவதை நீ அறியாயோ; கொண்டு வந்த இதை நீயே கொண்டு சென்றுவிடு" என்று அலறியது.

கற்பாறையிலேறிக் குதித்து, ஆறு சிரித்துக் கொண்டே, "இது என்று கூறாதே, இவள் என்று கூறு. இவள் உன் தங்கை; உங்களை ஒன்று சேர்த்த பாக்கியம் என்னது; பிறகு வருவேன்" என்று சொல்லிச் சென்றது.

துல்லியமான தூய்மையிலே படிந்துவிட்ட பொட்டுக் கறைபோல அம்முல்லை மாலை வனமுல்லைக்குத் தோற்றந்

தந்தது. அதைச் சகிப்பது, சாவை அணைவது போன்ற வெறுப்பை அளித்தது.

"ஏய்" வனமுல்லையிடமிருந்து துடுக்காகத்தான் வார்த்தை வெளிப்பட்டது. "சொந்தம் பந்தம் என்று கூறிக் கொண்டு இங்கே விழுந்து கிடப்பது என்ன சூதோ; என்ன சூழ்ச்சியோ?"

"சூது, சூழ்ச்சி என்ற பதங்களின் அர்த்தம் இன்னதென்றே எனக்குத் தெரியாத போது, அவை என்னளவில் வெறும் ஒலிகள்தாம்."

"அப்படியானால், சொந்தமும் பந்தமும் எங்கிருந்து வந்தன?"

"நீயும் நானும் எல்லாவகையாலும் ஒரே அச்சில் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் போலிருக்கிறோமாம்."

"என்ன, எனது ஈடுமெடுப்புமற்ற பவித்திரமான அழகினுக்கும் உன்னுடைய அழியும் அழகினுக்கும் ஒற்றுமை யுண்டென்று முற்றிய அறிவிலிகளும் கூறார்களே."

"இப்போதிருக்கும் என் நிலை அப்படிப்பட்டது; நான் வந்த நெடுவழி அதற்கு ஒரு காரணம்; அன்றியும்... அனுபவம்..."

"ஓகோ, அனுபவமா? அதன் பொருள் தெரியுமா உனக்கு? காலங்கண்ட எனக்கு, அனுபவம் கற்பிக்க ஒரு குருவை இன்றுதான் கண்டு கொண்டேன்."

"அக்கா, அனுபவம் காலமுதிர்வால் மாத்திரம் உண்டாவ தில்லை; இன்ப, துன்பங்களின் பலபல கோலக் காட்சிகளைக் கண்ட, கேட்ட, உற்றுணர்ந்த அறிவால் ஏற்படுவது; இது என் சித்தாந்தம்."

"என்னடி பிதற்றுகிறாய்? என்னளவில் இன்பம் என்ற ஒன்றுதான் முழுமை; துன்பம் என்ற சொல்லே எனக்குப் புதுமை."

"அக்கா, இன்பத்தின் குளிர்மையிலும் பார்க்க, துன்பத் தின் சூடுமேல். துன்பம் சுடச்சுட சுடப்பட்டது ஒளிவிடும். அன்றியும் உனது முழுமையான இன்பம், அனுபவத்தின்

ஒரு பின்னமே. பருவம் வந்து வாய்த்த வேளையிலே மலர்ந்து செழிப்பதுதானே உன்னளவில் இன்பப் பரிபூரணம்?"

"அதைவிட வேறென்ன உண்டு?"

"எத்தனை எத்தனையோ உண்டு!"

"என்னடி உளறுகிறாய், நரைமூதாட்டி போல. அத்தனை அத்தனையையும் நீ கண்டு கொண்டாயா?"

"அப்படிக் கூறிக்கொள்ள என் எள்ளத்தனை அறிவு இடங்கொடுக்கவில்லை. ஏதோ சிலவற்றைக் கண்டு கேட்டறிந்ததுண்டு; சிலவற்றை உற்றுணர்ந்து அறிந்ததுண்டு; ஏதோ சதகூறிட்ட கோணளவு தெரியும்."

"எங்கே அதையுந்தான் பார்த்துவிடுவோமே."

"அந்த வீட்டையும் அங்கிருந்த 'அவளை'யும் என்னால் மறக்க முடியாது. அவள் சின்னஞ்சிறு கிளியாய்த் திரிந்து, பறந்துவரும் சிட்டாய், மருட்சி கொண்ட மானாய், மயிலாய் ஈற்றில் மணப்பெண்ணாய், பருவங் காட்டிய வழிநடந்தபோது அவள் காட்டிய கோலங்கள், நீங்கா நினைவுகள். எனக்கும் அவளுக்கு முள்ள உறவு முறைகள் பலப்பல. அவள் எனக்கு அன்பூட்டி வளர்த்த தாய்; நெறிகாட்டிப் படர்ந்து வளர வழி செய்த தந்தை; தன் அந்தரங்கத்தைத் திறந்து காட்டிய அன்புத்தோழி; அணைத்து முத்தமளித்து என்னைப் பரவசப் படுத்திய குழந்தை.

"என்னை மலர்வித்த அந்த முதற்கார் காலம் என் நினைவிலே சாகா வரம் பெற்றுவிட்டது.

"நான் மலர்ந்த அன்று அவள் அடைந்த மகிழ்ச்சிப் பிரவாகத்துக்கு அணையில்லை. கன்னிப் பெண்ணான அவள், குழந்தையாக மாறிக் குதூகலித்தாள்.

"நான் யாருக்காக மலர்ந்தேன் என்ற வினாவுக்குரிய விடை அந்த வேளையில் எனக்கு விளங்கவில்லை. ஆனால், யார் தீண்ட வேண்டுமென்று உள்ளந் துடித்ததோ அவளே என்னைத் தீண்டினாள். என் மலர்களைப் பறித்துத் தன் அங்கைகளிலே தாங்கிக்கொண்டு, வீட்டினுட் சென்றாள்; அங்கே பாலமுருகன் குஞ்சிரிப்போடு நின்றான். அவன் மலரடிகளில் என்னைத் தூவி வணங்கிவிட்டு, ஒரேயொரு

மலரை எடுத்துத் தன் கூந்தலில் வைத்துக் கொண்டாள். என்றுங் கண்டறியாத சாந்தி என்னுட் படர்ந்தது.

"மலர்ந்து சொரிவதிலே பேறில்லை; உரிய உரிய இடங்களை அடைந்துவிடுவதிலேயே திருப்தி பிறக்கின்றது.

"ஒருநாள் மங்கலப் பெருவிழா எடுத்து, கன்னியான அவள் சதியாகித் தன்பதியிடம் சேர்ப்பிக்கப்பட்டாள். அவளது கன்னிமைக் கனவுகள் யாவும் சங்கமித்து நனவாகிவிட்டன. இப்பொழுது ஒன்றான அவள், அவனோடு ஒன்றித்து ஒன்றாகித் தன்னை அர்ப்பணித்து நிறைவு பெற்றுவிட்டாள்.

"அப்பொழுது, என்னிலே கொள்ளை கொள்ளையாக அரும்புகட்டி, வாய்விட்டு, மணம் பரப்பி மலர்கள் குலுங்கத் தொடங்கின. ஒன்றுதானும் ஊழ்த்த மலராய் நிலத்தில் விழ அவள் தாங்கமாட்டாள். ஒரு மாலை கட்டிப் பால முருகனுக்குச் சூட்டி விடுவாள்; இன்னொரு மாலை கட்டித் தன் தேவன் கண்டுகளித்த கூந்தலிலே சொருகிக் கொள்வாள்.

"ஒருநாள் அவளும் அவனும் மாலை நேரத்திலே வெளியே புறப்பட்டனர். இந்த ஆறு வரும் வழியிலே வீதியைக் குறுக்கிடும் இடத்திலே ஒரு பாலம் உண்டு. அழகு கொஞ்சும் இடம் அது. சௌந்தரிய நர்த்தனத்தின் நிறைவை அங்குக் காணலாம். மாலை மயக்கிலே, அவனும் அவளும் ஒருவருள் ஒருவர் குடியிருந்து, வார்த்தைக் கருவியில்லாமல் மனக் கருவியாற் பேசிப் பழகிக் கொண்டிருந்தனர்.

"மௌனம் கலைய, அவள் கூந்தலில் ஒய்யாரமாய் இருந்த என்னைப் பார்த்துக்கொண்டே பேசினான் அவன்.

"அர்த்த சந்திர வட்டமாய்ச் சூட்டப்பட்ட இந்த மாலையால் உன்னழகு சோபிக்கிறதே...'

"அவளால் அதைப் பொறுக்க முடியவில்லை. 'என்னால் மாலையா? மாலையால் நானா?' என்று கண்ணைக் கசக்கினாள். அடுத்தகணம் நான் ஆற்றில் வீசப்பட்டேன்.

"அவன் சிரித்தான். சிறிதுபோது கழித்து அவளும் சிரிக்கும் சத்தம் கேட்டது.

"ஆறு என்னைத் தாங்கியது. அது தன்னொடு எங்கெங்கோ என்னையும் அழைத்துச் சென்றது. எங்கெல்

லாம் அது பயன்பட வேண்டுமோ, அங்கெங்கெல்லாம் அது சென்றது. வாய்க்கால் வழியோடி, ஏரி – குளங்களை நிறைத்துவிட்டு வந்தது. அதன் பயன் கருதாக் கொடையை மாஞ்சோலைகளும், தென்னந் தோப்புகளும், செந்நெற் கதிர் சுமந்து நிற்கும் வயல்களும் வாழ்த்தி வணங்கிப் பல்லாண்டு பாடின."

"நீ, அவள், ஆறு... மூவரும் யார் யாருக்கோ அர்ப் பணமாகி... ம் நீங்கள் பாக்கியசாலிகள்..." வனமுல்லைக்கு ஞானக்கரு சூல் முற்ற, மனம் இளைத்தது.

"அக்கா, ஆறு மீண்டும் என்னை அழைக்கிறது. நான் வருகிறேன்."


"வேண்டாம், நீ போகக்கூடாது; போவதற்கு நான் அனுமதிக்கப்போவதில்லை"


"அப்படியென்றால்..."

"நீ பெரியவள்; உன் முன்னிலையிலே நான் மகா சிறியவள். உன்னை வணங்காவிட்டால் என் ஆத்மா சாந்தி யடையாது."

அப்போது, ஆற்றின் அலைக்கரமொன்று முல்லை மாலையை ஏந்திக்கொண்டு சென்றது.

"அக்கா, யாராலும் எக்காலத்திலும் வணங்கப்படும் தகுதி எனக்கு வேண்டாம்; நான் அர்ப்பணமாகும் பேறு கிடைத்தால் அதுவே போதும்."





5

# தொண்டர் இருவர்

மார்கழி மாதத்திலே ஒரு நாட் காலைப் பொழுது பனித் தேவன் வீசியெறிந்து விட்ட ஒளி முத்துக்களைச் சுமந்துகொண்டு பயிர் பச்சைகளெல்லாம் பூரிப்பாற் சிலிர்த்து நின்றன. ஒவ்வொரு பூண்டும் செடியும் கொடியும் மரமும் பச்சைப்பட்டுடுத்தி முத்தாபரணம் பூண்டு பருவத் தளதளப்போடு யாரைப் பார்த்தும் கொள்ளைச் சிரிப்பு சிரிக்கின்றன! பூமித்தாயின் நெஞ்சு குளிர்ந்து விட்டாலே அவள் மடியிலுள்ள எல்லாமே எவரெவரையெல்லாமோ பார்த்துச் சிரிக்கத் தொடங்கி விடுமோ! இல்லாவிட்டால், அந்த வெறும் வெளியிடத்துக்கு இத்தனை அழகு எங்கிருந்து வந்தது!

மரகதக் கம்பளத்தின் மீது, அளவாகத் துருவியெடுத்த தேங்காய்ப் பூவைக் கலையுணர்வோடு சிதறி எறிந்துவிட்டது போல, முடிதும்பைச் செடிகள் காடாய் வளர்ந்து, மலர்ந்து காட்சியளித்தன. பெற்ற பூமித்தாய்க்கு முடிதும்பையும் சரி; மோகன எழில் காட்டும் ரோஜாவுஞ் சரி; அதற்கதற்குரிய தனித்துவத்தையூட்டி வளர்த்து விடுவதுதான் அவள் தர்மம்.

இந்த முடிதும்பைக் காட்டிலேதான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. அங்கு இரு பெருந்தொண்டர்கள் சந்தித்தனர். ஒரு தொண்டன் மண்புழு; மற்றத் தொண்டன் வண்ணத்துப்பூச்சி.

இருவருக்கும் அதுதான் முதற்சந்திப்பு. இருவரையும் அறிமுகப்படுத்தி வைக்க மூன்றாவது ஆள் அங்கேயில்லை. தனிப்பட்ட முறையில் பரிச்சயமில்லாது போனாலும், வண்ணத்தி இனத்தைப்பற்றி மண்புழு நிறைய அறிந்திருந்தது. மண்புழு இனத்தைப் பற்றி வண்ணத்தியும் நிறையக் கேள்விப்பட்டிருந்தது. அறிந்ததோடும் கேள்விப்பட்டதோடும் இருவரும் அமைதியடைந்தனரேயன்றி, நேருக்கு நேர் எவரும் எவரையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.

மண்புழு தன் கண்ணோடு மனத்தையும் கூட்டி, வண்ணத்தியிற் பதித்து அதனழகை ரசித்து அளவிட்டுக் கொண்டிருந்தது. வண்ணத்தியும் மண்புழுவைக் கடைக் கண்ணாற் பார்த்துவிட்டு, ஒரு மலரை ஊதித் தேன் பருகத் தொடங்கியது. ஆனால், இருவருக்கும் உணர்ச்சி களும் எண்ணங்களும் தத்தம் மனத்தளவில் அபிப்பிராயங் களாய்ப் பிறந்து பிறந்து மடிந்து கொண்டிருந்தன.

"ஆகா என்ன அழகு; என்ன அழகு" என்று வியந்தது மண்புழு.

"சீச்சி என்ன அவலட்சணம்; என்ன கோரம்" என்று மனஞ்சுளித்தது வண்ணத்தி.

'ரோசாவின் வண்ணமும் அனிச்சத்தின் மென்மையும் செந்தாமரையின் எழிலும் இச்சிறு உடலில் எப்படித்தான் வாய்ந்தனவோ? முற்றிவிளைந்த கருங்காலி மரத்துண்டில், யாரோ ஒரு அபூர்வ சிற்பி இதன் கால்களையும் கொம்பு களையும் வடித்துப் பொருத்தி இருக்கிறான். அந்த பெரிய கருமணிக் கண்கள் மீனாட்சி அம்மையின் கண்களை யல்லவா நினைவுபடுத்துகின்றன. குழந்தை ஓவியன் ஒருவன் தன் மனப்போக்கின்படி, கரும்புள்ளி, வெண்புள்ளி குத்திவிட்ட செவ்வரத்தை இதழ்களை இதற்குச் செட்டைகளாகக் கொடுத்துவிட்டான். தன்னை உடையவனை அழகுலகத்துக்கு அழைத்துச் செல்ல அவை துடிக்கின்ற துடிப்பு... அப்பப்பா...' என்று எண்ணிக் கொண்டு மண்ணிலிருந்து முற்றாக வெளி வந்து, அந்த முடிதும்பை நிழலில் சுருண்டு படுத்துக் கொண்டது மண்புழு.

'மண்ணைக் குழைத்துப் பூசிக்கொண்டு, தலையும் வாலும் காலும் இல்லாமல் அங்குண்டமாய்... தூ... இதுவும் ஒரு சீவனா? நடக்கத் தெரியாமல், பறக்க முடியாமல் வயிற்றை மண்ணில் தேய்த்து இழுத்துக் கொண்டு போவதைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது. இப்படியும் ஒரு வாழ்க்கையோ?' என்று எண்ணிக் கொண்டது வண்ணத்தி. அது மண்புழு கிடந்த முடி தும்பைக்குக் கிட்டபோக மனம் கூசினாலும், தன் சுவதர்மத்தைக் காப்பதற்காக, அது அந்த முடிதும்பையின் ஒரு பூவில் மெத்தென வீற்றிருந்தது. மண்புழு ஆனந்தம் பொங்க, ஒருமுறை கூசிக்குறுகி நிமிர்ந்து கிடந்தது.

"தேவனே, நீ யார்? சுவர்க்கத்திலிருந்தா வருகிறாய்?" தன்னுடைய மகிழ்ச்சி - வியப்பு - குழைவு எல்லாவற்றையும் சொல்லிலே தேக்கிக் கேட்டது மண்புழு.

வண்ணத்துப் பூச்சி தன்னை அழகனென்று எல்லோரும் கூறக் கேட்டிருக்கிறதேயன்றி எவரும் தன்னைத் தேவனாக்கிக் கூறக் கேட்கவில்லை. அதற்குப் பெருமை தாங்கவில்லை.

"ஆமாம்; நான் மலர் மங்கைகளுக்காகப் படைக்கப் பட்ட அழகுத்தேவன்; இந்த மண்ணைச் சுவர்க்கமாக்கு பவன்; ஆனால் இந்த மனிதருக்கு எதுவுமே தெரிவதில்லை. என்னைச் சாதாரணமாக வண்ணத்துப்பூச்சி... பூச்சி... என்றே அழைக்கிறார்கள்" என்றது வண்ணத்தி.

"ஓகோ, நீங்களா அந்த வண்ணத்தி?"

"ஏன்? என்னைத் தெரியுமா உனக்கு?"

"இல்லை உங்களையும் உங்கள் இனத்தாரையும் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை; ஆனால் கேள்விப்பட்டிருக்கிறேன்; நான் தான் மண்புழு."

"என்ன கேள்விப்பட்டிருக்கிறாய்?"

"நீங்கள் சமூகத் தொண்டர்களாம்; உங்கள் பகட்டையும் பணியாற்றும் பண்பையும் பார்த்து உலகம் உங்களைப் புகழு கிறதாம். புல் பூண்டுகள்கூட வாழ்த்துகின்றனவாம்."

"ம்... வேறென்ன கேள்விப்பட்டிருக்கிறாய்?" மதுவால் மயங்காத வண்ணத்தி, புகழால் மயங்கி, மீண்டும் அதைக் குடிக்க அவாக்கொண்டு கேட்டது.

"கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?"

"இல்லை; சொல்" மண்புழுவின் பீடிகையைப் பார்த்து வண்ணத்தியின் மனம் தளர்ந்தது.

"உங்கள் தொண்டு வாழ்க்கையிலும் போட்டியுண்டாம். யாரோ தேனீ என்றொரு தொண்டனாம். வருடம் முழுவதும் பூவும் பிஞ்சும் குலுங்க உதவு வானாம்... நீங்கள்..."

"ஏ, அற்பனே என்ன சொன்னாய்?..." தன்னை யுணர்ந்த உணர்வில் தனக்குப் போட்டியாக, தன்னிலும் சிறப்பாக ஒருவனுண்டு என்பதைக் கேட்டதும் வண்ணத்தியின் உள்ளம் குமுறியடித்தது.

"தேவரீர், என்னை மன்னிக்கவேண்டும். நீங்கள் அற்ப ஆயுட்காரராம். உங்கள் தொண்டு புல் பூண்டுகளோடொழிய, அவர்கள் பேதாபேதமின்றித் தொண்டு புரிவார்களாம்."

வண்ணத்தியாற் பொறுக்க முடியவில்லை. செல்லா விடத்துச் செல்லவேண்டிய தன் சினத்தைச் செல்விடமாகிய மண்புழு மேற் செலுத்தத் துடித்தது.


"ஓகோ, அப்படியா? ஏளனமா பண்ணுகிறாய்? மண்ணைத் தின்று, மண்ணை உழுது, மண்ணுள் வாழும் உனக்கு, மதிமயங்கிவிட்டதா? அற்ப புழுவே" என்றது வண்ணத்தி. அளவற்ற கோபத்தால் இறக்கைகளை அடித்துக் கொண்டு மீசை துடிக்க உருத்திர தாண்டவமாடியது வண்ணத்தி.

சொல்லம்புபட்ட மண்புழுவும் மனதுள்ளே துடித்தது. ஆனால் அடக்கமாக, "ஆமாம், நான் மண்ணைத் தின்று, மண்ணை உழுது, மண்ணுள் வாழ்ந்த அந்த வாழ்வையே தொண்டாக்கிக் கொள்வதில் எனக்கு ஆத்ம சாந்தி கிடைக்கிறது. பூமித்தாய் மடியிற் கிடந்து அவள் செழித்துப் பூத்துக் கொழிப்பதற்கு நானும் அணுப்பிரமாணம் உதவி புரிகிறேனென்றால் அதுவே போதும்" என்றது.

வண்ணத்துப் பூச்சிக்கு அங்கே இருக்கச் சிறிதும் பிடிக்க வில்லை. மதுவெறியும், புகழ்வெறியும் இனவெறிக்குள் ஐக்கியப் பட்டுவிட, உலகையே அழித்துவிடும் எண்ணத்திற் போக எழுந்தது.

அந்தக் கணத்தில், யாரோ ஒரு பையனது வலைக்குள் சிறைப்பட்டது. விரும்பியோ, விரும்பாமலோ, அவனது கொள்கையை அனுசரித்து, அவன் சேமித்து வைத்திருந்த மற்றைய வண்ணத்துப் பூச்சிகளுள் ஒன்றாகிவிட்டது அது.

அந்தக் காட்சியைப் பார்த்து மண்புழு பரிதாபப் பட்டது. ஏதேதோ நினைத்துக்கொண்டு மண்ணைத் தின்று, மண்ணை உழுது, மண்ணுள் வாழ்வதற்காக மண்ணுள் நுழைந்தது.





# பாழ் நிலம்

பொறாமை பாசி படர்ந்த உள்ளம் போலச் சிறு நெருஞ்சிக் கொடி படர்ந்த வெறும் பாழ் வெளியாய்க் கிடந்தது அந் நிலம். ஆண்டவன் நியதிப்படி அந்நிலம் எவர்க்கும் சொந்தமற்றதாயினும், மனிதன் விதிப்படியும் கணித்தபடியும் சொந்தக்காரன் என்று ஒருவனும், பத்து ஏக்கர் என்று ஒரு அளவும் அதற்குண்டு.

அதன் கிழக்கெல்லையில் வாழைத் தோட்டமொன்று, கற்பனைச் செழுமை கொண்ட கலைஞன் உள்ளம் போலப் பசுமையும் பயனும் விளைந்து காணப்பட்டது. தாயாய்க் குலை சுமந்து நிற்பனவும், தாயாவதற்குச் சூல் முற்றி நிற்பனவும், பருவப் பெண்களாய் மதர்த்து நிற்பனவும், சிறுபெண்களாய்த் துடித்து நிற்பனவுமாய்ப் பெண்குலமே குடியிருக்கும் அந்தப்புரமாய் விளங்கியது, அத் தோட்டம். ஆகா! வாழைக்கு அரம்பை என்று பெயர் வைத்தவன் எவனோ, அவன் மகாரசிகன்.

அந்நிலத்தின் தெற்கெல்லையில் ஒரு தென்னந் தோப்பு, தலையிலே அமுத கலசங்கள் சுமந்துகொண்டு, தென்றல் தாளம்போட, அசைந்து ஒசிந்துபாடி ஆடும் நடன மங்கையர் பலர் கூடிய நர்த்தன சாலையாய்க் காட்சி தந்தது.

6

வடக்கெல்லையிலே ஒரு மாஞ்சோலை; பற்பல பறவைகள் மாங்கனி மாந்தி, பழரசம்

பருகி, இளந்தளிர் கோதி, குயிற்பெண்ணாள் கோலக் குர லிசைப்ப இணையிணையாக இன்பக் கதைகள் பேசி மகிழ்ந்து குலாவும் சிருங்கார கூடமாக அது விளங்கியது.

மேற்குப் பக்கத்திலே குறிப்பிடக்கூடிய ஒன்றுமில்லை; ஒரு தெரு மாத்திரம் வடக்குத் தெற்காய் ஓடியது.

அந்நிலத்தைச் சூழ எங்கெங்கும் பூமித்தாய் பொன் பூத்துச் சொரிந்தாள்.

தன்னயல் செழித்துக் கொழிப்பதைக் கண்டேனும் இந்நிலத்தின் நெஞ்சில் உணர்ச்சியூற்று கிளர்ந்தெழ வில்லையே, ஏன்? ஒருவேளை, பொறாமையால் உணர்ச்சி வற்றிச் செத்து விட்டதோ? அன்றி, கால காலமாய் யாரோ எவரோ செய்த கொடுமைகளைப் பட்டுப்பட்டு மனம் மரத்துவிட்டதோ? பாவம்!

அந்நிலத்தின் மேற்கெல்லையில் தெருவோரமாக ஒரு கிழட்டு நாவல் மரம் நின்றது. நீண்டுயர்ந்து, பற்றிப் படர்ந்து தெருவுக்குக் குடைபிடித்துக் கொண்டும், பருவம் வந்த வேளையில் வேண்டியவர்க்கெல்லாம் கருநாவற் கனிகளைத் தந்து மகிழ்ந்து கொண்டும் நின்றது, பேர் பெற்ற வள்ளல்களைப்போலே! அடிமரம், முதிர்ச்சியின் எல்லையைக் கண்டுவிட்டு மேலும் வளர முயல, அந்த முயற்சியின் வேகம் தாங்காமல் புற்றுநோய் வந்து, சதை உக்கிச் சொத்தியது. அதனாலே ஏற்பட்ட பொந்துகளிலே பாம்பும் தேளும் வஞ்சக மனத்தில் நச்சு நினைவுகள் போலக் குடியிருந்து சுகிக்க, நின்றது.

அந்நாவல் மரத்தினயலிலே சிறு எருக்கஞ்செடி ஒன்று தழைத்து நின்றது. அது உலகமறியாக் குழந்தை; உலகத்துச் சூதுவாதுகளையும் நெளிவு சுளிவுகளையும் பட்டறிய இன்னும் வயது வரவில்லை. ஆனால், தானிருக்கும் உலகம் எப்படி யிருந்தது என்ற கதை கேட்டறியும் ஆசை அதன் மனத்தைக் குடைந்து கொண்டிருந்தது. அதைப் பற்றி யாரையாவது கேட்கப்போய் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஏளனத்துக்கும்

ஆளாகவேண்டி வந்தால் மானம் போய் விடுமே, என்றும் சிந்தனை செய்தது.

ஒருநாள் இளங்கன்றான அந்த எருக்கஞ்செடி, பயமறியாது, தன்னயலில் நின்ற நாவலைப் பார்த்து "தாத்தா" என்று கூப்பிட்டது. நீண்டு பரந்து கிடந்த தன் வாழ்விலே, இவ்விதமான தேனூறும் மழலைச் சொல்லின் மாயசக்தியை உணர்ந்தறியாத அந்நாவல், அக்குரல் கேட்டு உடல் சிலிர்த்தது. தன் கிழட்டு உடலிலும் இளமைத் துடிப்பு ஊறுவதைப் போல உணர்ந்தது. அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே "யார்?" என்று கேட்டது.

"ஏன் தாத்தா, நான் தான்; இதோ நிற்கின்றேன்" என்று தன் இலைக்கைகளை ஆட்டிக்கொண்டு குரல் கொடுத்தது.

தன்னெதிரே இளங்கன்றாய், நீறுபூசிய பசிய மேனியோடு, காற்றிலே அசைந்தாடிக்கொண்டு நிற்கும் எருக்கஞ் செடியைக் கண்டு நாவலின் உடல் புளகித்தது. 'என்ன கொள்ளை அழகு!' என்று வியந்தது.

அன்புடன் நோக்கிக்கொண்டே, "என்ன குழந்தாய்...ம் ... நீ எப்போது இங்கே பிறந்தாய்; நான் காணவில்லையே" என்று கேட்டது.

"என்ன தாத்தா அப்படிக் கேட்கிறாய்? பிறந்தேன் என்பதும் இப்போதுதானே விளங்குகிறது. அதைப்பற்றி எனக்கென்ன தெரியும்" என்று சிரித்துக்கொண்டே பதில் கூறிற்று எருக்கஞ்செடி.

"ஆமாம் குழந்தை, எனக்கே என்வயது தெரியா திருக்கும்போது உன்வயதைப் போய்க் கேட்டேன் பார். தெரியாதா? வயது போய்விட்டதோ இல்லையோ; விளங்கியது விளங்காமலும் விளங்காதது விளங்கியும் தெரிகிற வயதல்லவா? அது சரி, எதற்காக என்னை கூப்பிட்டாய்?"

"எனக்கொரு சந்தேகம் தாத்தா."

"ஆகா! முளைத்து மூன்றிலை விடவில்லை; அதற் குள்ளே சந்தேகம் தோன்றி விட்டதோ? அப்படி என்ன பெரிய சந்தேகம்?"

"பார் தாத்தா, அக்கம் பக்கமெல்லாம் பசுமை கொஞ்சும் போது, இந்த நிலம் மாத்திரம் வெறும் நிலமாய்க் கிடக்கிறதே தாத்தா, அது ஏன்?"

"ம்... அதையேன் கேட்கிறாய்? நினைத்தாலே நெஞ்சை என்னவோ செய்கிறது. அது பெரிய கதை?"

"கதையா தாத்தா, சொல்லு; கேட்க ஆசையாயிருக்கிறது."

"இந்தப் பக்கமெல்லாம் வானளாவிய காடாய்க் கிடந்த காலத்திலே நான் ஓர் இளைஞனாக இங்கே நின்றேன். ஒரு நாள் சிலர் வந்து அளவு, எல்லை என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள். பின் பல நாளாக இந்தப் பக்கமெல்லாம் கோடரிச் சத்தம் கேட்டது. பின் பலநாள் செந்நெருப்பு நாக்கை நீட்டி நீட்டி எல்லாவற்றையும் தின்றது. என்னொருவனைத் தவிர மற்றவர்கள் இருந்த இடமே தெரியாது; அவரவர் வந்தவழி அப்படி."

"ம்... பிறகு என்ன நடந்தது தாத்தா?"

"பிறகு அந்தந்தத் துண்டுகளுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு பலர் வந்தார்கள். பார் குழந்தை, யாருக்கு எது சொந்தமென்று தெரியவில்லை! இங்கே நான் நிற்கிறேன். இங்கே நான் நின்று வளரலாமே தவிர, இது எனக்குச் சொந்தமென்று சொல்லலாமோ? எல்லாம் விளங்காப் புதிர். இதை ஏன் சொல்ல வந்தேனென்றால், இந்த நிலத்துண்டுகளுக்குச் சொந்தம் பாராட்டி வந்த எவனும் இன்றில்லை. ஒருவன் வந்தான்; இருந்தான்; போனான். இப்படியே தொடர்ந்தது."

"உன் தத்துவங்கள் எனக்கு விளங்காது தாத்தா. இதோ நாங்கள் நிற்கிற நிலத்தைப் பற்றிச் சொல்லவில்லையே; இது ஏன் இப்படிக் கிடக்கிறதென்றல்லவா கேட்டேன்."

"பார்த்தாயா குழந்தை. ஒன்று கேட்டால் ஒன்று சொல்லுகிறேன். இவையெல்லாம் வயதுக்கோளாறு... ம்... என்ன கேட்டாய்? இந்நிலத்தைப் பற்றியா?"

"ஆம் தாத்தா, ஆம். இந்தத் தாத்தாக்களே இப்படித் தானோ?"

"ஆமாம்; நீயும் ஒரு காலத்தில் தாத்தா ஆகிறபோது தெரியும். அது போகட்டும்... இந்த நிலத்துக்குச் சொந்தங் கொண்டாடி வந்தவன் தென்னம்பிள்ளைகள் வைத்துப் பாடுபட்டான். ஒரு நாளும் மண் வஞ்சகம் செய்யாது. அதிலும் இந்த மண் மகா கொழுப்பு. கொஞ்சக் காலஞ் செல்ல மந்திரமோ மாயமோ என்று சொல்லும்படி பச்சைப் பசேலென்று இளமரங்கள் நிறைந்த தென்னந்தோப்பொன்று உண்டாயிற்று." இப்படிச் சொல்லிவிட்டு நாவல் மரம் சிந்தனையில் ஆழ்ந்தது. எருக்கஞ்செடியால் பொறுக்க முடியவில்லை.

"பிறகு தாத்தா?" என்றது.

"ஆமாம், பிறகு இந்த நிலம் கைம்மாறியது. இதற்குச் சொந்தங்கொண்டாடி வந்தவன் படாடோபப் பேர்வழி. அவன் நிலத்திலே நடப்பதாகவே தெரியவில்லை. பேச்சும் செயலும் எல்லாம் வானவெளியிற் பறப்பதாகத் தோன்றியது. அவன் இங்கேயிருந்த தென்னந்தோப்பைக் கண்டதும் முகத்தைச் சுழித்தான். மறுநாள் இளந் தென்னைகள் அத்தனையும் வேரோடு பெயர்க்கப்பட்டுக் கிடந்து துடித்து அலறின. யுத்த பூமியிலும் மனிதன் இப்படித்தான்; ஒருவனை ஒருவன் வெட்டிக்கொன்று செத்துக்கிடப்பானாம். என்னால் பார்க்கவே முடியவில்லை; கண்ணை மூடிக்கொண்டேன்." - பழைய காட்சியை மீண்டும் நெஞ்சில் கண்ட நாவல் சிலிர்த்துவிட்டு மேலே தொடர்ந்தது.

"கேள் குழந்தாய். பிறகு அவன் பேராதனையிலிருந்தும், கக்கலையிலிருந்தும், பூனாவிலிருந்தும் ஏதேதோ செடிகளும் விதைகளும் வரவழைத்தானாம். கொஞ்ச நாளில் இங்கே மனத்தை மயக்கும் லாவண்யமான பூஞ்சோலை ஒன்று உருவாகியது. மலர்களிலே எத்தனை வகை; அந்த மலர் மணங்களிலே எத்தனை வகை. அதைப் பார்த்துப் பார்த்து நெஞ்சே கொள்ளைபோயிற்று. மனதுக்குள் அவனைப் போற்றிப் புகழ்ந்தேன்." நாவல் நினைப்பில் லயித்துவிட மௌனம் தூங்கியது.

"இந்தத் தாத்தாக்களுக்குப் பழைய நினைப்பு வந்தாற்போதும், அதிலே சொக்கிச் சுகங்காணத் தொடங்கி விடுவார்கள். போ, தாத்தா; பிறகு என்ன நடந்தது?"

"பிறகு வேறொருவன் சொந்தக்காரன் என்று சொல்லிக் கொண்டு வந்தான். அவனும் பூஞ்சோலையைக் கண்டு மயங்கித்தான் போனான். ஆனால், அழகை அனுபவித்துக் கொண்டிருப்பதால் மாத்திரம் வயிறு நிரம்பிவிடாது என்று எண்ணினானோ என்னவோ, மீண்டும் அழிவுவேலை தொடர்ந்தது. பூங்கா படுமரங்களாய் வாடிற்று. அவன் முயற்சி பலநாள் தொடர்ந்து நடைபெற்றது. பிறகு இங்கே ஒரு காய்கறித்தோட்டம் காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் கீரையும் கிழங்கும் காயும் கனியும் பூவும் பிஞ்சுமாய்க் காணப் பட்டன. அப்பொழுது அவனையும் மெச்சிப் புகழ்ந்தேன்."

"ம்... ம்... சொல்லு தாத்தா, சொல்லு."

"சில நாள் சென்றன. மீண்டும் நிலம் கைம்மாறியது. புதிய சொந்தக்காரனுக்குக் காய்கறித்தோட்டம் பிடிக்கவில்லை. அவன் மனதில் என்ன திட்டம் போட்டிருந்தானோ மீண்டும் அழிவும் அனர்த்தமும் நிகழ்ந்தது. அதன்பிறகு..."

"அதன் பிறகு என்ன தாத்தா?"

"அதன் பிறகு எவருமே இந்நிலத்துக்கு வரவில்லை: கைவிட்டுவிட்டார்கள்."

"அதனால், நிலம் இப்படியா பாழாக வேண்டும்?"

"பண்படுத்திப் பாடுபடாவிட்டால் நிலம் பாழாகுந் தானே? குழந்தை, இங்கு வந்த ஒவ்வொருவனும், நிலையற்ற கொள்கைகளோடு வந்து, தான் தான் நினைத்தபடி நிலத்தைப் போட்டுப் புரட்டிமாற்றி என்னென்னவோ செய்துவிட்டுக் கடைசியில் எல்லோரும் போய்விட்டார்கள். வழிப்படுத்த ஆளில்லாவிட்டால் நிலம் பாழாகாமல் என்ன செய்யும்?" என்று பெருமூச்சு விட்டது நாவல்.

"அப்படியா?" என்று திகைத்து நின்றது எருக்கஞ் செடி.

# விண்ணும் மண்ணும்



மாலைக் குழந்தைக்கு அதன் வேளை வந்ததும் உள்ளுணர்வு பெருகிக் கற்பனைச் செருக்குத் திமிர்த்தது. மேற்கு வானிலே ஏழு வண்ணங்களும் ஒன்றுள் ஒன்றாய்க் கலந்து, ஈற்றில் ஒரு வண்ணமாய்க் கிடந்த ஒளிக் கிண்ணத்துள், அது தன் செவ்வல்லி விரல் களைத் தோய்த்து, மென்காற்றில் ஆடி யசைந்து ஊர்ந்த வெண்முகில்களைப் பிடித்து நிறந்தீட்டி, பின்னர் ஓடவிட்டு விளையாடியது. தோய்த் தெடுத்த சுறுசுறுப்பிலே சிந்திவிட்ட வண்ணக்கலவையை தன் குஞ்சுக் காலாலே தேய்த்து மகிழ்ந்தது; சிரித்தது. அந்தச் சிரிப் பிலே கொள்ளை அழகு மலர்ந்தது. அதற்கு விளையாட்டுச் சலித்துவிட வெகு நேரமாக வில்லை. அவையவை அப்படியப்படியே கிடக்க அது அயர்ந்து தூங்கிவிட்டது.

வானமங்கை தன் செல்வமகளின் விளை யாட்டையும் தொட்டது தொட்டபடி கிடக்கத் தூங்கி விட்ட குழந்தை நிலையையுங் கண்டு மெய்சிலிர்த்தாள். பின்னர், மெல்ல இருட் போர்வையாற் போர்த்தி விட்டு, தாறுமாறாய்க் கிடந்த முகிற்குப்பைகளை பெருக்கி வான வெளியைத் தூய்மை செய்தாள். எங்கெங்கு எந்தெந்த நட்சத்திர மணிவிளக்குகளை ஏற்றி வைக்க வேண்டுமோ, அங்கங்கெல்லாம் அவையவற்றை ஏற்றி வைத்தாள். அங்கு அடக்கமானதோர் அழகு விகசித்தது.

கீழ்வானிலே பூரணசந்திரன் தன் நியதி பிசகாமல், முழுப் பொலிவோடு, நிலவு பூத்துக் கம்பீரமாக எழுந்தான். வானமங்கை தன் மைந்தனின் வருகையைக் கண்டு அவனது எழிற் கொள்ளையில் உள்ளம் களிக்க நின்றாள். அவனும் தன் தாயைக் கண்டு, கோலக் குறுநகைசெய்து, தாயைத் தொட்டு "அம்மா" என்றான்.

தாய் ஒன்றும் பேசவில்லை. அவள் உள் முகமாக நினைவைத் திருப்பி, அதனுள் சிறைப்பட்டுத் தவித்தாள்.

தந்தையின் வெம்மையைத் தண்மையாக்கி, கண்ணைப் பறிக்கும் ஒளிவீச்சை மனோகர நிலவாக்கி, தனித்தன்மை பூண இவனால் எப்படி முடிந்தது? இருவருக்கும் உருவ ஒற்றுமையுண்டேயன்றிப் பண்பில் இல்லையே; இருவரும் இரு துருவங்களோ; தந்தையும் மகனும் நேருக்கு நேர் சந்திப்பதும் அபூர்வம். சந்தித்தாலும் மகிழ்ந்து பூரிக்க வேண்டிய இவன் தலைதாழ்த்தி, ஒளிகுன்றி, முகம்வாடி விடுவதன் மர்மம் என்ன?

வானமங்கை நினைவுச் சிறையினின்றும் விடுதலை பெற்றபோது தன்மகன் முழு வேகத்தோடு மேலேறி வருவதைக் கண்டாள். அன்பொழுக "மகனே" என்று அழைத்தாள்.

ஆனால், இப்போது அந்த மகன் பேசவில்லை. அவன் தன்னை மறந்தலயிப்பில் தன் ஒளிக்கரங்களாற் பூமகளை அணைத்து வருடி, இதம் செய்து கொண்டிருந்தான். இருள் மூடிக் கரும்பிண்டமாகக் கிடந்த பூமகள், அவனைப் பார்த்துச் சிரிக்கத் துவங்கினாள். இதைக் கண்ட வானமங்கைக்கு நெஞ்சு வலித்தது.

கட்டிய கணவனும், பெற்ற பிள்ளையும் காலம் காலமாய் அவமதித்து வந்தால் எந்தப் பெண்தான் வெந்து சாகாள்? கூப்பிட்டதுகூடக் கேளாமல் செவியுணர்வின்றி, ஏனைய பொறியுணர்வும் ஒன்றித்து, மனவழிப்பட்டு, அவளை நோக்குவதென்றால் — தந்தையும் மகனும் அந்த அவளை நோக்குவ

தென்றால் — மகா கேவலம்?... இப்படி எண்ணினாள் வானமங்கை.

அவள் உள்ளம் உருக, உயிர்துடிக்க, உரோமம் சிலிர்க்க, "அப்பா மகனே" என்று மீண்டும் குரல் கொடுத்தாள்.

"என்னம்மா" மனோலயம் கலைந்த நிலையிலேற்படும் எரிச்சல் இழையோடக் கேட்டான் சந்திரன்.

"என்னடா மகனே, தாய்ப் பாசத்தை விஞ்சியதொன்று பிரபஞ்சத்திலுண்டோ? அங்குண்டமாய், அவலட்சணமாய், கறுப்பாய் உள்ள அந்தச் சிறுக்கிமீது... அது என்ன?"

"ஓ! அதுவா... அது, அதுதான்.... என்னுள்ளே விளக்க மாய்த் தோன்றும் அதைப் பரிமாறத் தெரியவில்லை.... காலையிலே அப்பாவைக் கேட்டுப்பார். விளங்காதது விளங்கும்" - சந்திரன் மோனமாய், மன ஒருமை பூண்டு, விதித்தபடி தவழத் தொடங்கினான்.

காலக் கொடியிலே புதுநாள் ஒன்று பூத்தது. சூரியதேவன் ஆயிரமாயிரம் ஒளிக்கரங்களாலே பொழுதை மலர்வித்து, கீழ் வானிலே அழகென்னும் காவியத்தைப் பாடிக் கொண் டிருந்தான். தேவனின் வருகைக்குக் கட்டியங் கூறிய உஷை, காலைப்பொழுதோடு கலந்துவிட்டாள்.

காலை மலர்ச்சியிலே பூமிப்பெண் ஒளிப்பிம்பமாய் உயிர் பெற்று இயங்கித் துடித்தாள். அந்தக் காட்சி காலாக்கினியாய் வானமங்கையின் மனத்தைக் கருக்கிச் சாம்பராக்கியது; பொறாமை புகைந்தது. பொங்கி எழுந்த பெருஞ்சினத்தை உள்வாங்கி, மனக் குழியிற் புதைத்துக் கொண்டு, கதிரவனைப் பார்த்துத் "தேவா" என்றது.

சூரியனின் மனம் பூமிப் பெண்ணை மருவி மகிழ, வாய் மாத்திரம், "தேவி, என்ன வேண்டும்?" என்றது.

"ஒரு வரம் வேண்டும்; பூமிப் பெண்ணைப் பார்க்காத வரம்."

"ஓ, அப்படியா? ஏன்?"

"மனைவி தன் கணவன் கற்புடையவனாயிருக்க வேண்டும் என்று விரும்புவதும், அவன் விரும்பும் பிறளில் பொறாமைப்படுவதும் பதிவிரத தர்மம் என்று எண்ணுபவள் நான்."

"அதனால் அந்தப் பூமிப் பெண்ணைத் துன் புறுத்தினாயோ?"

"ஆம். துன்புறுத்தப் பார்த்தேன். மழைத்தாரை யென்னும் கோடான கோடி அம்புகளை எய்தேன்; அவள் அவைகளைத் தன்வயிற்றில் அடக்கிக் கொண்டாள். எரி நட்சத்திரம் என்னும் தீப்பந்தங்களை வீசி யெறிந்தேன்; அவள் அதிர்ச்சி கொள்ள வில்லை. இடிமுழக்கமிட்டுப் பெருங் குரலெடுத்துப் பயமுறுத் தினேன்: அவள் அதிரவில்லை... ம்... போதாக் குறைக்கு உங்கள் மகனும் உங்கள் அடியொற்றி நடந்தால்..."

சூரியன் சிரித்தான்; எல்லாவற்றையும் உற்பவித்து, ஈற்றில் ஒன்றுமின்றி, ஒன்று மறியாமல், மறப்பில் ஆழ்ந்துவிட்ட வானமங்கையின் மனோநிலையைக் கண்டு, சிரித்தான்.

"தேவி! நீ யார்? நான் யார்? உன் மகன் யார்? அதோ தெரியும் பூமிப் பெண் யார்? உனக்குப் பிறப்பு ரகசியம் நினைவிருக்கிறதா?" - சூரியதேவன் ஞானதிருஷ்டியோடு வெகு நிதானமாகக் கேட்டான்.

பதிலில்லை. நீண்ட மெளனம் திரை போட்டது.

"நானும் நீயும் பிணைந்த பிணைப்பில் உயிர்த்த ஒரு துளிதான் அந்த மண்; அவள் உன் மகள்; உன்மகனாகிய அவன், உண்மையில் அவள் மகன்.... வெறுமையான உன்னைக் குறைகூறிப் பயனென்ன?"

"அதற்காக?"

"அதற்காக.... அந்த மண்மகளை நானும் அவனும் பார்த்து அணைத்து, ஒளி செய்வது பாசம் காரணமாக என்றாலுங்கூட, அதற்கும் மேலாக அவள் வாழ்வரசி என்பதற்காக..."

"என்ன... சேறுஞ் சகதியுமாய், மலையும் மடுவுமாய், குப்பையும் கூளமுமாய் உள்ள அவளா வாழ்வரசி...?"

"தேவி, நீ சொன்ன அவைகளிலேதான் உயிர் துடிக்கிறது; அங்கேதான் உயிர்ச் செல்வம் பொலிகிறது. உயிர்த்துடிப்புள்ள எதுவுமே மதிப்புள்ளது... ஒன்றுமற்ற உன்னை நீலவானம் என்ன வியப்பவள் அவள்: என்னைத் தந்தையாக்கி வணங்குபவள் அவள்; அவனை நெடு நிலா விரிக்குந் தண்மதி எனக் கொண்டாடுபவள் அவள். அவளிலா பொறாமை....?"

வானமங்கைக்குப் பேச வாயில்லை. மீண்டும் மௌனம் திரைபோட்டது.

"தேவி, அந்த மண்மகள் வாழ்கின்றாள். அவள் மடியிலே பல்லாயிரங்கோடி உயிர்கள் வாழ்கின்றன. அந்தப்பேறு உனக்குண்டா? எனக்குண்டா? அதனால் அவர்கள் தெய்வம். அங்குள்ள சில உயிரினம் எம்மைத் தேவனாக்கி வியந்தாலும் கூட, நாம் அவளை வணங்குவோம்." சூரியன் நெஞ்சு நெக்கு நெக்குருக, வெகு கனிவோடு கூறினான்.

வானமங்கை கண்களில் கண்ணீர் துளிர்த்தது. இரண்டொரு மழைத்துளிகள் மண் மடியில் வீழ்ந்தன.



# நிர்விகற்பம்



ஊரின் எல்லையிலே, தனிமையிலே தவங்கிடப்பது போலே, மோன முழுநிலை சித்திக்கப் பெற்றுக் கிடந்தது, அந்த மயான பூமி. அதனால், பொருள் முற்றிப் பூத்த பயங்கரம் அங்கே தூங்கிற்று.

அதன் அயலிலே காலங் கண்ட ஓர் ஆலமரம் கிழடானாலும் அதற்குக் குமரப் பருவத்து மதர்ப்பு அடிக்கடி வந்து விடுவதால், மாயாது, காலக்கணக்கைப் புறந்தள்ளி நின்றது. அது தினவெடுத்துச் சிலிர்த்துக் கொள்ளும்போது, ஏதோ ஒரு வகைச் சலங்கைச் சத்தம் கேட்கும்.

அதிலே குடியிருக்கும் ஆணும் பெண் ணுமான ஆந்தைகள் இரண்டு, நிசிப்போதிலே கதை பேசிச் சரசமாடும்.

இந்த ஒலி விசேஷங்கள் இரண்டும் இணைந்து, தூங்கும் பயங்கரத்துக்கு உயிர் கொடுத்துவிட, அது அங்கே ஊழிக் கூத்த னாய் மாறிக் கூத்திடும்.

அந்தக் கூத்திலே மாடன், காடேரி, இரத்தமுனி, கொத்தி என்பனவெல்லாம் தோன்றி நித்தியம் பெற்றுவிடும்.

அதனால், உயிர்ப்படங்கி, உணர்வழிந்து, உலக ஆசா பாசங்களை விடவேண்டி வந்தமையால் விட்டு, அக்கினியிற் கிடந்து புதுமைத் தவஞ் செய்யும் அந்த மனிதனே அஞ்சாமையோடு பாடையேறி அங்கே

வந்தான். அவனுக்கு உலகஞ் சூட்டிய விருதுப் பெயர் "பிணம்". அந்த விருதுப் பெயர் சூடப்படுவதோடு உலகப் பல்கலைக் கழகப் படிப்பு முடிந்துவிடும்.

'உயிர்தான் மனிதனோ?

உடல்தான் பிணமோ?

அல்லது,

உயிர்ப் பிணந்தான் மனிதனோ?

கூடுதான் பிணமோ?

கூட்டிலிருக்கும் புள்தான் மனிதனோ?

அல்லது,

கூட்டுப் புள்தான் மனிதனோ?'

வெறுங்கூடு கொண்டு, கூடி வந்த கூட்டுப் புட்களுக்கு — மனிதருக்கு — திடீரெனச் 'சுடலை ஞானங்' கைவந்து, கணநேரத்திலே அம்மயக்கம் விடுபட, அவை உலக ஞானிகளாயின.

பிணம் அக்கினியாயிற்று; நீறாய்த் தூய்மை பெற்றது.

அந்த மனித காவியம் முற்றுப் பெற்றது; சுபம்.

சுபமே மயானம்.

அது உலகெங்கணும் எத்தனை கோடானு கோடி மனிதருக்குச் சுபஞ் செய்திருக்கிறது.

சுபஞ் செய்யுமிடம் திவ்ய க்ஷேத்திரம்.

மயானமே அதி திவ்ய க்ஷேத்திரம்.

அந்தத் திவ்விய க்ஷேத்திரத்தில், இப்பொழுது இரு பிணங்கள் அக்கினிப் பிரவேசஞ் செய்து, தூய்மை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒன்று ஆண்; மற்றையது ஆணெனப்படுவது.

இப்பொழுது இரண்டு பிணம் என்ற ஒரே சாதி; உயிருக்குத்தான் மேல்சாதி, கீழ்சாதி உண்டு. பிணத்துக்கு மேலுமில்லை; கீழுமில்லை.

ஆண் அடிமை; ஆணெனப் படுவது ஆண்டான்.

ஆணின் அழைப்பு முதல்; ஆணெனப் படுவதின் நிகர லாபம்.

முந்தியதற்கு வாழ்க்கை துன்பத்தில் இன்பம்.

பிந்தியதற்கு வாழ்க்கை இன்பத்தில் துன்பம்; மனித தத்துவங்களைக் களைப்படையச் செய்துவிட்ட இன்பத்தில் துன்பம். அதனால், அது பிஞ்சிலே வெம்பிவிட்டது. வெம்பிய பிஞ்சுக்குச் சக்தி ஏது? அது அதனால் ஆணெனப்படுவது.

முந்தியது ஆண்; அதில் ஆண்மை வீறி நின்றது.

ஆண்மையின் வீறும் பெண்மையின் வீறும் சங்கமிக்குமிடத்தில் உலகம் உதிக்கிறது. பிந்தியதற்கு உரிமை பூண்ட அந்தப் பெண்மை அடங்கி அடங்கி, மிகமிக அடங்கி, பின் வீறுகொண்ட போது, வினைவிளை காலமாதலால், வினை விளைந்தது.

விளைவு இரண்டின் பிணம்.

ஒன்று ஆண் பிணம்.

மற்றையது ஆண் எனப்படும் பிணம்.

அக்கினிக்கு இரண்டும் ஒன்று தான்; அவன் வேற்றுமை மாற்றுவோன்; அவன் நிர்விகற்ப சொரூபி; அவன் வாழ்க.

சுடலைப் பொடியே அவன் காட்டும் தத்துவம்.

தம் கூடுகள் பொடியாவதைக் காணவோ என்னவோ, அந்த ஆவிகள் இரண்டும் ஆலமரத்தில் வந்தமர்ந்தன; ஆலமரம் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டது.

ஆவிகள் இரண்டுக்கும் பழங் கதைகள் கனவு.

கனவு பனிமூட்டம்; தாக்கமற்றது.

அதனால், இரண்டும் ஒன்றையொன்று நோக்கின்; சிரித்தன. ஆந்தைகள் அலறி ஒலி எழுப்பின.

"எங்கிருந்து..." என்று கேட்டது, ஆணெனப்படுவதின் ஆவி.

"கடவுள் சந்நிதியிலிருந்து..." என்றது ஆண்.

"என்னவாம்?"

"என்னை ஆணாகப் பிறக்கட்டுமாம். எவளோ ஒருத்தியை மணக்கட்டுமாம்."

"யார் அந்தப் பெண்?"

"யாருக்குத் தெரியும்?"

"குறிப்பொன்றும் கூறவில்லையா?"

"இந்தச் சுடலை ஆலில் வந்து சந்திக்குமாம்; அதுசரி... நீ எங்கிருந்து.."

"அந்தக் கடவுள் சந்நிதியிலிருந்துதான்...."

"என்னவாம்?"

"என்னைப் பெண்ணாய் பிறக்கட்டுமாம்; யாரோ ஒருவனை மணக்கட்டுமாம்."

"யார் அந்த ஆண்?"

"யாருக்குத் தெரியும்?"

"குறிப்பொன்றும் கூறவில்லையா?"

"இந்தச் சுடலை ஆலில் வந்து சந்திக்குமாம்."

"ஒகோ; நீயா எனக்குரிய பெண்... இல்லை; மனைவி."

"....ம் ... நீங்களா எனக்குரிய ஆண். ஆமாம்... கணவன்."

"பெண்ணே, கொஞ்சம் கிட்ட வந்தால் என்னவாம்?"

"ஐயோ, வெட்கமாயிருக்கிறது; கொஞ்சம் பொறுங்கள்."

"என்ன வெட்கம்... சரி சரி... நானே வந்து வடுகிறேன், உன்கிட்ட."

அடுத்த கணம்:

'இச்.. இச்... இச்....'



# இராசகோபுரம்



உலகுடையாள் கோயிலின் இராச கோபுரத் திறப்பு விழா நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. உலகுடையாளின் பத்தர்கள் பல்லாயிரவர், தேரோடுந் திருவீதியிலே திரண்டிருக்கிறார்கள். கோபுரத்தின் உயர்வு போன்று வியப்பும் களிப்பும் பத்தியைப் புறங்கண்டு, உயர்ந்து ஆங்கே தேங்கித் ததும்புகிறது.

அந்த இராசகோபுரம், சிற்ப சாத்திரத்தின் உயிர்வடிவம். சிற்பிகளின் கற்பனை நலங் கனிந்த, உள்ளத் தோற்றங்களின் பிரத்தியட்ச சாட்சி. அவர்கள் மனத்துப் பூத்த பல்லாயிர உணர்வுகளின் பிண்டப் பொருள். அவர்களின் மனவண்ணத்தோடியைந்த கைவண்ணக் காட்சி.

நேற்றுவரையிலும் பன்னூறு சிற்றுளிகள் 'கல்கல்' என இசையெழுப்பிக் கருங்கல்லிற் காவியஞ் செய்தன. அக்கருங்கற் காவியங் களில் உயிர்ப்பொறி ஏற்றும் வேலை அவ னுடையது. அதனால் அவனுடைய சிற் றுளிக்கு வேலை மிகக் குறைவு. ஆனால், வேலை மிகக் கடினம்.

அவனுடைய சிற்றுளி சிற்பங்களின் முகத்தில், இரண்டொரு இடங்களில் மெல் லென இரண்டொரு கோடுகளைச் செதுக்கி விடும். உடனே, அவற்றில் சில குறுநகை புரியும்; சில சாந்தம் பொலிய நிற்கும்; சில கம்பீரங் காட்டும்; சில சோகந் தவழ நிற்கும்.

9

இரண்டொரு கோடுகளிலே நவரசங்களைக் கல்லிலே பதித்துவிட அவனொருவனே அறிவான். முடிவில், சிற்பங்களின் கண்மலர்களைத் திறந்து விடுபவனும் அவனே; அவன் பிரமா.

அந்தக் கோபுரம் அந்தச் சிற்பி சிருட்டித்த கலையுலகம்: சிற்பங்கள் அந்த உலகத்து மாந்தர்.

கண்முன்னே, கலையுலகம் காட்சி தருகிறது.

கோபுரத்திலேறிய சிற்பங்கள், மொழிகடந்து, பாவங்களாற் பேசுகின்றன.

அதில் இரு சிற்பங்கள். ஒன்று ஆண்; ஒரு முனிவர்.

மற்றையது பெண்; முனிபத்தினி.

முனிவர் ஆய்ந்தறிந்தடங்கித் தவத்திருவொளி சால இருக்கிறார்.

முனிபத்தினி அவரயலிலே, பெண்மனத்துப் பேரழகுகள் சால இருக்கிறாள்.

அவர்கள் முன்னால் இராசகோபுரத் திறப்புவிழா நடைபெறுகிறது.

அந்த இராசகோபுரத்தைக் கட்டுவித்தவனின் புகழ்க் கொடியை வானளாவ ஏற்றுகிறார் ஒருவர். மக்களின் மகிழ்ச்சிப் பேரலை பொங்கி எழுகிறது.

அந்த இராசகோபுரத்தைக் கட்டினவனின் கை வண்ணத்தைப் பாராட்டுகிறார் ஒருவர். மக்கள் ஆரவாரிக்கின்றனர். அந்த ஆரவாரத்தைக் காற்று துடைத்துச் சுத்தஞ் செய்கிறது.

முனிபத்தினி, "ஆமாம், மக்கள் நல்லவர்கள்; நன்றி மறக்காதவர்கள்" என்கிறாள்.

முனிவர் பதில் கூறவில்லை; குறுநகை புரிகிறார்; கொஞ்சம் பொறு என்பது போலிருக்கிறது அந்த நகைப்பு.

கெட்டிமேளம் முழங்குகிறது; நாககசுவரம் உச்சத் தாயியைத் தொட்டுச் சஞ்சாரம் செய்கிறது. கண்டாமணி, பேரொலி எழுப்பி அதிர்கிறது. மக்கள் ஆரவாரம் விண்ணை

இடிக்கின்றது. அவற்றையும் காற்று துடைத்துச் சுத்தஞ் செய்கிறது.

இராசகோபுரத்தின் முகப்பிலே பதிக்கப்பட்ட செப்புத்தகடு திரை நீக்கம் செய்யப்படுகிறது. அது களிம்பு போக விளக்கப் பட்டுச் செம்பொற்றகடுபோலப் பிரகாசிக்கின்றது.

"அதை வாசி" என்று கூறி முனி சிலை புன்முறுவல் பூக்கிறது.

*உலகுடையாள் திருக்கோயிலில் இவ்விராச கோபுரம் தர்மப் பிரபுவும் சைவ நெறிக்காவலருமான திருவாளர் செ. தியாகராச பிள்ளையின் ஞாபகார்த்தமாக, அன்னாரது அருமைத் திருக்குமாரன் கலாநிதி கயிலாய நாதனாற் கட்டுவிக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு மார்கழி திங்கள் திருவாதிரை நாள் திறப்புவிழாச் செய்யப் பட்டது.*

இதனை வாசித்த முனிபத்தினியின் முகம் சுருங்குகிறது. கருத்தோடு முனிவரை நோக்குகிறாள். முனிவர் கண்மூடி மௌனியாய் இருக்கிறார்.

"அநியாயம்; அக்கிரமம்" முனிபத்தினி கொதிக்கிறாள்.

முனிவர் சிரித்துக் கொண்டு "**ஏன்?" என்கிறார்.**

"கட்டுவித்தவனுக்கா? கட்டியவனுக்கா சிறப்பு? அந்தச் சிற்பி அல்லும் பகலும் ஒரே தியானமாய் இக்கோபுரத்தைக் கட்டிமுடித்ததை நீங்களுந்தானே பார்த்தீர்கள்..."

"ஆமாம். சிற்ப சாத்திர நுணுக்கமெல்லாம் கரை கண்ட சிற்பி அவன்." முனிவர் நளினம் பண்ணுகிறார்.

"பார்த்தீர்களா, அந்தக் கலைஞனுடைய பெயர் இந்தச் செப்புத் தகட்டிற் பொறிக்கப்படவில்லை; உண்மையிலே கோபுரம் சிற்பியுடையது. அவனுக்குத்தான் முதலிடம். கயிலாயநாதனுக்கும் அவன் தந்தைக்கும் வேண்டுமானால் அடுத்த இடம்."

"கயிலாயநாதன் பணங் கொடுத்து எங்களோடு இந்த இராசகோபுரத்தை வாங்கியிருக்கிறார். இனி இதில் யாரும் உரிமை கொண்டாட முடியாது. நாங்கள்கூட அடிமைகளே. மனிதர்களின் செயலுக்குக் கருத்துண்டு. அவர்கள் பகுத் தறிவுடையவர்கள்; நல்லவர்கள்."

"யார்? அவர்களா? தீயவர்கள்; நன்றிகெட்டவர்கள்."

முனிவர் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டு, கருப்பக் கிருகத்தைச் சுட்டிக் காட்டுகிறார். அங்கே ஒற்றைத் திரியில் எரிந்த விளக்கு, எண்ணெய் இல்லாமல் மங்கிமங்கிச் சாகிறது. இன்னும் சிறிது நேரத்திலே கருப்பக்கிருகம் இருள் மயமாகி விடும். உலகுடையாளின் அடையாளம் கூடத் தெரியாது.

மீண்டும் முனிவர், தம் மனைவிக்குக் கோபுரத்தைக் காட்டுகிறார்.

கோபுரம் வண்ண வண்ண மின்விளக்குகளால் அலங் கரிக்கப்பட்டு, ஒளி வெள்ளத்தில் மிதக்கிறது.

முனிபத்தினிக்கு உலகுடையாள் மீது பரிதாபம் ஏற்படு கிறது. "ஐயோ, ஒளி ஏற்ற வேண்டிய இடத்தில் ஒளி இல்லையே" என்று அவள் முணுமுணுக்கிறாள்.

முனிவர் சிலையாகிறார். என்ன செய்வது, முனிபத்தினி யும் சிலையாகிறாள்.





மலையகமெங்கும் கனமழை பொழிந்தது.

நதிமூலத்தையும் ரிஷிமூலத்தையும் யாரறிவார்?

அருளின் மூலஊற்றுப் போன்று, அந்த மலையகத்தின் எங்கிருந்தோ சிற்றாறுகள் இரண்டு, பொங்கிப் பூரித்துக் கரைபுரண்டு காட்டாறு போலப் பாயத் தொடங்கின.

அச்சிற்றாறுகளில் ஒன்று ஆண்; தன்னிச்சை கொண்டு திரியும் காளை ஒருவனின் பருவமிடுக்கைப் போல, புதுவெள்ளத்தால் நிறைந்து, பொலிந்து பூரித்து, ஓடியும் பாடியும், பாய்ந்தும் குதித்தும், ஆடியும் அசைந்தும், களிகொண்டு கனியும் குரலெடுத்துப் பாடியும், பயங்கரமாக ஓலமிட்டும் ஓடியது. மதங்கொண்ட வேளைகளில் மராமரங்களை உலுப்பியும் அசைத்தும் முறித்தும் விளையாடியது. அதன் நெறிவும், சுழியும், நுங்கும் நுரையும் வீரத்துடிப்பின் விலையற்ற விழுப்புண்கள்.

சொல்லெல்லாங் கடந்த கம்பீரம் அதன் குணம்; பொன்வண்ணம் அதன் நிறம். அதனால், ஆணுக்குரிய அழகனைத்தும் குடிகொண்ட அழகு, அதற்கு வாய்த்திருந்தது.

மற்றையது பெண்; பருவக் குமரி. புதுவெள்ள நிறைவாற் பொலிந்து அன்னமென நடந்தும், மானெனத் துள்ளியும், ஓராயிரம் நடன பாவங்களைக் காட்டியும், கலீரெனச்

சிரித்தும், குறுநகை புரிந்தும், மழலைமொழி மிழற்றியும் நடந்தது. வழியிலுள்ள பல்லாயிர மலர்களைப் பறித்துச் சூடி, பூம்புனல்யாறெனக் கோலங்கொண்டு விளையாடியது. அதன் ஒயிலுஞ் சாயலும் நயக்கும் நாணமும் பெண்மையின் ஏற்றமிகு பரிசுகள்.

சொல்லெல்லாங் கடந்த மதர்ப்பு அதன் குணம்; பொன் வண்ணம் அதன் நிறம். அதனால், பெண்ணுக்குரிய அழகனைத்தும் குடிகொண்ட அழகு, அதற்கு வாய்த்திருந்தது.

ஆண் தென்மேல் திசையாய் ஓடிவந்தது; பெண் தென்கீழ்த் திசையாய் நடந்து வந்தது.

'வடகடலிட்ட நுகத்தின் ஒருதுளையிலே தென்கட லிட்ட ஒரு கழி(நூல்) சென்று கோர்த்தது.'

தன்னிகரில்லாத் தலைவனுந் தலைவியும் ஒருவரை யொருவர் எதிர்ப்பட்டனர்.

நல்லதொரு வேளையிலே, ஒன்றையொன்று தழுவி அணைந்தன.

எவர்தாம் முன் அணைந்தனரென்று இதுகாறும் அறியோம்; இரண்டற்ற ஒருமை விளைந்தது.

ஆண்மையைப் பெண்மை விழுங்கிற்றா? ஆண்மையிற் பெண்மை அடங்கிற்றா? ஆண்மையிற் பெண்மையும் பெண்மையில் ஆண்மையுமாய்க் கலந்தனவா? அல்லது அந்த மூன்றுமாயிற்றா?

எங்ஙனமாயினுமாக; அந்த ஆற்றின் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இப்பொழுது ஆழ அகலம் மிக்கதொரு ஆறு, இருகரையின் விளிம்புகளையும் தடவிக் கொண்டு, சுழிப்பும் முனைப்பும் வீறும் பெற்று, வண்டலும் மண்ணும் நுரையும் திரையும் போர்த்து, மிகமிகக் கலங்கிச் செந்நிறத்ததாய், உருத்திரனின் தாண்டவத்தோடும் மகாகாளியின் குதிப்போடும் ஓங்கார வொலியோடும் ஓடியது.

மூங்கில்கள் தலைதாழ்த்தி வணங்கின. மராமரங்கள் மலர் தூவிப்பரவின. பறவைகள் கலகலத்து ஒதுங்கின.

தாயுங் குஞ்சுமான மீன் கொத்திகள் இரண்டு, மரக்கிளை ஒன்றில் இருந்து ஆற்றின் போக்கை அவதானித்துக் கொண்டிருந்தன.

தாய் அனுபவ உள்ளீடுள்ள வாழ்க்கைக் கனி; குஞ்சு பிஞ்சு.

குஞ்சின் குரல் ஒலித்தது. "அம்மா, உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. இங்கு ஏன் அழைத்து வந்தீர்கள்? கலங்கலும் சேறுமான இந்த ஆற்றைப் பார்க்கவா? ஒரு மீனும் அகப்பட்டாதே."

"அதிலென்ன, வந்த இடத்தில் இதுவுமொரு காட்சியாயிற்று."

"காட்சியா? தூ... இதுவா? தேற்றமும் தெளிவும், அடக்கமும் அமைதியுமில்லாமல், கீழும் மேலுமாய் உருண்டுபுரண்டு குழம்பும் இதுவும் ஒரு காட்சியா...'

"உன் பார்வையிற் பிழையுண்டு; அதோ பார்."

அப்பொழுது–

"அன்பே..."

"அன்பரே..."

"அன்பே..."

மிக மிருதுவான, இணைந்த இரு ஒலிகள், ஒன்றான ஆற்றிலிருந்து கேட்டன.

"இதற்கு என்ன அருத்தம்?" என்றது குஞ்சு.

"வாழ்க்கை ஆரம்பமாயிற்று என்று அருத்தம்; அந்த அருத்தம் எல்லார்க்கும் வேளை வந்தபோது விளங்கி, விளைந்து, வெளிச்சமாகும்."

"அப்படியென்றால்..."

"இந்த ஆறு இரண்டா? ஒன்றா? இரண்டற்ற ஒன்று. இரண்டற்ற ஒருமைதான், வாழ்வின் ஆரம்பம். அதற்கு 'களி' என்றும் பெயர்."

"அதற்கென்ன?"

"அங்கேதான் அருத்தமுண்டு. அன்பு காதலாய்ப் பரிணாமங் கொண்டு திமிர்ந்து நிமிர்ந்து முழுவேகங் கொண்டு செழிக்கும் போது .... பார் அந்த ஆற்றை; அந்தக் களிதான் அதற்குப் பண்பு. அந்நிலை கொண்ட எதற்கும் அதுவே பண்பு. அந்நிலை, அறிவு இரண்டாம் பட்சமாய்விட்ட நிலை. தேற்றமும் தெளிவுமற்ற கலங்கமே அதன் இலக்கணம்."

அப்பொழுது இரண்டற்ற ஒன்றான ஆறு சிரித்தது. அந்தச் சிரிப்பிலே ஆண் குரலும் பெண் குரலும் இழையோடி நெளிந்தன.

"இதன் முடிவு?" என்றது குஞ்சு.

"வா அதையும் பார்ப்போம்," என்று தாய் அழைத்தது.

இரண்டும் ஆற்றோட்டத்தை நோக்கிப் பல காதம் பறந்து, ஒரு கிளையிலே தங்கியிருந்தன.

அங்கே இரண்டற்ற ஒன்றான அந்த ஆறு, கண்ணாடியாய்க் கிடந்தது. ஞானத்தைப் போலத் தெளிந்து, ஞானியரைப் போல அடங்கி ஓடிற்று. தன் அடிமடியிலுள்ள அத்தனை பொருளையும் தெரியக் காட்டி, உள்ளொன்று புறமொன்றின்றி ஓடியது.

"முடிவு கேட்டாயே. இப்பொழுது இதனைப் பார்த்தாயா? முன்னைக்கும் பின்னைக்கும் நிகழ்ந்த மாற்றம்...." தாய் வாக்கியத்தை முடிக்கவில்லை.

"இனி விளங்காதது இருந்தாலல்லவா நீங்கள் விளக்க வேண்டும்" என்று கூறிக் குஞ்சு சிரித்தது.





முதுவேனிலின் கடுங்கோபம். மயான பூமியாக்கி விடப்பட்ட அந்தப் பொட்டல் வெளிக்கு, இத்தனை பூரிப்பும் புதுப்பொலிவும் பசுமையும் எங்கிருந்துதான் வந்தனவோ?

நிலம் என்னும் நல்லாள், நித்த நித்தம் தாயாவாள்; என்றாலும் நித்திய சௌந்தரி. அவள் மேனியின் துகள்கள் எல்லாம் கருவறைகள். வான் மழைத் தேவனின் பூந்துளிகள் புணரும் போது அவை வாய் திறக்கும். அவள் வயிறு குளிரும். புல்லாகி, பூடாய், செடியாய், மரமாகி எல்லாம் பிறவி எடுக்கும். அன்றும் அவள் வயிறு குளிர்ந்தது; வெறும் பொட்டல் வெளி புல்வெளியாயிற்று. பருவமெய்திய கன்னியின் மதர்ப்பில் அது கண்ணை மயக்கிற்று.

ஒரு நாள் நடுநிசி; தன் உள்ளக் குளிர்வின் அனுபவ ரசமாய், தண்மை வெம்மைகளின் சங்கம விளைவாய், விளைவின் உள்ளூறலாய், ஊறலின் முத்துத் துளியாய் ஆனந்தக் கண்ணீர் சிந்திற்று அப் புல்வெளி.

புல்வெளி எங்கும் பனித் துளிகள் தூங்கின. புல்லின், புல்லிலையின் நுனியில், எப்படித்தான் திரண்டுருண்டு முத்தின் உருப் பெற்றனவோ, அவை! வானின் நுதியைத் தழுவும் மாய வித்தையை எப்படித்தான் கற்றனவோ! உண்மையாகவே பனித் துளிகள் மாயினிகள் தாம்; அவை கூதிர்ப் பருவ இரவின் குழந்தைகள்; குழந்தைமை முற்றுப் பெற்ற குழந்தைகள்.

இருளிலே ஒளி பாய காலை மலர்ந்து விருந்து செய்தது. ஓ, மயான வெளியாய்க் கிடந்த பொட்டல் வெளியா அது! அப்பொழுது மரகதக் கம்பளத்திலே சுடர்மணிகளைச் சிந்தி விளையாடுகிறது அது. வறுமை வரலாம்; வளப்பமும் வராது விடுவதில்லை.

அந்தப் பனித் துளிகளில் ஒன்று, வளர்ந்ததொரு புல்லிலையின் நுனியிலே தூங்கியது. அதன் சுமையால், புல்லிலை சற்றே நளினமாக வளைந்து, செல்லம் பொழிந்து நயம் காட்டிற்று. கருவுயிர்த்த மங்கையின் மனநிறைவு அந்தப் புல்லிலைக்கு.

பனித் துளி அங்கே ஆனந்தலயிப்பிலே தூங்காமல் தூங்கிற்று. முதிராத காலையின் மிருதுவில், அதன் உலகமும் தூங்கிற்று... சூழலில் உள்ள, சின்னஞ்சிறு பிம்பங்களாய், ஆனால் சற்றும் தெளிவு குன்றாமல் தூங்கின. இந்தத் தூக்கத்திலே உயிர்க்களை தெரிந்தது.

அந்த உயிர்க் களை முற்றிய தவக்களை. அயலிலே நின்ற புல்லுக் குழந்தையொன்றுக்குப் பனித் துளியைக் கண்டபோது வியப்பு முற்றுதல் செய்து விம்மிற்று.

"ஆஹா, இந்தச் சின்னஞ் சிறு துளிக்குள் நான் தெரிகிறேன்; அதோ அம்மா தெரிகிறாள். இல்லை இல்லை, எங்களோடுகூட உலகமே தெரிகிறது. ஆச்சரியந்தான்!" அந்த வெள்ளை மனசுப் பார்த்ததைப் பேசிற்று.

பனித்துளி எதுவும் பேசவில்லை. அயலில் நின்ற புல்லின் குமரி ஒருத்திக்கு பனித் துளியைக் கண்டபோது ஆசை கொள்ளையாயிற்று. "இந்தச் சுடர்மணி என்னில் இருந்தால், நான் எவ்வளவு அழகியாவேன்" என்று எண்ணினாள். நினைவு செயலாகாத நிலையில் வெறுப்பு கடலாயிற்று. "ம்... பூ... இதிலும் அழகியதொரு மணியை ஒரு நாள் நானும் அணிவேன். எனக்கு இன்னும் வேளை உண்டு. அந்த வேளை வரும்" என்று எரிந்தாள்.

பனித்துளி ஏதொன்றும் பேசவில்லை. அயலில் நின்ற புல்லின் முதியாள் ஒருத்தி, தான் கண்ட புல்லனுபவத்தைத் தத்துவப் போர்வையில் மறைத்தாள். "இத்தகைய எத்தனை

எத்தனை மணிகளை நான் சூடினேன். ஒன்றாவது எஞ்சிற்றா? எல்லாம் கண நேர நீர்க் குமிழிகள்" என்று வாயில் வந்தபடி வேதாந்த விசாரம் காட்டினாள்.

இப்பொழுது சூரியனின் ஒற்றைத் தனிக் கதிர் படவே பனித்துளி சிரித்தது.

எனினும், மௌனம் கலையவில்லை. பேச்சற்ற நிலையில் பேசுவதற்கு எதுவுண்டு?

பனித்துளிக்குப் பரிபூரண தவம் பலித்தது. பனித்துளியும் சூரியக் கதிரும் பிணைந்தன. பனித்துளி தன்னிறம் குடிபோன நிலையிலே சின்னஞ்சிறு சூரியனாய் ஒளிர்ந்தது.

இப்பொழுது பனித்துளி ஒளித்துளி; கதிர்த்துளி. இனி, அதற்கு அதுவே நிறமும் குணமும் ஒளியும். அதற்கு அதுவே தன்னிலை; தனி நிலை. அதற்கு அதுவே முற்றிய தவநிலை. அதற்கு அதுவே பேரானந்தப் பெருநிலை. பூரண ஒளி வெள்ளம் காலை முதிர முதிர, எங்கும் பரந்தது. பனித்துளி தானற்று, ஒளியாய் சுகானந்தத்திலே தூங்கிற்று.

சில கணங்கள் கழிந்தன. இப்பொழுது ஒளித் துளியான பனித்துளி இல்லை. ஒளி மாத்திரமே உண்டு.

பனித்துளி அழிந்ததா? அணைந்ததா? அது கதிரில் அணைந்து தன்னை அழித்துக் கொண்டது. அது கதிரைத் தலைப்பட்டது.

அதற்கு அநித்தியத்தினூடே நித்தியம் சித்தித்தது. அது வீடு பெற்றது.



# ஏகாதிபத்தியம்



வாலிபத்தின் வளத்தில், வளத்தில் விளைந்த செழிப்பில், செழிப்பில் மலர்ந்த நிறைவில், நிறைவில் திமிர்த்த மதர்ப்பில், வாழ்க்கையை உள்ளங் கவர்ந்த இசையாக்கி வாழ்கிறது அந்த மாமரம்.

கதிர் நுழைபறியாக் கரும்பச்சையிலைக் காடு சுமந்து, குடை விரித்து நிழல் பரப்பி அது நிற்கிறது. அந்த நிற்றல், அதன் தோற்றப் பண்பு. பருவங்கள் வாய்த்த வாய்த்த வேளை களிலே வஞ்சனை சிறிதுமின்றி, நறுந் தீங்கனி களை வாரி வாரி வழங்குகிறது. அந்த வழங்கல், அதன் ஆக்கப்பண்பு. தோற்றமும், ஆக்கமும் நிறைவு பெற்றால் எதிலுமே ஒரு முழுமை சித்திக்கிறது. அதனால் அந்த மாமரம் ஒரு முழுமரம்.

ஒரு நாள் ஒரு காகம் அந்த மாமரக் கிளையொன்றில் அமர்ந்து சிலிர்த்துச் சிறகு கோதி, அழகுதீட்டித் தன்னை அலங்காரப் படுத்திய பின்னர், தன் பிறவிச் சுபாவம் பிழை படாமல், எச்சமிட்டுச் சென்றுவிட்டது.

அந்த எச்சத்திலே உயிர்ப்பு உள்ளதொரு வித்து புதைந்து கிடந்தது. அது ஒரு குரு விச்சை வித்து. வித்தின் பித்தினுள் ஒரு குரு மணற் பருமனில் கரு ஒட்டிக் கிடந்தது. அந்தக் கருவினுள் அடங்கிய ஆற்றல், குறள் வடிவு கொண்டு மூன்றடி மண்கேட்ட வாமனனின் ஆற்றலுக்குச் சமம்.

ஒருநாள் கரு உயிர்த்தது; அந்த மாமரத்தின் ஒரு கிளையிலே புதியதோர் உயிர் உற்பவித்தது. இந்த உயிர்த்தோற்றம் ஒரு புதுமை நிகழ்ச்சி; மரத்தில் மரம் முளைப்பதொரு விந்தை நிகழ்ச்சி.

முளை, ப்யிராகி வேர்விட்டு மெல்ல மெல்ல வளர்ந்தது. கூடவே அதன் நூதன சுபாவமும் ஆற்றலும் வளர்ந்தன; வெளிப்படத் தொடங்கின. அந்த வெளிப்பாட்டினால், அந்தக் கிளையிலே சிறு சுணைப்பும் சொறிவும் உண்டாவதை மாமரம் உணர்ந்தது; ஆனால் அந்த உணர்வில் விளக்கம் இல்லை; தெளிவு இல்லை. மாமரம் சூத்திரம் தெரியாமல் மயங்கியது.

இளங்கன்றான அந்தக் குருவிச்சை ஒருநாள் வெகு நாகரிகமாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டது; உலகத்துச் சோகம் முழுவதையும் தன்வசமாக்கி, "காத்தருள வேண்டும்" என்றது.

இந்தப் பிஞ்சுக் குரலைக் கேட்டு மாமரம் இரக்கத்தால் சிலிர்த்தது; இளங்காற்றிலே இலைகள் சலசலத்தன.

இப்பொழுதுதான் மாமரம் தனக்கு நமைச்சல் தந்த அந்த இடத்தைப் பார்த்தது; அங்கே இளங்கன்று ஒன்று பயமறியாமல் நின்றது. தானறியாமல் தன்னிற் பிறந்த அந்த அபூர்வ பிறவியை ஒரு கணம் வியப்புடன் நோக்கியது.

"குழந்தாய் நீ..."

பயமறியா இளங்கன்று பயந்தது போல் அழுதது.

"அழாதே குழந்தாய். கண்ணைத் துடை. உனது வேண்டுகோள் மறுக்கப்படமாட்டாது. தைரியமாகச் சொல். நீ...."

"நான் ஒரு பாவி. அதிசயப் பிறவி; அந்தரப் பிறவி; என்ன சாபக்கேடோ மண்மாதாவின் மடியிலே வாழமுடியாமல், அண்டி ஒண்டி வாழ வேண்டியிருக்கிறது. தாயே, உன்னைச் சரணடைந்தேன். 'போ' என்று சொல்லி விடாதே."

மாமரம் வாய்விட்டுச் சிரித்தது.

"குழந்தாய், நான் என்ன அவ்வளவு கல்நெஞ்சுக் காரியா? நானும் பூத்துக் காய்த்துப் பூரிக்கும் ஒரு தாய். அநாதையாய், அந்தரப் பிறவியாய்த் தோன்றி நிற்கும்

உன்னைப் 'போ' என்று சொல்ல எப்படி மனம் வரும்? உனக்கு என் மனமார்ந்த ஆசிகள். நன்றாக வாழ்க; பல்லாண்டு வாழ்க."

குருவிச்சையின் இளங்கன்று வெறும் உபசாரமாகக் கேட்டதை, மாமரம் உண்மையாக, மனநிறைவோடு அருளியது.

காலம் பறந்தது.

அந்தக் குருவிச்சை வளர்ந்து பெரிதாய், அந்த மாங் கிளையெங்கும் நன்கு காலூன்றி, பல்கிப் பெருகி வாழ்ந்தது. தன் வாழ்க்கையின் சாரத்தை மறந்து செழித்து வாழ்ந்தது. அதனால் தன் கிளையிலொன்று செயலற்று மரத்துவிட்ட தன்மையை மாமரம் உணர்ந்தது. அந்தக் கிளையை அது நோக்கியது. நோக்கின் பொருளை உணர்ந்து கொண்ட குருவிச்சையின் மனத்தில் ஒருவகைக் குறுகுறுப்பு அரும்பிற்று.

"அக்கா, என்னை மன்னித்துக்கொள். அண்டி வாழ இடந்தந்த உங்களுக்கு நான் வேண்டுமென்று துரோகம் செய்வேனா... என்னவோ குடும்பம் பெருகிவிட்டது. வேறெங்கே காலூன்றுவது? அதனால்..."

மாமரம் வேதனையோடு சிரித்தது. கோடைக் கானலிலே பிறந்த வெங்காற்று இலைகளையசைத்துப் பசுமையைப்பருகிச் சென்றது. மாமரம் நெடுமூச்சு விட்டுக்கொண்டு, "ம்... அப்படியா? வேறு ஏதாவதுண்டா?" என்றது.

"ஐயோ, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அக்கா. என் தலைவிதி; எல்லாரிடமும் குறை கேட்க வேண்டி யிருக்கிறது. உங்கள் பல பல கிளைகளில் ஒன்று தானே? அதனால் உங்களுக்குப் பெரிய இழப்பு நேர்ந்திடாது."

"ஆமாம், நீ என்னென்னவோ சொல்லிக் கெஞ்சுகிறாய்; கொஞ்சுகிறாய். ஆனால், எனக்கு உன் உள்ளுறை ஒன்றும் விளங்கவில்லை."

"அப்படியா? அதுவும் நல்லதுதான்" குறும்புச் சிரிப்போடு குருவிச்சை மௌனம் ஆயிற்று. அந்த மௌனத்தின் பொருள்

புலப்படச் சிறிது காலஞ்சென்றது. காலஞ்செல்ல, குருவிச்சை அதீதமாகப் பெருகியது. உணவுப் பஞ்சமும் இடநெருக்கடியும் அதிகமாயின. புலப்பெயர்ச்சியைத் தவிர வேறு வழியில்லை என அது உணர்ந்தது. அதனால், அது இரகசியமாக மா மரத்தின் மற்றை மற்றைக் கிளைகளிலும் காலூன்றியது.

காலூன்றிய கிளைகளிலெல்லாம் குருவிச்சையின் கால்வழி கனகம்பீரத்தோடு செழித்து வளர்ந்தது. மனக்கூச் சமோ குறுகுறுப்போ சிறிதுமின்றித் தன்னிச்சையாகச் செழித்து வளர்ந்தது.

மாமரத்துக்குப் பாரிசவாதம் கண்டது. உணர்வற்று, செயலற்றுக் கிடந்த அப்பகுதியை மாமரம் பார்த்தது. காடாய்க் கிடந்த குருவிச்சையை நோக்கியது. குருவிச்சையின் ஆதி முதல், மாவின் நோக்கை விளங்கியும் விளங்காதது போல மௌனம் சாதித்தது. இப்பொழுது மாமரந்தான் பேசவேண்டும் போலும்!

"என்ன உன்னைத்தான்; விரும்பிய விரும்பியவாறு செழித்து வாழ்கிறாய் போலிருக்கிறதே; ....ம் நன்றாகத் தான் வாழ்கிறாய்."

"ஓ... நீயா? இடமும் காலமும் வாய்த்தால் வாழத் தானே வேண்டும்? இதிலென்ன அதிசயம்?" மரியாதைப் பன்மையையும் கெஞ்சலையும் கொஞ்சலையும் குருவிச்சை மறந்துவிட்டது.

"ஆமாம், நீயும் வாழவேண்டும்; என்னையும் வாழவிட வேண்டும். எல்லாரும் வாழ அதுதான் வழி."

"அப்படியானால் நீ தியாகி ஆவது எவ்வாறு? உன் தியாகம் பிரபஞ்ச விசாலத்திலும் விசாலமானது. அதை உலகம் வியக்க வேண்டுமே; காவியங்கள் புகழ வேண்டுமே; கலைஞர் இசைக்க வேண்டுமே... நன்றாக எண்ணிக் கொள், என்னால் நீ தியாகி ஆகிறாய்."

ஒரு கணம் மாமரம் தன் வேதனையையும் மறந்து சிரித்தது. "என்ன, பொருள் உணர்ந்துதான் பேசுகிறாயா?

நான் மண்ணாவது தியாகமா? தியாகத்தின் பின் பெரிய நன்மை பிறக்க வேண்டுமே; பிறக்குமா? இல்லை; உனக்காவது நன்மை பிறக்குமா?" என்றது.

மேற்கொண்டு ஆழமாகச் சிந்தனை செய்ய குருவிச் சைக்கு ஆற்றல் இல்லை; மௌனமானது.

சில நாள்கள் கழிந்தன. மாமரத்தின் ஒவ்வொரு கிளை யிலும் குருவிச்சை காலூன்றிப் பெருங்காடாய் வளர்ந்தது. அங்கும் இங்குமாக ஒரு சில மாவிலைகள் மாத்திரம் தலை நீட்டித் தெரிந்தன.

இன்னுஞ் சில நாள்கள் கழிந்தபின் ஒரு நாள் அந்த மாமரம் இறந்து போயிற்று.

குருவிச்சை...?

பட்டமரத்தில் பல்கிப் பெருகி வாழும் மந்திரம் அதற்குத் தெரியாதே!





# வரம்புகள்

வாலிபம் முறுகிய நிலையிலுள்ள ஒரு மருதமரம். அது, ஓர் ஆற்றின் காலங்கண்டு திண்மை கொண்ட, உயர்ந்த கரையில் நின்றது. கரையிலே வேறு பல மரங்கள் நின்றனவாயினும், அந்த மருதமரம் மற்றவை களைப் பார்க்கிலும், ஒரு தனிக் கவர்ச்சியோடு விளங்கியது. வாலிபம் தந்த விருந்து அக் கவர்ச்சி.

ஒருநாள் காலை, ஆற்றின் அலை மீது தவழ்ந்து வந்த குளிர்தென்றல், அந்த மருத மரத்து இலைகளின் ஊடு போய், இழைந்து நுழைந்து விளையாடிக் 'சீச்சு'க் காட்டியது.

மருதமரம் பூரித்துச் சிலிர்த்தது; சிரித்தது.

என்றுமில்லாத வகையிலே, புது வெள்ளம் போல ஒரு புத்துணர்வு அதன் உள்ளத்திலே பொங்கி எழுந்தது. அந்த உள் ளுணர்வோடு அக்கம்பக்கம் எங்கும் உள்ளன வற்றை நோக்கியது. அது நாளும் பொழுதும் அவற்றையெல்லாம் பார்த்ததுண்டு; ஆனால், நோக்கியதில்லை. மனக் கண்ணில் 'விசாரணை' என்னும் ஒளியைப் பாய்ச்சி நோக்கியதில்லை.

13

எல்லார்க்கும் எந்த நேரத்திலும் இந்த 'நோக்கு' வாய்ப்பதில்லையே. அதனால், அந்த மருதமரத்துக்கு, அந்த ஒரு கணத்தில், இந்த 'நோக்கு' வாய்த்தது. வாய்த்த வேளையில், அது எங்கெங்கும் நோக்கியது.

இக்கரையிலும் அக்கரையிலுமுள்ள வலிய வரப்புகளுக் குள்ளடங்கி நல்ல பிள்ளையைப் போல ஓடும் ஆற்றை நோக்கியது. அது புதுவெள்ளத்தாற் பொங்கிப் பெருகிய வேளையிற் கூட, வரம்பைக் கடந்து செல்லாத அதன் கற்பை, அதன் மரபை எண்ணியது.

அடுத்து அதன் 'நோக்கு' ஆற்றின் நடுவே கிழட்டு மருதின்மீது சென்றது.

பல்லாண்டு பாடிக் கொண்டு, வயோதிபத்தின் எல்லை யில் நிற்கின்ற மருதுதான் அது. அதன் தலை நரைக்கா விட்டாலும், அங்குமிங்கும் சிலசில கிளை 'ர பட்டுப் போய் வழுக்கை கண்டிருந்தது. அதன் வேர்கள், ஏதோவொன்றைக் கவ்விக் கொண்டு கிடக்கும் சிறிதும் பெரிதுமான நீர்ப்பாம்பு களைப் போல, வளைந்து நெளிந்து ஒன்றோடொன்று பின்னிக் கிடந்தன. சுற்றமுந் துணையும் பெருந்துன்பத்தின் போது தூர விலகிவிட, தன்னம்பிக்கை யொன்றே தன்னைக் காக்கு மாறு போல, மூலவேரே அதன் மூலாதாரமாக நின்றது. அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிதறிக் கிடந்த சந்து பொந்துகளும் ஏகபோக உரிமை கொண்டாடிக் காய்ந்து தொங்கும் மரப்பட்டைகளும் அதன் வயதைக் கணித்தற்கான ஒரு சில ஏதுக்களாய்த் தோன்றின.

இவற்றையெல்லாம் நோக்கிய நோக்கிலே, 'ஏதேது இந்த மருதுத் தாத்தா எப்படி இந்த ஆற்றின் நடுவுக்கு வந்தார்?' என்ற விசாரம் வாலிப மருதுக்கு எழுந்தது. விசாரத்தைப் போக்க விசாரணையில் இறங்கியது.

"ஓ, தாத்தா; உங்களைத்தான் தாத்தா" என்று உரத்த குரலிலே கூப்பிட்டது வாலிப மருது, ஒரு வேளை வயோதி பத்தாற் காது செவிடாயிருக்கலாம் என்ற எண்ணத்தில்.

கிழட்டு மருது சிரித்தது. "என்ன தம்பி, எனக்கு ஐம் புலனில் எதுவுமே இன்னும் ஒடுங்கி விடவில்லை. நல்லது, ஏதோ விசாரிக்க எண்ணுகிறாயோ? விசாரி, விசாரி. விசாரஞ் செய்தது இனியது; நல்லது. அது வாழ்க" என்றது.

வாலிப மருது சிறிது வெட்கப்பட்டது. "தாத்தா, பொறுத்துக் கொள்ளுங்கள். இது சிறியேன் செய்த சிறுபிழை.

தாத்தா, இப்போதுதான் அந்தச் சந்தேகம் வந்தது. ஆமாம், நாங்களெல்லாம் கரையில் நிற்கிறோம். தாங்கள் மாத்திரம் நட்டாற்றில்.. மரபை மீறிய செயலாய்த் தெரிகிறதே."

"என்ன தம்பி, நானா மீறினேன்? இல்லை இல்லை; ஒன்றின் மீறலுக்கு நான் ஆட்பட்டு விட்டேன். அது பெரிய கதை."

"அதுதான் வேண்டும்; சொல்லுங்கள் தாத்தா."

நதி மூலம், ரிஷி மூலம்.

இரண்டு மூலத்தை–உற்பத்தித் தானத்தை–கால்வழியைக்–குத்துமதிப்பாகக் கூறலாமேயன்றி, நிறுத்துக் கூறல் முடியாது.

அந்தச் சிற்றாறும் எங்கோ ஒரு மலைப் பிராந்தியத்திலே உற்பவித்து, இழிந்து, குதித்து, நெளிந்து, வளைந்து, சுருண்டு, சிரித்துச் சிலம்பி, இசைத்துப் பாடிச் சென்றது.

உற்பத்தித் தானத்திலே எழுச்சி தோன்றுமானால், அத்தானத்தோடு சம்பந்தப்பட்ட இடமெங்கும் புரட்சி ட.ழும்.

முன் ஒருக்கால், அந்தச் சிற்றாற்றின் உற்பத்தித் தானச் சூழலிலே, கருமுகிற் குலங்கள் படைபடையாகக் குவிந்தன. அவை ஒன்றோடொன்று இணைந்து பிணைந்து உருண்டு புரண்டு விளையாடின. கண்சிமிட்டிச் சிரித்தன; மெல்லப் பேசின. விளையாடிய மேகங்கள் வேளை வாய்த்த வேளையிலே, வெறிகொண்டன; கணந்தோறும் அட்டகாசச் சிரிப்பும் இடிகுரற் பேச்சும் அவற்றிடையே எழுந்தன.

'சோ' என மாரி சொரிந்தது.

சிற்றாற்றின் உற்பத்தித் தானத்திலே எழுச்சி தோன்றியது.

எழுச்சியை உள்வாங்கிய சிற்றாறு புரட்சி கொண்டது. அதன் புரட்சிக் கீதவிசை வெகுதூரம் வரை கேட்டது.

பெருவெள்ளப் பெருக்கோடு சிற்றாறு மலையினின்றும் இழிந்து கடுகதி கொண்டது. அதன் வழியிலே தடையாய் நின்ற பெரிய பெரிய கற்பாறைகள் உருண்டு மோதித் தகர்ந்து எங்கெங்கோ போயின.

இக்கோலத்தோடு மலைவழியைக் கடந்த ஆறு, காட்டுப் பாதையிலே தன்னை எதிர்த்த சிறுசெடி கொடிகளை வேரோடு கல்லி வீசியது. இளைய, முதிய மரங்களை யெல்லாம் சாடிச் சாடி முறித்தது. அவற்றையெல்லாம் வாரி அள்ளிக் கொண்டு, நுங்கும் நுரையுமாய்ப் பொங்கிப் பூரித்தும், குமுறி ஆர்த்தும் ஓடியது. ஆற்றின் இப்புதிய கோலத்தைக் கண்ட வனவிலங்குகளும் பறவை இனங்களும் வெருண்டு திகைத்தன; வியந்து பார்த்தன.

கொற்றவைக் கோலங் கொண்டு அந்த ஆறு நாட்டை அடைந்தபோது, காலங் கண்ட கரைகள்– வலிய வரம்புகள்– உயர்ந்த எல்லைகள்–நகர்ந்தன. இருந்த இடந் தெரியாமற் கரைந்தன.

ஆறு கரை கடந்து, வரம்பை மேவி, எல்லை மீறிப் பெருகியது. சிறியனவும் பெரியனவுமான கால்களாய் நாட்டிற் பரவியது. வயல்கள் குளங்களாயின; குளங்கள் கடல்களாயின. ஆற்று வெள்ளம் குடிசைகளிற் புகுந்தது; மனைகளிற் புகுந்தது; மாளிகைகளிலும் புகுந்து வந்தது. கட்டுக் கடங்காக் காளைபோலே, கேட்பாரின்றி, விரும்பிய வாறே, போக முடியாதெனச் சொல்லப்பட்ட இடங்களெல் லாம் போய் உலாவி வந்தது.

மக்கள் மருண்டனர்; திரண்டனர்; குடிபெயர்ந்தனர்.

குடிசைகளிற் சிலவும் மனைகளிற் சிலவும் மாளிகைகளிற் சிலவும் அந்த ஆற்றுப் புரட்சிக்குப் பலியாயின.

சில நாள்களிலே கொற்றவைக் கோலங் கொண்ட சிற்றாறு, பேராறாய் அன்னையின் வடிவங் கொண்டது.

ஆற்று வெள்ளம் வற்றியது.

அப்பாலும் இப்பாலும் புதிய கரைகள் – புதிய வரம்புகள் – புதிய எல்லைகள் தோன்றின. அவற்றுக்கிடையே அது நல்ல பிள்ளையாய் அடக்கத்தோடு ஓடியது.

நான் சுற்று முற்றும் பார்த்த போது? என்னைப் போன்ற பலபல பெரிய மரங்களைக் காணோம். ஆனால் நான் மாத்திரம் வலிய விதியின் பேறாய், நட்டாற்றில் நிற்பதை உணர்ந்தேன்.

"ஆற்றுக்கழகு இரு கரைக்குள் அடங்கி ஓடுவது தானே; இல்லையா தாத்தா? மரபை மீறிக் கரை கடந்து பெருகிப் பலவற்றையும் பலி கொள்வதென்றால்..."

"என்றுதான் நானும் அப்போது எண்ணினேன், தம்பி. அப்போது, பலிகளில் இருந்து வளங்கள் பெருகும்; சில வகை அழிவுகள் ஆக்கங்களின் வித்தாகும் என்பவற்றை உணர வில்லை. காலக் கழிவின் போதுதான் உண்மை விளங்கியது."

"என்ன தாத்தா, சொல்லுகிறீர்கள்?"

"சிற்றாறு என்றும் சிற்றாறாய் இருப்பதில்லை. உற்பத்தி யில் என்றோ எழுச்சி தோன்றும்போது, பேராறாகத்தான் வேண்டும். அப்போது நீயும் நானும் நினைக்கிறபடி நல்ல பிள்ளையாய் இருக்க அதனால் முடியாது. கரைகள் உடையும்; வரம்புகள் தகரும். எல்லைகள் விசாலிக்கும். அதனால் பலபல பலியாகும். ஆட்டம் அடங்கியபின்..."

"ஆட்டம் அடங்கிய பின் .... என்ன, தாத்தா?"

"ஆட்டம் அடங்கிப் பல நாள்கள் கழிந்தன. இந்த ஆற்று வெள்ளம் உலாவி வந்த நிலப்பகுதியெங்கும் வளம் சுரந்தது; பொன் கொழித்தது. இந்த ஆற்றிலிருந்து பலபல கால்கள் வலைப்பின்னலாய் நாடு முழுவதும் ஓடின."

வாலிப மருதுக்கு வயோதிப மருதின் வியாக்கியானங்கள் பிடிக்கவில்லை. எத்தனை எத்தனையோ விளங்கிக் கொள்ள முடியாமையால், விருப்பற்றன ஆவதில்லையா? அதுபோல. அதனால், வாலிப மருது முகத்தைச் சுளித்தது.

"ஆறு தன் வரம்பை மீறுஞ் செயல் எனக்கென்னவோ பிடிக்கவில்லை, தாத்தா. சரி சரி, ஒரு முறை மீறியமையால் மீண்டும் மீறும் என்ற நியதியுமில்லையே?"

"உண்டு என்று நானும் சொல்லவில்லையே, தம்பி."


வயோதிப மருது மனத்தளவிற் சிரித்துக் கொண்டு மௌனமானது; வாலிப மருது எதேதோ சிந்தனைகளில் மனத்தை லயிக்கவிட்டு மௌனமானது.

மீண்டும் ஒருமுறை உற்பத்தித் தானத்தில் எழுச்சி தோன்றியது. ஆற்றிலே புரட்சி எழுந்தது. அது கொற்றவைக் கோலங்கொண்டது. கரைகள் உடைந்தன: வரம்புகள் தகர்ந்தன; எல்லைகள் வேறாயின. ஆட்டம் முடிந்து திரை விழுந்ததும் எங்கும் அமைதி நிலவியது. ஆறு சலசலத்துக் கொண்டு ஏதும் அறியாத பாவி போன்று ஓடியது.

வாலிப மருது சிலிர்த்துக் கொண்டு நோக்கியது.தான் ஆற்றின் நடுவிலே நிற்பதை அழுத்தமாக உணர்ந்தது. வயோதிப மருது அக்கரையில் நிற்பதைக்கண்டது. ஆறு புதுப் பாதையொன்று வகுத்துக் கொண்டு ஓடுவதை வியப்போடு பார்த்தது. நீண்ட பெருமூச்சுவிட்டுக் கொண்டது.



# பதி



நதியொன்று சலசலத்துச் சிரித்துக் கொண்டு ஓடியது. துருதுருத்த குழந்தையைப் போல ஓடி, குதித்து, விழுந்து, எழுந்து ஓடியது. வாலைப் பருவத்து வாளிப்பும் மதர்ப் பும் பூரிப்பும் கூட்டுச் சேர்ந்து கொள்ளை அழகுக் குமரி போலவும் அது ஓடியது. குமரிப் பருவத்துக் குறுகுறுப்புத் தணிந்துவிட, புகுந்த இடத்தின் மரபு வழிப்பட்ட பாரம்பரியங்களை யும் பண்பாடுகளையும் போற்றிக் காக்குங் கற்பரசி போலவும் அது ஓடியது.

அதன் குதிப்பிலும் கொள்ளை அழகிலும் நியதி போற்றும் நெறியிலும் ஏதோ ஒன்று உள்ளீடாய், உள்ளுணர்வாய், உயிர்த்துடிப்பாய் நிலைத்து நின்று ஆட்டுவிப்பது போலத் தோன்றியது.

'அந்த ஒன்று எது?'

நதியின் நடுவே குறுக்காக நீண்டு படுத் திருந்தது ஒரு பாறாங்கல். தாயின் மடியிலே குளிர்மையான உள்ள நெகிழ்வோடு முகம் புதைத்துக் கிடக்கும் குழந்தையாய் அது கிடந்தது. அந்தக் குழந்தைக்கு – பாறாங் கல்லுக்குத்தான் – இந்தச் சந்தேகம் முளைத்தது.

'அந்த ஒன்று எது?'

அறிவு வளத்துக்கான சந்தேகம் மடிவ தில்லை; துருவித் துருவித் தேடும்; ஆராயும். ஆய்வு முடிவு பெறாவிடில். அது சிந்தையிற் புகுந்த புழுவாய்க் குடையும்.

14

சந்தேகத்தின் குடைதலைச் சகிக்கலாற்றாத நிலை பாறாங்கல்லுக்கு உண்டாயிற்று. யாரையாவது கேட்டு விடுவோமே என்று எண்ணியது. எண்ணத்தைத் தொடர்ந்து விசாரம் பிறந்தது.

'யாரிடம் கேட்பது?'

'ஏன்? அம்மாவிடங் கேட்போமே; அம்மாவிலே தோன்றிய சந்தேகம், அம்மாவிலே தீர்வதுதானே முறை?' என்று எண்ணியது.

"அம்மா...."

ஒரே ஒரு குறியை நோக்கி, ஒரே சிந்தனையாய், தன்னுள்ளே தானே பேசித் தத்துவ விசாரஞ் செய்யும் ஞானியைப் போலே சென்ற நதிக்குக் குழந்தையின் குரல் கேட்கவில்லை. ஒன்றில் ஒன்றிய மனத்தாற் பார்க்கவும் முடியாது; கேட்கவும் முடியாது.

"அம்மா... ஓ; என் அம்மா..."

குழந்தை– பாறாங்கல்– பெருங்குரலெடுத்துக் கத்தியது. குரல் கேட்டு நதி திரும்பிப் பார்த்தது. நதியாற் குறிப்பறிய முடியவில்லை; தாயறியாப்பிள்ளையாய் விட்டது பாறாங்கல்.

"நீ யார்?" நதி கேட்டது; ஒன்றில் ஒன்றி நின்ற நிலையிற் குலைவு ஏற்படும்போது தோன்றும் எரிச்சலுடன் கேட்டது. தன் போக்கைத் தடை செய்யும் ஒரு குறுக்கீடு, தாய் முறை கொண்டாடும் அதிசயத்துடன் கேட்டது.

"அம்மா, என்னைத் தெரியாதா? தாயறியாச் சூலுமுண்டோ, அம்மா" – பாசக் குழைவுடன் பாறாங்கல் கேட்டது. தாபமும் சிறு கோபமும் அதன் குரலிலே இழையோடிக் கிடந்தன.

காலத்தின் விருந்து மறதி. தடித்த மறதியை நினைவு விலக்கியது. நிகழ்ச்சியொன்று நிழலாகிப் பின் தெளிவு பெற்றது.

'நீண்ட நெடுங் காலத்துக்கு முன் நிகழ்ந்த நிகழ்வு இது. என் வாழ்க்கைப் பாதையிலே எதிர்ப்பட்ட மலையரசனின் பிணைப்பினாலே, அவனமிசமாய்ப் பிறந்த குழந்தை

இது; என் மூல ஆசையின் உத்வேகத்தைத் தடை செய்யும் பாசச் சின்னம் இது; என் மடியிலே புகுந்து கிடந்து என்னுள்ளே என் போக்குக் கெதிரான தேக்கவுணர்வை யுண்டாக்கும் குழந்தை இது.' இவ்வாறு நதி நினைத்தது.

"குழந்தாய், என்ன வேண்டும்?" என்றது நதி.

அது, தன்னை மீறிப் பொங்கியெழுந்த அன்பிற்கு ஆட்பட்டு, தன் குழந்தையைக் கட்டித்தழுவி, உச்சி மோந்து, கலீரென ஒலி செய்து, வெண்ணுரைப் பற்களைக்காட்டிச் சிந்தை மகிழ்ந்தது ஒரு கணம். அடுத்த கணம், ஆழக் கடலாய், ஆய்ந்தடங்கிய மனமாய், தன்னுள்ளே பேசித் தன்னைக் காணும் யோகியாய் விட்டது. ஏதும் அறியாதது போலத் தன் வழியே செல்லப் புறப்பட்டது.

"அம்மா! நீ எங்கே போகிறாய்? என்னை – என் உடன் பிறப்புக்களை – எங்களை விட்டுவிட்டு எங்கே போகிறாய் அம்மா?"

"எங்கு போகிறேன் என்றா கேட்கிறாய் குழந்தாய்? நான் என் பதியிடம் போகிறேன்."

"பதியா? யார் அம்மா உன் பதி?.. உன் பதி – எங்கள் தந்தை – மலையரசன்..."

"இல்லை; இல்லை, அவர் என் வாழ்வோட்டத்திலே, எதிர்ப்பட்டுப் பிணைந்த ஒன்று. நீயும் உன் சோதரரும் அப் பிணைப்பில் விளைந்த ஒவ்வொன்றுகள்."

"அப்படியானால், அம்மா...."

"என் பதி ஏகமான, விசாலமான, ஆழமான கடல்."

"ஐயோ, அம்மா; உன் வாழ்க்கையில் எதிர்த்து பிணைந்தனவற்றையும் விளைந்தனவற்றையும் விட்டுவிட்டு ... அன்பில்லாதவளா அம்மா நீ?"

நதி மோகனப் புன்னகை செய்தது. "வேண்டிய இடத்து, வேண்டியபோது, வேண்டிய அளவு, வேண்டுவனவற்றுக்கு அன்பு காட்டினேன். அந்த அன்பு உண்மையாய், அறிவாய், ஆனந்தமாய் நிறைவு பெற... என் ஆத்மாவின் பதி, அந்த

ஏகமான கடல்தான்; என் ஆன்ம அமைதி அதனுடன் இரண்டறக் கலப்பதுதான்" என்றது.

"அப்படியானால் எங்கள் கதி..." என்றது கற்பாறை.

"அதை யோசிக்க நான் யார்?" இவ்வளவு நேரமும் தேங்கி மயங்கி நின்ற நிலையை ஒரு குதிப்பினால் விழிப்பாக்கிக் கொண்டு விரைந்தது.

அந்த நதி மீண்டும் சலசலத்துச் சிரித்துக் கொண்டு ஓடியது.



# விடி வெள்ளி



இரவு இனியது; அழகியது.

"அந்த இனிமையும் அழகும் மண்ணி லல்ல; விண்ணில் உண்டு" என்று அண்ட வெளியிற் சிதறிக் கிடந்த அநேக நட்சத்திரப் பெண்கள் கண்சிமிட்டிச் சிரித்து, பேசாமற் பேசினர்.

நட்சத்திரப் பெண்கள் வானத்து முல்லை மலர்கள்; வானத்து வைரமணிகள்; வானத்து விளக்குகள்; அண்ட வெளியிலே பேசரிய பெரு நியதிக்குட்பட்டு இயங்கும் சோதிப் பொருள்கள்.

ஒருநாள், காலம் கணித்த பாதை வழியே இரவு கழிந்து சென்று, வைகறைப் போதின் எல்லையிலே நின்றது.

அப்போது கிழக்கு வானிலே வெள்ளி முளைத்தது; விடிவெள்ளி உதித்தது; உஷை தோன்றினாள்.

வைகறைப் போதிலே வான அரங்கிலே தோன்றிய புதிய நடன சிங்காரி அவள். கொள்ளை அழகுக் கோலத்தோடு மெல்ல, மெல்ல மேலே மேலே வந்தாள்.

அவளுடைய கள்ளமற்ற வெள்ளைச் சிரிப்பில் தூய்மை இருந்தது; அதனால் மண்ணில் இருந்து வீட்டினை விரும்பும் முனிவர்கள் எழுந்து கைகூப்பினர். அவளுடைய கள்ளமற்ற வெள்ளைச் சிரிப்பிலே உயிர்க்களை ஒளி வீசிற்று; அதனால் மண்ணில் உள்ள

15

உழவர்கள் மனத்திலே ஊக்கம் உதித்தது. அவளுடைய கள்ளமற்ற வெள்ளைச் சிரிப்பிலே மயக்கும் ஒளியும் இருந்தது; அதனால் நட்சத்திரப் பெண்கள் மயங்கினர்; மருண்டனர்.

மனம் மருண்டால் தலை தடுமாற்றம் தோன்றும். உண்மை இன்மையாயும் இன்மை உண்மையாயும் தோன்றும். மனம் மருண்டால் கொதிப்பும் ஆற்றாமையும் தோன்றுவது முண்டு.

நட்சத்திரப் பெண்கள் எல்லாரும் தலைதடுமாறிக் கொதித்தனர்; அந்த உஷையைப் பார்த்துக் கொதித்துக் குமுறினர்.

அந்தப் பெண்களில் ஒருத்தி மேல் வானில் அத் தமித்துக் கொண்டிருந்தாள். அவள் மனக் குமுறல் எரிமலை யாயிற்று. அவள் கண்ணில் மயக்கம் நிழலாட உஷையைப் பார்த்தாள்.

உஷை கீழ் வானப் பரப்பிலே, மெல்ல மெல்ல, மேலே மேலே வந்து கொண்டிருந்தாள். அந்த வருகையில் ஒரு வேகம் இருந்தது. அந்த வேகத்தில் குரல் இருந்தது; அந்தக் குரலிலே பேசாத பேச்சு இருந்தது. அந்தப் பேச்சு, "காசினி காத்திடும் காவலன் வருகிறான்; தன்னேரில்லாத் தந்தை வருகிறான்; தரணிப் பெண்ணின் தலைவன் வருகிறான்" என்றது.

உஷையைக் கண்ட தோடமையாது அவள் பேச்சையும் கேட்டபோது, கோலங் குலைந்து மறையும் அந்த நட்சத்திரப் பெண்ணுள்ளே கனன்ற எரிமலை வெடித்தது.

"அடி சிறுக்கி, நீ போற்றிப் புகழ்கிறாயே, அவன் யார்? இரவுக்கு எழில் தந்து, ஒளிதந்து, சோபைதந்து வாழ்ந்த எங்கள் வாழ்வை முடிக்க வந்த எமனடி அவன். எங்களை மாத்திரமன்று; உன்னையும்தான்! அது கூடவா தெரிய வில்லை?"

ஆனால் உஷை, வேகத்தையும் குறைக்கவில்லை; சிரிப்பையும் குறைக்கவில்லை; பேசிய–பேசாத பேச்சையும் குறைக்கவில்லை. இந்தக் குறையாமைகள் எல்லாம்

நட்சத்திரப் பெண்ணாளின் கோபத்தைத் தூண்டிவிடும் துருத்தி களாயின.

"நெளிப்பையும், இளிப்பையும் பார். எங்களில் ஒருத்தி யாய்ப் பிறந்து எங்கள் குலநாசத்துக்குத் துணை வருகிறாளே. குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு!"

உஷை அப்போதும் பேசாமல் இருக்க முயன்றாள். 'மௌனம் கலகநாஸ்தி.'

ஆனால்–

நாம் ஏன் பிறந்தோம் என்ற தத்துவ உணர்வு உஷைக்குத் தலைப்பட்டது. அதனால், பேச வேண்டிய இடத்திலே பேசாமையும் பெருந்தீமையாகும் என்று எண்ணியது.

"அக்கா"-உஷையின் குரலிலே கனிவு இருந்தது. உண்மையைத் தெளிவாக்க அதுவும் வேண்டுமன்றோ?

"அக்காவாம், அக்கா. போடி போ; யமன் தூதாய் வந்த நீயா எங்கள் தங்கை? இப்படி ஒரு தங்கை இருப்பதே எங்களுக்கு அவமானம்."

"அக்கா, கொஞ்சம் அமைதிகொள். அருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதை அழிவு என்று மருளுகிறாயே. மருளை நீக்கி உண்மை உதயத்தைப் பார்."

"என்னடி தத்துவம் பேசுகிறாய்?"

"விளங்கக் கூடிய தத்துவந்தான் அக்கா; அவன் உண்மை வடிவினன்; நியதியே அவன் நெறி. அருளே அவன் குணம். இந்த பிரபஞ்சமே அவன் அருள் வெள்ளத்தில் மூழ்கி, நீயும் நானும் அவையும் பிறவும்..."

கிழக்கே ஆதவன் உதித்தான்; அவனொளி பரந்தது. ஒளி வெள்ளம் பிரபஞ்சத்தை அணைத்தது; பிரபஞ்சம் அதில் மூழ்கியது.

அத்தமித்த அந்த நட்சத்திரப் பெண் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். சொல் வரவில்லை. மூழ்கித் திளைத்தது.

ஏன், அந்த உஷை கூடத்தான்...



இரண்டு ஈக்கள்; ஒன்று ஆண், மற்றையது பெண்.

இரண்டும் மலக்குழியிலே சம்பூரணமாக மேய்ந்து, செல்லக் கதைகள் பேசிக் கூடிக் குலவிக் களித்தபின், 'கிர்' என்று பறந்து சென்று, அந்தக் கோயில் மதிலிலே இருந்தன.

முன்கால்கள் இரண்டையும் கைகளாக்கி, அவற்றைக் கொண்டு வாய்பூசின. அந்தக் கைகள் இரண்டையும் ஒன்றுடனொன்று தட்டியுந்துடைத்தும் சுத்தி செய்தன. இறகுகளைச் சிலிர்த்து படபடெனத் தட்டி, உதறிச் சுத்தி செய்தன.

அப்பொழுது, உச்சிக்காலப் பூசையின் முன்னறிவிப்பாய்க் கண்டாமணி ஒலித்தது. அந்த நாத வெள்ளத்திலே ஈக்கள் இரண்டும் மூழ்கி, இன்னதென்று இனங்காண முடியாத தோர் புனிதவுணர்விலே லயித்துத் திளைத்திருந்தன.

மணியோசை தேய்ந்து மறைந்த போதினிலே, ஆண் ஈ தன் மனையாளைப் பார்த்து, "சுவாமி தரிசனம் செய்யவேண்டுமென்று ஒவ்வொரு நாளும் துடிப்பாயே, இன்றைக்கு வேளை வாய்த்திருக்கிறது... உச்சிக்காலப் பூசை... போவோமா?" என்றது.

"சீ; அநாசாரத்தோடா? காலை தொடக்கம் இப்பொழுதுவரை நாங்கள் புரண்டுருண்டு எழுந்த இடங்களும் செய்த செயல்களும்.

ஓ! இன்றைக்கு வேண்டாம்... இன்னொரு நாள் போவோம்.." பெண் ஈ மிகக் கூசியது.

ஆண் ஈ சிரித்தது. "அப்படியானால் ஒரு நாளுமே. போக முடியாது. ஆசாரம், அநாசாரம் எல்லாம் ஒவ்வொரு வரும் தமக்குத்தாமே விதித்த தகுதியையும் நேர்ச்சித்த மனப்பாங்கையும் பொறுத்தவை. எங்களைப் பொறுத்த வரையில் நீ கருதிக் கொண்ட அநாசாரந்தான் உயிர் வாழ்க்கை. அதனால் அந்த அநாசாரமே எங்களுக்கு ஆசாரம். கொஞ்சமும் கூச்சப்படாமல் வா, போவோம்."

ஆண் ஈயைப் பின்தொடர்ந்து பெண் ஈயும் பறந்து சென்று கோபுர வாயிலை அடைந்தது. ஒருவாறு தேய்ந் திருந்த மனக்கூச்சம், திறந்திருந்த கோயில் வாசலைக் கண்டதும், முழு மூர்க்கமாய் வளர்ந்து பெண் ஈயைத் தடுத்தது.

"ஐயோ, நான் உள்ளே வரவில்லை... நீங்கள் என்ன சொல்லியும் மனக்கூச்சம் மாறவில்லை. வேண்டாம்; நீங்கள் போய் வாருங்கள். நான் இங்கிருந்தே சுவாமி தரிசனம் செய்கிறேன்."

அந்த நேரத்திலே அந்தக் கோயிலிலே இரு மனித சீவன்கள் மாத்திரம் காணப்பட்டன.

ஒன்று கோபுரவாயிலில் நின்றது, அது அந்த உச்சி வேளையிலே சிவனை வழிபட வந்த சீவன். மற்றொன்று கோபுரவாயிலுக்கு வெகுதூரத்திலே கருவறையில் நின்றது; அது சிவனுக்கு அயலிலே நின்று சிவனுக்குப் பூசை இயற்ற வந்த சீவன்.

பெண் ஈ பறந்து போய், கோபுரவாயிலில் நின்ற சீவனின் தோளில் இருந்தது. ஏனோ அந்தச் சீவன் அந்த ஈயைக் கலைக்கவில்லை.

ஆண் ஈ விரைவாகப் பறந்து சென்று, கருவறையில் நின்ற சீவனின் தோளில் இருந்தது. அந்தச் சீவன் அந்த ஈயைத் தன்னிலே தீண்டவிடாமல் துரத்தியது.

தோல்வியுற்ற ஆண் ஈ சுற்றிச் சுழன்றபின், கருவறையின் ஒரு மூலையிலே சென்றமர்ந்தது, அவ்விடம் முழுவதையும் அளந்தது.

கருவறையின் கருங்கல் தளம் எங்கும், எண்ணெயும் தண்ணீரும் தூசும் தும்பும் கலந்த கலவையிற் பிறந்த பிசான் பிசுபிசுத்தது. ஆகும்வரை மங்கலப் பொருளாய் ஆனபின் நிர்மாலியமாய் கழித்துவிடப்பட்ட பத்திர புஷ்பங்களும் பிறவும் ஒருபாற் குவிந்து கிடந்தன. அழுகி நொது நொதுத்துக் கிடந்த அவற்றின் நிலைகொண்டு, அவை அங்கு குவிந்த காலத்தைக் கணித்திடமுடியும். கோமுகை வழியாக வந்த சரக்குப் பூச்சிகளும் அட்டைகளும் அந்தக்குவியலில் ஆனந்தமாக வாசஞ் செய்தன.

ஆண் ஈ முகத்தைச் சுளித்துக் கொண்டு சிவலிங்கத்தைப் பார்த்தது. பீடமெங்கும் அழுக்காலான சேறு; சேற்றில் மலர்ந்த செந்தாமரையாய் சிவலிங்கம் விளங்கியது.

கருவறையில் நின்ற அந்தச் சீவனுக்கு வெளியுலகில் எத்தனை எத்தனையோ அவசரக் கருமங்கள் தேங்கிக் கிடந்தன போலும்; அந்தச் சீவனுக்கு கருவறை அந்தரங்க அறையாய் - தன்னைத் தவிர வேறு எவரும் அண்டமுடியாத அறையாய் - இருக்கும் என்ற எண்ணம் போலும்; இவ்வேதுக் களாலேதானோ, பீடத்திற் குவிந்து கிடந்த நிர்மாலியங்களை அது அகற்றவில்லை; கூடு பற்றிய விளக்குக்கு எண்ணெய் விடவில்லை.

அந்தக் கருவறைச் சீவன் மணி கிலுக்கியது; தீபம் காட்டியது; மலர்களால் எறிந்தது. வெகுவிரைவாக வேத மந்திரங்களைக் கொட்டியது. பூசை இயற்றியது. அந்தப் பூசையில் வேகம் இருந்தது; எந்திரகதி இருந்தது; வெறுப்பின் மெல்லிய வாடையும் இருந்தது. ஆனால் இருக்க வேண்டிய பயபத்தி, சாந்தம், கனிவு, சோபை எல்லாம் குடிபோய்விட்டன.

அண்மையில் இருந்து சுவாமி தரிசனம் செய்யவிரும்பிய ஆண் ஈ, ஏமாற்றத்தோடு வெளியே புறப்பட்டது; கோபுர வாயிலுக்குப் பறந்து சென்றது.

கோபுர வாயிலில் நின்ற சீவனின் தோளிலே பெண் ஈ இருப்பதைக் கண்டது. தான் முன்கண்ட இடத்தில் முன் கண்ட நிலையில் அந்தச் சீவன் நிற்பதைக் கண்டு வியந்தது. தன் மனைவிக்கு அருகிலே சென்று இருந்தது. மனைவி கணவனைக் கருத்தோடு நோக்கியது.

"என்ன, இந்தச் சீவனுக்கு உணர்ச்சியே இல்லையா?" என்று வியப்போடு கேட்டது, ஆண் ஈ.

"அப்படித்தான் தெரிகிறது. நானும் இவ்வளவு நேரமாய் இந்தத். தோளிலேதான் இருக்கிறேன்... எதற்கும் இந்தச் சீவனை அவதானித்துப் பாருங்கள். எனக்கு ஒன்றுமே விளங்க வில்லை" என்றது பெண் ஈ.

ஆண் ஈ, சீவனை நோக்கி அளந்தது.

அந்தச் சீவனில் ஆட்டமோ அசைவோ இல்லை; மெய்மறந்தநிலை. மனத்திலே சித்தித்த லயிப்பை, லயிப்பிலே விளைந்த யோகத்தை, யோகத்தின் பேறான ஆனந்த பரவசத்தை மெய்ப்பாடுகள் வெளிப்படுத்துகின்றன; கண்ணீர் அருவியாய் மார்பிற் பாய்கிறது; நித்திய சுக சாந்த சோபை முகத்திற் படர்கிறது. மெய்ம்மயிர் பொடித்து நிற்கிறது.

சீவனின் பக்குவப் பாங்கை உள்வாங்கிய ஆண் ஈக்கு வியப்பால், விந்தையால், உள்விளைந்த ஒளியால், தன்னிழப்புச் சித்தித்தது.

"என்ன, உங்களைத்தானே?" என்று குரல்கொடுத்தது பெண் ஈ. குரல் கேட்டுத் தன்னினைவு பெற்ற ஆண் ஈ "என்ன?" என்றது.

"ஆமாம், கோயிலுக்கு உள்ள சென்றீர்களே, சென்று..."

"நேரே கருவறையையடைந்தேன்."

"ஐயையோ... கருவறைக்கு நீங்கள் போகலாமா?" ஏதோ ஒருவகைப் பயத்தால் பெண் ஈ துடித்தது.

"பயப்படாதே. போகலாம், போகக்கூடாது என்பவற்றின் பேதமும், பேதத்துக்கான காரணமும் எனக்கு விளங்காது. ஒருவேளை, அந்தச் சீவன் கருவறைக்குப் போகலாம். இந்தச் சீவன் இங்கேதான் நிற்க வேண்டும்; கருவறைக்குப் போகக் கூடாது என்ற பேதமும் காரணமும் சில மாமேதைகளுக்கு

விளங்கி யிருக்கலாம். ஆனால், எனக்கு விளங்க வேண்டிய அவசியமுமில்லை; அதனால் போனேன்... ம்... அந்தக் கருவறையிலும் பார்க்க, நாங்கள் மிக்க களிப்போடு வாழும் சில இடங்கள் இருக்கின்றனவே, அவை எவ்வளவோ மேலானவை."

"அபசாரம்; அபசாரம்; அங்ஙனம் சொல்லக்கூடாது. எங்ஙனமானாலும் அந்தக் கருவறை, சிவன் எழுந்தருளி யிருக்கும் மூலத்தானமல்லவா?"

"மூலத்தானத்திலே சிவன் இல்லையே?"

"ஏன் இல்லை?"

"சிவன் துரத்தப்பட்டுவிட்டார்!"

"சிவனா துரத்தப்பட்டார்? யார் துரத்தினார்?"

"கருவறையில் நின்ற ஒரு சீவன்"

"அப்படியானால் சிவன் எங்கே?"

"வேறெங்குமில்லை இங்கே..."

"இங்கே என்றால் எங்கே?"

ஆண் ஈ மெல்லச் சிரித்தது.

"இன்னுமா உனக்கு விளங்கவில்லை. இங்கே என்றால் இங்கேதான். எந்தச் சீவனில் நாங்கள் இருக்கிறோமோ, அந்தச் சீவனின் நெஞ்சிலேதான்."

"என்ன சொல்லுகிறீர்கள்?"


"ஆமாம். இந்தச் சீவனின் கோலத்தையும் நிலையையும் கண்டு சற்றுமுன் வியந்தாயல்லவா? இந்தக் கோலமும் நிலையும் இந்தச் சீவனில் சிவன் குடிகொண்டமையால் விளைந்தவை; இந்தச் சீவன் சிவனோடு ஐக்கியப்பட்டமையால் விளைந்தவை. இப்பொழுது இந்தச் சீவன் சிவனாகிவிட்டது."

"சிவசிவ, சிவசிவ" என்று கை கூப்பித் தொழுதது பெண் ஈ.

"என்ன தவஞ் செய்தோமோ; மிக அண்மையில் நிதரிசனமாகச் சிவனைக் கண்டு தொழக் கிடைத்த பேறே பெரும் பேறு; இப்பேறு யார்க்குக் கிடைக்கும்?"

"சிவசிவ, சிவசிவ" என்றது ஆண் ஈ.

சுவாமி தரிசனம் செய்த மனநிறைவோடு ஆண் ஈயும் பெண் ஈயும் வெளியே பறந்து சென்றன.



# மயக்கம்

இயற்கையென்னும் நித்திய கன்னி, புத்திளமையும் புத்தழகும் பிணைந்த காலை வேளைகளிலும், மயக்கும் எழில் சிந்தும் மாலை வேளைகளிலும் களிகொண்டு பூரித்துப் புன்முறுவல் பூப்பாள். அந்தப் புன் முறுவல், கோடானகோடி மலர்களாய்ப் பூமியில் மலரும். அவை குழந்தைமையின் முழுமைப் பண்போடு சிரித்து விளையாடும். குழந்தைகளின் உடல் மென்மையும் குமிண் சிரிப்பும் கண்ணக் குழிவினழகும் மணிக் கண்களின் மலர்ச்சியும் அந்த மலர்களிலே நிழலாடும். அதனால் மலர்கள் குழந்தைகள்.

ஒரு பூங்காவிலே அம்மலர்க் குழந்தைகளிற் பல, கூடி மகிழ்ந்து மலர்ந்து சிரித்து விளையாடின. அவற்றிலே சில வண்ணமும் வடிவுங் கொண்ட நறுமலர்கள். சில வண்ணமும் வடிவுமே கொண்ட மலர்கள்; நறுமைப் பண்பு அவற்றுக்கில்லை.

அம்மலர்களெல்லாம் மானிடத்துச் சுவையுணர்வின் சாட்சிகள். சுவையுணர்வின் எந்த அளவுகோல் கொண்டு மானுடம் அளந்ததோ யாரறிவார்; கோடானு கோடி மலர்களிலே சில நூறு மலர்களே அங்கு சிரித்து விளையாடின. எல்லா மலர்களும் குழந்தைகளே யானாலும், ஒரு சில குழந்தைகளை மாத்திரம் போற்றிப் புகழ்வதற்குக் காரணம் என்ன? இந்தப் பேதவுணர்வு எங்கிருந்து வந்தது.? சுவையுணர்விலிருந்தா?

17

இயலுணர்விலிருந்தா? பேதித்துக் காண்பதே ஆற்றலினாற்றல் என்ற எண்ணவுணர்விலிருந்தா?

பேதகஞ் செய்து வெறுப்பை விளைவாகப் பெறும் மானுடப் பண்பு, அருமந்த மலர்களுக்குமா தொற்றிக் கொள்ள வேண்டும்?

அந்த மலர்வனத்திலே ஒரு ரோசா, இராச கம்பீரத்தோடு நின்றது. அந்த ரோசா மலரைப் படைக்கும் போது, படைப்புத் தேவன் அளவுக்கு மீறிய சிரத்தை கொண்டு விட்டான். இன்றேல், கிண்ணம் போன்றதொரு வடிவும், செம்மையான தொரு செம்மையும் கிடைத்திருக்க முடியுமா? மென்மையிற் பிறந்ததொரு மென்மையாய், தண்மையிற் பிறந்ததொரு தண்மையாய் மனத்தைக் கவர்ந்திருக்க முடியுமா? புலன் களைச் சொக்க வைத்து மோகம் செய்யும் நறுமணத்தைப் பெற்றிருக்க முடியுமா?

அந்த ரோசா மலர்ந்து சிரித்தது; பெருமிதத்தோடு நாற்றிசையும் நோக்கியது. அந்த நோக்கின் கருத்திலே ஒருவகைக் 'குலுக்கு' முற்றியிருந்தது. அழகுக்கு அந்த வகைக் 'குலுக்கு' ஒரு தனியியல்பு போலும்!

அந்த ரோசா மலரின் அழகுப் பொலிவை, தளுக்கை, மினுக்கை, குலுக்கை வைத்த கண் வாங்காமல் பார்த்தது ஒரு சிறு நெருஞ்சி; சில்லென்று பூத்த மஞ்சள் மலர்க் கண்களால் நோக்கியது அந்தச் சிறு நெருஞ்சி. அந்த ரோசாப் பாத்தியில், எப்படியோ அது முளைத்து வளர்ந்து பூத்து நின்றது.

ரோசாவின் நோக்கும் சிறு நெருஞ்சியின் நோக்கும் ஒன்றையொன்று சந்தித்த வேளையிலே, ஒருதலைக் காதல் தான் அரும்பியது.

காதல் கொண்ட சிறு நெருஞ்சி, அள்ளியெடுத்து விழுங்கி விடுவது போல ரோசாவை நோக்கியது; பின் கண் சிமிட்டிச் சிரித்தது.

அலட்சியம் செய்தது ரோசா. தள்ளி விழுத்தி மிதித்து விடுவது போல நோக்கியது; பின் ஏழையைப் பார்த்துச் செல்வன் சிரிப்பது போலச் சிரித்தது.

சிரித்த ரோசா, "நீ யார்? புன்மையளாய், புன்மலரைப் பூத்து நிற்கும் நீ யார்?" என்றது.

கேள்விக் கணையாய் விடுபட்ட அம்பு, சிறுநெருஞ்சி யின் இதயத்தைத் துளையிட்டது. ஆற்றொணா வலியையும் துயரத்தையும் அடக்கிக் கொண்டே, "நானா? நான் புல் லியளானாலும் புன்மலரைப் பூத்து நிற்பவளானாலும், தங்கள் குலத்திலே தோன்றியவள் நான்; தங்களைக் காதலித்து உருகுபவள்; தங்களுக்கு ஆட்படத் துடிப்பவள்," என்றது சிறுநெருஞ்சி.

சிறுதென்றல் ரோசாவை வருடிச் சென்றது. ரோசா மலர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது.

"அடி பேதைப் பெண்ணே, ஆட்படும் அடிமைக்கும் அதற்கான தகுதி வேண்டாமா? எவ்வகையிலும் நீயும் நானும் சமனாக முடியுமா? என் வடிவையும் வண்ணத்தையும் பார்; தண்மையையும் மென்மையையும் பார்; தளுக்கையும் மினுக்கையும் பார்; பார்த்த பின்னுமா உனக்கிந்த எண்ணம்; போ... போ... கண்முன் நிற்காதே!"

ரோசாவின் திமிர்ப் பேச்சு, நெருஞ்சியின் நெஞ்சை முள்ளாய்க் குத்தியது.

"ஆட்படும் அடிமைக்குத் தகுதி என்ன தெரியுமா? களங்கமற்ற அன்பு... அது என்னிடம் உண்டு; உன்னிடம்... அதுதான் போகட்டும்; 'நீயும் நானும் சமனாக முடியுமா?' என்று கேட்டாயே; ஏன் முடியாது? நீ உன்னிடம் பார்க்கச் சொன்ன அத்தனையும் சமானமாகாமைக்குக் காரணங் களாகிவிட முடியுமா?"

"ஏன்?... சமானமாகாமைக்கு நிச்சயமாக அவையே காரணம்."

"அழகு மயக்கம் உன் கண்ணை மறைப்பதால், உண்மை உனக்குத் தெரியவில்லை."

"உண்மை கண்ட ஞானியோ நீ?"

"ஞானியாகாவிட்டாலும், உண்மை எனக்கு விளங்கும். நீயும் நானும் எல்லா வகையிலும் சமம்; எம்மிடையே உயர்வோ தாழ்வோ இல்லை."

"இவ்வளவு துணிவுடன் எப்படிச் சொல்லுவாய்"

"தந்தையாய் அருள் பொழியும் சூரியனைக் கேள்; அவன் சொல்லுவான். தாயாய்க் காக்கும் பார்மகளைக் கேள்; அவள் சொல்லுவாள்."

"அவர்கள் என்ன சொல்லி விடுவார்கள்? பொய்யை மெய்யென்று சொல்லி விடுவார்களோ?"

அப்பொழுது நெருஞ்சி சூரியனைப் பார்த்து வேண்டியது; பார்மகளைப் பார்த்து இறைஞ்சியது.

அப்பொழுது சூரியன் உச்சி வானில் நின்று ஒளிர்ந்தான். வெள்ளைச் சிரிப்புடன் கூறினான்:

"நானே மலர்களை மலர்விப்பவன்; சிரிக்கச் செய்பவன்; வண்ணமும் வனப்பும் தருபவன். என்நோக்கில் எனக்கு உயர்ந்த மலர் என்று ஒன்றுமில்லை; இழிந்த மலர் என்று ஒன்றுமில்லை. எனக்கு மலர்கள் எல்லாம் மலர்களே?"

பார்மகள் கூறினாள்:

"என் நோக்கில் மலர்கள் எல்லாம் நான் பெற்ற குழந்தைகள்; நான் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த குழந்தைகள். எங்காவது தாய் தன் குழந்தைகளில் வேற்றுமை காண்பதுண்டோ? உயர்வு தாழ்வு காட்டுவதுண்டோ?"

மெல்லிய காற்று ஆடி அசைந்து சென்றது. ரோசா மலர் உண்மையுணர்ந்து வெட்கியதோ; பொலு பொலென இதழ்களை உதிர்த்தது. இதழ்கள் சிறு நெருஞ்சி மலர்கள் மீது விழுந்தன.

நெருஞ்சி மலர்கள் ரோசா இதழ்களைப் பரிவுடன் அணைத்தன.



# தர்மம் தெரிந்தவர்கள்



காயகற்பக் கலையிலே துறைபோன வசந்தருது, கோடையிலே வாடியும், மாரியிலே விறைத்து நடுங்கியும், முதுமைக்குறி பெற்றுப் பொலி வழிந்த இயற்கையை, மெல்லென அணைத்துச் சுகஞ் செய்து, வாலைக் குமரி யாக்கியது. அந்தக் குமரி, உள்ளங் கிளுகிளுக் கப் பூரித்தாள்; எங்கெங்கும் பசுமை படர்ந்தது. மோகன முறுவல் காட்டினாள்; எங்கெங்கும் பல்லாயிரம் வண்ண வண்ண மலர்கள் சிரித்தன; தேன் பிழிற்றின; சுகந்தத்தைக் காற்றிலே கலந்து, வெகு நாகரிகமாக, சூசக மாகக் கட்டியங் கூறின. கட்டியத்தின் பொருள் உணர்ந்த தேனீக்கள் மலர்களை நாடின.

இந்த இயற்கையில் ஒருமை யுற்று இழைந்து, மலர்ச் சரங்கள் பல தூக்கிச் சிரித்துப் பூரித்து ஒரு மாமரம் நின்றது. அதன் கிளையொன்றிலே ஒரு தேன்கூடு.

ஆயிரம் ஆயிரம் தேனீக்கள் போவதும் வருவதுமாய்ப் பறந்து திரிந்தன. அந்தப் 'பறப்பு'த்தான் அவற்றின் சுயகுணம்; சுவ தருமம்.

அந்தத் தேனீக்களிலே ஒரு தேனீயின் 'பறப்பை' ஒரு குயில் நெடு நேரமாக விடுப்புப் பார்த்தது.

"என்ன பறப்பு? என்ன பறப்பு? கணப் பொழுதும் ஓய்வில்லாமல்.... அலுப்புச் சலிப் பில்லாமல்... ஏன்தான் இப்படி உழைத்து உழைத்து மாய்கிறதோ?"

குயிலின் குரல் வியர்த்தமாயிற்று. தேனீ அதை லட்சியஞ் செய்யவில்லை; பறப்பாய்ப் பறந்தது. குயில் பொறுமை இழந்தது. மீண்டும் கூவியது.

"ஓ! சின்னத் தேனீ, சின்னத்தேனீ, கொஞ்சம் நில். ஏன் உனக்கு இந்தப் பறப்பு? ஏன் உனக்கு இத்தனை தீவிரம்? சொல்லிவிட்டுப் போ."

சின்னத்தேனீ குயிலின் அருகே பறந்து வந்தது. ஆனால் தாமதிக்கவில்லை; இரைந்து விட்டுச் சென்றது.

"குயிலாரே, குயிலாரே! நிற்க நேரமில்லை; மாலையிலே பேசுவோம்."

அந்த மாலை நேரமும் வந்தது. அந்தத் தேனீயும் ஆனந்தக் களிப்புடன் முரன்று குயிலின் அருகிற் சென்று ஒரு மாவிலையின் நுனியில் அமர்ந்தது.

"குயிலாரே, குயிலாரே, இனி, சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்; கேட்க வேண்டியதைக் கேளுங்கள்."

"சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை; கேட்க வேண்டியது தான் ஒன்று உண்டு. ஆமாம். ஒரு கணப்பொழுதேனும் ஓய்வு இல்லாமல் வேலை செய்கிறாயே, அதன் மர்மம் என்ன?"

"அதில் என்ன மர்மம் இருக்கிறது? எவனாலும் ஒரு கணப்பொழுதேனும் உடலாலோ மனத்தாலோ தொழில் செய்யாமல் இருக்க முடியாதே! அந்த முடியாமையால் தொழில் செய்கிறேன்."

"ஓகோ, இப்படித் தொழில் செய்து கண்ட பயன் என்ன? நீங்கள் சேர்த்து வைத்த தேனை யார் யாரோ கொள்ளை கொண்டு போகிறார்களே; கொள்ளை கொடுக்கவா இத்தனை பாடு?"

"உள்ளதைக் கொடுப்பது கொள்ளையா? உள்ளதைச் சேர்த்து வைத்து என்ன செய்வது? யாருக்கோ எவ்வாறோ பயன்பட வேண்டுமே. அதுதான் போகட்டும்; பயனைப் பற்றிச் சிந்திப்பதற்கு எங்களுக்கு அதிகாரமில்லை. தொழில் செய்து கொண்டிருப்பதுதான் எங்கள் தருமம்."

குயில் சிரித்து விட்டு "வாழத் தெரியாதவர்கள்; வாழத் தெரியாதவர்கள்" என்று கூவியது.

தேனீ சிரித்தது.

# மனக்குருடு



19

"அண்ட நாயகன் வருகின்றான்; செங் கதிர்ச் செல்வன் வருகிறான்; ஏழ்பரித் தேரேறி, அவனி காத்திட வருகின்றான்; வண்ண வண்ணக் கோலங்கள் இடுமின்; வாழ்த் திசையின்; வழிபாடு இயற்றுமின்!"—கீழ்த் திசை மேல்வானில் சிறு நில வெறித்து நின்ற உஷை கட்டியங் கூறுகிறாள்.

அந்தக் கட்டிய வொலியைக் கேட்ட கீழ்த்திசைப் பெண்ணாள் விழித்தெழுகிறாள்; சந்தனக் குழம்பெடுத்து அழகொழுக அடி வான் நிலத்திற் கோலம் இடுகிறாள்; குங்குமக் குழம்பெடுத்து, மஞ்சட் கோலத்து விளிம்பெங் கும் தடவுகிறாள்; நீலக்குழம் பெடுத்து அந்தக் கோலத்தின் வெளி விளிம் பெங்கும் பூசு கிறாள். தனிநிறங்களும், தனி நிறங்களின் மயங்கிற் பிறந்த கலப்பு நிறங்களுமாய் எழிற் கோலமொன்று அங்கே விரிகிறது. அந்தக் கோலத்திற்கு தோரணம் தொடுக்கிறாள். பின்னணியின் வண்ணக் கலவைத் தாக்கத் தினாலே, மேகப் பூக்களும் பன்னிற மலர்களாய் விந்தை செய்கின்றன.

அந்தக் கட்டிய வொலியைக் கேட்ட பறவைக் குலங்கள் விழித்தெழுகின்றன. கீழ்த்திசை வானத்துக் கோலவெழிலைக் கண்ணுள்ளே நெஞ்சை வைத்துக் கண்டு களிக்கின்றன. இத்தனைக்கும் காரணமான காரணனை— செங்கதிர்ச் செல்வனை

மனமார வாழ்த்துகின்றன; மெல்லெனச் சிலம்புகின்றன; குயிலோசையின் உச்சத் தானத்துள்ளடங்கி, பலபல புள்ளினங்கள் பலபல சுருதி பேதங்களிலே சிலம்புகின்றன.

விடிந்தும் விடியாத அந்தக் காலைப்பொழுது, புள்ளினத்தின் மெல்லிசையாற் சிலிர்த்து விம்முகிறது.

"உம்..... ம்... யாரங்கே? என்ன வந்து விட்டது உங் களுக்கு? எதற்காக இப்படி இரைந்திரைந்து அலம்புகிறீர்கள்? உம்...உம்" - அந்தப் பாரிய ஆலமரத்தில் இருந்த ஆந்தை யொன்று கோள விழிகளை உருட்டிப் பார்த்து அலறு கிறது. அந்த மரத்துக்கிளை தோறும் இருந்த புள்ளினங்கள் ஒரு கணம் திகைத்துப் பயந்து அடங்குகின்றன. அடுத்த கணம் தம்மை மறந்த களியிலே சிலம்புகின்றன.

"உம் .. ம்.. என்ன, நான் சொன்னது காதில் விழவில்லையா?... கர்மம் ... கர்மம். ஏன்தான் இப்படி அழுது தொலைக்கிறீர்களோ? இந்த இடத்தைவிட்டு போங்கள்; எங்காவது போங்கள்" என்று ஆந்தை ஆத்திரத்துடன் அலறுகிறது.

குயில் சிரித்தது. "என்ன அழுகிறோமா? வாழ்த்தொலி செய்கிறோம்; கூட்டிசை வழங்குகிறோம்; மங்கலப் பண்பாடுகிறோம்."

"மங்கலப்பண்ணா பாடுகிறீர்கள்? வெறும் காட்டுக்கூச்சல் ... காது அடைக்கிறது. மனம் பற்றி எரிகிறது!" ஆந்தை முற்றி விளைந்த வெறுப்பை உமிழ்கிறது.

"காட்டுக் கூச்சலா? போகட்டும்... அந்தக் கீழ்வானத்தைப் பாருங்கள்... அந்த எழிற் கோலங்கள் கூடவா உங்கள் மனத்தைச் சிலிர்ப்பிக்கவில்லை?"

"என்ன கீழ்வானமா?... எழிற் கோலமா?... எங்கே?... உம்... வடிகட்டின அலங்கோலத்தை எழிற் கோலமென வர்ணிக்கும் உங்களுக்கு நிச்சயமாகப் புத்தி தடுமாறிவிட்டது."

"என்ன அலங்கோலமா...? போகட்டும்.... அங்கே பாருங்கள்; ஒளிவெள்ளம் பரக்கிறது. இந்த ஒளியின் காரண

மாய், மங்கல நாயகனாய் அவன் வருகிறான். சிறிது உற்றுப் பாருங்கள்; உங்கள் மயக்கம் தெளிந்து விடும்.''

“என்ன, எனக்கா மயக்கம்?... என் அனுபவ முதிர்வின் கனிவுக்கு மயக்கம் என்றா பெயர்?... சரி சரி கனத்துச் செறியும் திணிந்த இருளுக்கு ஒளி வெள்ளம் என்றா பெயர்?... அந்த இருளின் நாயகனா மங்கல நாயகன்.... சீச்சீ, அவன் ஒரு அமங்கலச் சின்னம்.''

இதைக் கேட்டுக் குயிலும் ஏனைய புள்ளினங்களும் அதிர்கின்றன.

சிறிது நேரத்தில் ஒளியின் ஒளியால் உணர்வு தலைப்பட்ட அவை சிரிக்கின்றன;

சிலம்புகின்றன. சிறகடித்துப் பறந்து விளையாடு கின்றன.

உணர்வு தலைப்பட்டமையால் வீறு கொண்டு குயில் உச்சத்தாயியில் கூவுகிறது.

“வேடிக்கையான மனக்கோள்! விநோதமான நோக்கு. உயிர்ப்பும், உணர்வும் தந்து, இயக்கமுஞ் செயலுமாக்கிய அவன் அமங்கலச் சின்ன மென்றால்... வளமும் வனப்பும் ஈந்து, நிலையும் நெறியும் நாட்டி, பீடும் பெருமை யுமளித்த அவன் அமங்கலச் சின்ன மென்றால்... நிச்சயமாக இது குருட்டு மனக்கோள்; குருட்டு நோக்கு!''

ஆந்தை சூழலனைத்தையும உருட்டி விழித்து நோக்கு கிறது. ‘உம்... ம்; உலகம் மிகமிக இருண்டுதான் போய் விட்டது’ என்று உறுமுகிறது. அடுத்த கணம் பறந்து சென்று அந்த ஆலமரப் பொந்தில் ஒளித்துக் கொள்கிறது.



## வெறுங் கோயில்



கனவுமின்றி நனவுமின்றி, இரண்டும் கலந்து குமைந்த நிலையில், மனத்தில் விழுந்த ஓர் ஒளிக்கீறல், கருவாய் வளர்ந்து ஜனித்த போது—

முழுமதி ரோகினியை அணைத்தவாறு, உச்சிவானில் நின்று சிரித்தான். அந்த வேளை யில் அவனது கொள்ளையழகிலே தன்னை மறந்து களிக்கத் தெரியாமல் உலகம் குருடாய்க் கிடந்தது. அதற்கு இருட்போர்வை போர்த்து, நித்திரைத் தொட்டிலிற் கிடந்து நெளியத்தான் தெரிந்தது! ஆனால், அவனோ விருப்பு வெறுப்பற்ற முனித்துவ நிலையில், பாலையையும், சோலையையும், சுத்தத்தை யும், அசுத்தத்தையும் தழுவித் தூய்மை செய்து, அன்பைப் போல மன நெகிழ்வையும் புரியாததொரு குளிர்மையையும் சிந்திப் பவனி வந்தான். மேகக் குழந்தைகள் ஒன்றை யொன்று துரத்திப் பிடிக்க ஓடும்போது, தன்னில்பட்டு வழுக்கி விழுகையில் அவன் ஸ்பரிச சுகம் பெற்று, அவ்வனுபவத்தை ஒரு கணம் கண்மூடி மௌனமாகச் சுகிப்பான்; அடுத்த கணம் பழையபடி சிரிப்பான். அந்தச் சிரிப்பிலே அழகு மலர்ந்தது; கலை பிறந்தது.

அந்த வேளையில் தலையூர் முருகன் அர்த்தசாமப் பூசையைக் கண்டு கொண்டு, வானவீதியில் உலாவிவரப் புறப்பட்டான். அவன் அழகன், அழகே அவன். மனித அளவுகோலான முக்காலத்தை அறியாத

அவனுக்கு நேரமும் போதும் ஏது? காலத்தை மறந்த கலாரசிகன் அவன்; அவனைக் கண்டதும் மேகம் பன்னீர் தெளித்தது; தென்றல் தவழ்ந்து கொஞ்சிச் சுகமளித்தது; வானில் நிறைந்த நாத வெள்ளம் சுதி கூட்டியது. தானே வானமும் பூமியுமாய் தனக்கென எதுவுமே இல்லாத சூனிய நிலையில் அவன் உலாவி வந்தான்.

"யார் முருகனா?" எதிர்பாராத அக்குரலினால் அவன் தன்னை உணர்ந்து உற்றுப் பார்த்தான்.

"அப்பா, நீங்களா?"

"ஆமாம். நானேதான்" என்றார் பரமர்.

பரமர் தலையூருக்குக் கிழக்கே வெகுதூரத்தில் நாகரிக வாடையில் மெலியாத ஒரு சிறு கிராமத்துச் சிறு வீட்டில் வாழ்ந்து வந்தார். அவர் பட்டும் படாமலும் நாகரிகமாக நீறு பூசத் தெரியாமல், உடலெங்கும் சாம்பர் பூசி, கந்தை ஆடை ஒன்றுடன் காட்சி தந்தார். அவரது சித்தப் போக்கைத் தத்தம் மனங்களைக் கொண்டு அளந்து, அந்த அளவு கோலால் அவரைப் பைத்திய மென்று முடிவு கட்டி விட்டனர் அவ்வூரவர். என்றாலும், அவ்வூரவரின் அன்பொன்றே அவருக்கு ஆதரவு.

"என்னப்பா, தங்களைக் காணவே முடிவதில்லை; இன்றுதான் அபூர்வமாக வெளியில்...." முருகன் தன் பேச்சை முடிக்கவில்லை.

"என்ன, என்ன; என்னைக் காணமுடிவதில்லையா?" –பரமர் கேட்டார், ஒரு நமுட்டுச் சிரிப்புடன். பின்பு, பக்கத்திற் கிடந்த பெரியதொரு நட்சத்திரக் கல்லில் அமர்ந்து, "ஆமாம், மண்ணிலே திரியாமல் விண்ணிலே திரிய, உன்னைப் போல நான் என்ன செல்லப் பிள்ளையா?" என்று கேட்டார்.

"என்னப்பா, அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"ஏதோ மனமும் வாயும் ஒற்றுமைப்படாமையால் இப்படி ஒரு பேச்சு வந்தது. எல்லாம் இட விசேஷம்." - புன்முறுவல் தவழக் கூறினார் பரமர். பேச்சு நின்றது; நீண்ட மௌனம் நிலவியது. இருவரும் பிரபஞ்சத்தில் எதனையோ தேடியலை வது போலிருந்தது அந்த மௌனம்.

"அப்பா" முருகனின் குரல் மௌனத்தைப் பிளந்தது.

"என்ன?"

"நீங்கள் மண்ணில்தானே திரிகிறீர்கள்? அப்படியானால், ஏன் தலையூருக்கு வரவில்லை?"

"கேட்பாயென்று தெரியும். எப்போது வரவேண்டும்?"

"சித்திரை பதினைந்தில் எனக்கு உற்சவம் நிகழும்போது."

"காலத்தைக் கூறு போட்டுக் காட்டுகிறாயே, வருகிறேன்."

ஒருநாள் பரமரது சித்தப் போக்கில், தம் மகனது அழைப்புத் தட்டுப்பட்டது. வாழாமல் வாழ்ந்து, அநுபவியாமல் அநுபவித்து, சிற்றூரான தோப்பூரிற் கிடந்த அவரது செயலின்மையில் ஒரு செயல் பிறந்தது. உடனே தலையூரை நோக்கிப் புறப்பட்டார். அவருக்கு இந்த வேகம் எப்படித்தான் சித்தித்ததோ? கால காலமாய் பிரபஞ்சத்துள் நிறைந்தும் மறைந்தும் அநுபவித்த அநுபவத் துடிப்பில் பிறந்ததோ இந்த வேகம்! தூரமும் நேரமும் தெரியாத நிலையில் தமது மகனது வீட்டு வாயிலை யடைந்தார். பட்டணத்து மகனிடம் போகும்போது தன்னால் சிறிதாவது கோலஞ்செய்ய வேண்டுமென்ற நினைப்பின்றி, பழைய பட்டிக்காட்டுப் பரமராக, தன் சுவகோலத்தோடேயே சென்றார்.

பரமரை, அவர் கனவிலும் கண்டறியாத பேரதிசயக் கொள்ளை வரவேற்றது.

எதிரே முருகனது பரந்த மாளிகையும் வானுயர்ந்த கோபுரங்களும் பரமரை மருட்டின. அவை ஒளி வெள்ளத் திற் குளித்து, பல வண்ணம் பூசி மயக்கும் மோகினிகளாகத் தோன்றின. அலையெறியும் சன சமுத்திரத்தின் மேல் தம் மகனது கோவில் ஆடியசைவது போலத் தெரிந்தது. வைத்த கண் வாங்காமல் அவைகளைப் பார்த்துக் கொண்டு திரு வீதியையடைந்த அவர், சனசமுத்திரத்தில் ஒரு துளியானார். புதுமையில் முளைத்த விடுப்பினால் அவரது கண்ணும் மனமும் கூர்மை அடைந்து அங்குமிங்கும் நோக்கின. அங்கே பல பல காட்சிகள் அரங்கேறின.

கோயிலின் தெற்குத் திரு வீதியில் சனக்கூட்டம் பிழிந்தது. கூட்டம் கூட்டமாகப் பருவப் பெண்களும் இளங்காளைகளும் இடதுசாரி வலதுசாரியாகச் சுற்றித் திரிந்து தோளோடு தோளுற முட்டி மோதிப் பரிச சுகம் கண்டனர். நாற்குணமும் கழன்றோடிய நிலையில் சென்ற மங்கையரின் கண்வீச்சிலும் புன்முறுவலிலும் தம்மைப் பறிகொடுத்து வாலிப வீரர் சென்றனர். குறும்பும் கேலியும் 'புதிர்'ப்பேச்சும் அவர்கள் செயலிலும் சொல்லிலும் தெறிக்க, அதன் விளைவான சிரிப்பொலியும் நையாண்டியும் எங்கும் பரந்தன. நின்ற இடமும் வந்த நோக்கமும் எல்லாம் மறந்து அவர்கள் மத்தியில் போர்க்கள ஆரவாரமே மிஞ்சியது. அந்தப் போர், மன்மதப் போர்.

பரமர் அர்த்த புஷ்டியோடு சிரித்துவிட்டு எங்கோ கண்ணைப் பதித்தார். அவர் வாய் 'பொலிஸ் நிலையம்' என்று உச்சரித்தது. அடுத்த கணம், 'யாரைக் காக்க? யாரிடமிருந்து?' என்று வினாக்கள் அவர் மனத்தில் மின்னின. 'இங்கும் ஏமாற்றும் களவும் உண்டோ? ஒழுங்கீனமும் தறுகுறும்பும் உண்டோ?' என்று தான் கேட்ட வினாவுக்கு, வினாவாகவே விடையும் வர, அப்பால் நகர்ந்து கடை வீதியைக் கண்டார்.

அங்கு வியாபாரம் நடந்தது.

இத்தருணமும் இவ்விடமும் தவறினால் எப்போதும் எங்கும் கொள்ளமுடியாது என்ற பரபரப்பில் வியாபாரம் நடந்தது. எல்லாப் பொருளும் அவருக்குப் புதுமையாகவே பட்டன. குயத்தொழிலிலும் பரிச்சய முள்ள பரமர் தனக்குப் பிடித்த மட்பாண்டம் உண்டோ எனப் பார்த்தார். அங்கே வேறேதேதோ பண்டங்கள்தாம் கிடந்தன.

பரமர் மேற்கு வீதி வழியாக நடந்து வடக்கு வீதியில் உலாவினார். பல சிறு கும்பல்களில் ஒன்றைப் பதம் பார்க்க விரும்பிக் காதைக் கூர்மையாக்கிக் கவனித்தார். 'வழக்கு' 'தவணை' என்று பதப்பிரயோகங்கள் காதில் விழுந்தன. வழக்காடிப் பழக்கமுள்ள பரமர் சிறிது நின்றார். "இந்தக் கொலைக் கேசிலும் அண்ணை தப்பவேணு மென்றால், உள்ளதெல்லாம் விற்று பெரிய அப்புக்காத்து வைக்க வேணும். தப்பினால் முருகருக்குப் பிரதட்டைச் காவடி"

என்று கொலைபுரிந்த அன்பணனின் அருமைத் தம்பி திட்டம் போட்டான். பரமருக்கு அந்த வழக்கும் நீதியும் விளங்க வில்லை. வெகு விரைவாகத் தம் மகனின் உட்கோவிலுக்குச் சென்றார். கண்ணைக் கூர்மையாக்கிக் கவனித்தார்.

அங்கும் அவர் எதிர்பார்த்து வந்த 'அது' இல்லை. அந்த 'அது' இல்லாத இடம் அவருக்கு அனலாய்த் தகித்தது. கணப்போதும் அங்கு நிற்கமுடியாதவராய் தன்னூருக்குச் செல்லப் புறப்பட்டார்.

"என்னப்பா, வந்தகையோடு திரும்பி விட்டீர்களே" என்றான், அப்போதுதான் அங்கே வந்த முருகன்.

"ஆமாம்; எனக்கு இது சரிப்படவில்லை; நான் போகிறேன்."

"என்னப்பா..."

"ஏனோ? ... ... சரி, திருவெம்பாவைக்கு என்னிடம் வா." - பரமர் சென்று விட்டார்.

மார்கழி மாதத்தில், மதிநிறைந்த நன்னாளாகத் திருவெம்பாவை வந்தது. முருகன் திருவெம்பாவை என்றதும் தன் தந்தையை நினைத்தான். அவனது நினைவுக்கும் செயலுக்கும் இடை வேளி தோன்றாமையால், அவன் அக்கணமே தோப்பூரையடைந்தான். தோப்பூர்க் காட்சிகள் இரசிகனான அவனுக்கு அமுததாரையாகப் பாய்ந்து நெஞ்சை இனிக்கச் செய்தன.

நிலமும் நீரும் வானும் பிணைந்த பிணைப்பிலே மலர்ந்த இயற்கையின் சிரிப்பு முருகனின் முன் விரிந்து கிடந்தது. அருளும் அறிவும் அடக்கமும் கொண்ட உயர்ந்த உள்ளத்தைப் போல, குளங்கள் தெளிந்த நீர் நிறைந்து காலைப் புத்தொளி யில் பளபளத்தன. நீரின் மேலே பசிய இலைக் காட்டின் மத்தியிலே செங்கமலங்கள் ஒளிக்கரங்கள் நீண்டப்பட்டு முறுவலித்தன. அக் குளத்தைச் சுற்றி அலை தவழும் பசுங் கடல் வயல்வெளி, பசும் பயிர்கள் உழவர்கள் தவப் பயன் போலச் சூல் கொண்டு, நிறைமாதக் கருப்பிணிகளைப் போல மதர்த்து ஆடியசைந்தன. அவ்வயல் வெளியின் எல்லையாக, மாரிமழையில் நீராடி மஞ்சள் வெயில் குளித்து, புத்திளமைப்

பொலிவோடு விளங்கின, தென்னந் தோப்புகள்! ஒவ்வொரு தென்னையும் ஒவ்வொரு நர்த்தகியாக மாறி, வாடை தீண்ட ஒல்கியும் நுடங்கியும் சலசல சத்தத்தாடு நாட்டியம் பயின்றன. எளிமையும் தூய்மையும் நிறைந்த இயற்கையன்னையின் திரு முன்னர் முருகன் ஊமையானான். அவனுள்ளம் உருகிக் கரைந்து, இல்லையாகி அழகோடு கலக்க, அவ்வழகிலே அவன் தன்னைக் கண்டான்.

இந்த இயற்கைச் சூழலின் மடியிலே, கால வரம்பைக் கடந்து நிலைத்து நின்றது, பெரிய ஒரு ஆலமரம். அதன்கீழ், ஸ்தூபி அமைக்கப்பட்ட மூலத்தானத்தோடு கூடிய ஓலைக் கொட்டில் ஒன்று, கோயில் என்ற முத்திரை பொறிக்கப்பட்டு விளங்கியது. அதுவே பரமரது குடியிருப்பு. முருகன் தன் தந்தையின் குடிலையடைந்தபோது, அங்கு தூய்மையும் எளிமையும் அமைதியும் நிரம்பி, தெய்வக் களை பொலிந்தது; எவ்வித ஆரவாரமும் அலங்காரமும் இல்லை. அது முருகன் கண்டறியாத புது அநுபவம். அவன் அக்குடிலின் வாயிலை யடைந்து எட்டிப் பார்த்தபோது ஆணும் பெண்ணுமாகப் பலர் இருந்தனர்; சித்திரப் பாவையின் அத்தகவடங்கி இருந்தனர்.

அப்போது ஒரு குரல் 'கணீர்' என ஒலிக்கிறது.

"தார்மேல் நின்றிலங்கு புயவழுதி மேலும்
தன்மனைமங் கையர்மேலும் அமைச்சர் மேலும்
ஆர்மேலும் சென்றுபொரும் சேனை மேலும்
அயன்மேலும் மால்மேலும் அறவோர் மேலும்

"தேர் மேல் வெம்பகல்மேலும் மதியின் மேலும்
சிறந்துள இந்திரன்மேலும் தேவர் மேலும்
பார்மேலும் கடல்மேலும் மரங்கள் மேலும்
பட்ட அரன் மெய்யிலடி பட்டபோதே"

உள்ளத்தைத் தொட்டு உன்னத உணர்ச்சியை மீட்டிய அப்பாட்டும் இசையும் எங்கெங்கும் பரந்து எவ்வெவற்றிற்கும் உயிரீந்தது. அப்பாட்டு முடிந்தபின்னர், அதேகுரல், "அரன்மெய்யி லடிபட்டபோது" என்று

மீண்டும் ஒலிக்கிறது. அப்போது வேறொரு குரல் அதற்குப் பொருள் விரிக்கிறது. வந்தியின் அன்புக்கு அடிமையாய், எளியனாய், கூலியாளாய் மண் சுமந்து அடிபட்ட பரமரின் கதை அங்கே பேசப்படுகிறது. அப்போது பாடுகிறவர் அழுகிறார்; கேட்டுக் கொண்டிருக்கும் மக்கள் உருகி உருகி எங்கோ லயித்துப்போய் அழுகிறார்கள். ஏன் சராசரமே அழுகிறது. அதனைப் பார்த்த முருகனும் அழுகிறான்; தன்னை மறந்து, தேம்பித் தேம்பி அழுகிறான்; அப்பொழுது முருகனின் காதிலே, 'எனக்கு இது சரிப்படவில்லை; நான் போகிறேன்' என்று பரமர் அன்று சொன்ன சொற்கள் ஒலிக்கின்றன, மிகுந்த அர்த்த பாவத்தோடு.

முருகனுக்கு எல்லாம் விளங்கின.

அடுத்த ஆண்டு சித்திரை மாதத்தில் முருகனுக்குப் பெருவிழா எடுத்தார்கள். சென்ற வருடத்தை விடச் சிறப்பான முறையில் வெகு கோலாகலத்தோடு நடைபெறுகிறது, பழைய பாடம் புதுமுறையில் கையாளப்படுவதுபோல!

அங்கே கூட்டம் நெரிகிறது; பொலீஸ் பாதுகாக்கிறது. கடைவீதி மயக்குகிறது; வடக்குவீதிக் கும்பல் பழங்கதை பேசுகிறது. ஆனால்-

எங்குமே எதிர்பார்த்த 'அது' இல்லை. அதனால் முருகனும் அங்கே இல்லை. அவன் அழகைத்தேடி, எளிமையைத் தேடி, இரண்டும் கலந்த கலையைத் தேடி, எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்த உள்ளங்களைத் தேடிப் புறப்பட்டு விட்டான்.

வெறுங் கோயிலில் கதம்பவிழா நடை பெறுகிறது.

●●●





பண்டிதமணி வழி யாழ்ப்பாண மண்ணிலே விளைந்த செழுமைத் தமிழைப் படைப்பிலக்கியத்திலே புகுத்திய மூலவர். பண்டித வர்க்கத்தினரைப் படைப்பிலக்கியவாதிகளாக அங்கீகாரம் பெறச் செய்த முன்னோடி. மூதறிஞர் இராஜாஜி மெச்சிப் புகழ்ந்த உருவகக் கதைக் கலையின் பிதாமகர்...

- எஸ்.பொ.